ஓம்
தத்சத்
பரப்ரஹ்மணேநம:

# அறிவுநிலை விளக்கம்.



19 JUL 1934
MADRAS

ஸ்ரீமத்
தே. அ. சாமி குப்புசாமி அவர்களால்
இயற்றப்பட்டது.

---

முதல் பதிப்பு.
**1933.**

*Registered Copy Right.*

விலை அணா 4.
தபால் சார்ச்சுப் பிரத்தியேகம்,



ஓம்
தத்சத்
பரப்ரஹ்மணே நமஃ.

# அறிவு நிலை விளக்கம்

இது
திருத்துருத்தி-இந்திரபீடம்
ஸ்ரீ. கரபாத்திர சுவாமிக ளாதீனத்தின் வழிவந்த
ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் திருவடித்தொண்டரும்
39 - ஆவது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்தவருமாகிய
ஆத்மஞானி
**ஸ்ரீ. ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின்**
பாதசேகரர்
**ஸ்ரீமத். தே. அ சாமி குப்புசாமி அவர்களால்**
அருளிச்செய்யப்பட்டு,

ஆசிரியர்
**ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்களால்**
பார்வையிடப்பட்டு,
இந்நூலாசிரியரின் திருவடித்தொண்டர்களுள் ஒருவராகிய
புராணிகர்
**காளத்தி. இ. சிதம்பரசாமி பாண்டியரால்**
சென்னைச்
சுந்தாம் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

1934. [அணா 4.

OFFICE OF THE REGISTRAR
19 JUL 1934
MADRAS
O2:417
N34.
171741


NORTON & Co

ஓம்
தத்சத்
பரப்ரஹ்மணே நமஃ.

தேன்பட்டினம்.
ஸ்ரீமத். மீனாட்சிசுந்தரனார் M. A; B. L; Dip. Ec; வித்துவான்
சென்னை ஜில்லாக் கல்விச்சபை அங்கத்தினர்
அவர்கள் எழுதிய

# முகவுரை.

திருத்துருத்தி-இந்திரபீடம்-ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீனத்தின் வழிவந்த ஸ்ரீ. ஆத்மஞானி-ஐயாக்கண்ணு தேசிக மூர்த்திகளின் திருவடித்தொண்டர்களுள் ஒருவராகிய ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி என்னும் பெரியார் (அறிவு நிலை விளக்கம்) என்னும் இந்நூலை எழுதி உலகிற் குதவியுள்ளார்; அதற்குப் பாயிரம் எழுதும் பெரும்பேற்றை அடியேனுக்கு அப்பெருவள்ளலார் வழங்கியுள்ளார். அவரை இத்தமிழுலகம் நன்கு அறியும். குருஸ்தவம், போத விளக்கம், சொரூபாநந்த விளக்கம், அநுபவாநந்த விளக்கம், சாமி விளக்கம், திருவள்ளுவர் தோத்திர விளக்கம், கற்பு விளக்கம், அன்னதான விளக்கம், கருணை விளக்கம், நன்மதிதீபம், விபூதி விளக்கம், ஞான சார விளக்கம், துறவு நிலை விளக்கம், இல்லறவொழுக்க விளக்கம் என்னும் நூல்கள் வாயிலாகத் தாங்கண்டுணர்ந்து துய்த்த பேரின்ப வெள்ளச் சாற்றைக் கன்னற்கட்டியினும் மிகமிகத் தித்திக்கும் வெண்பாக்களாகத் திரட்டிப் பெருவிருந்தளித்து நமதுள்ளத்தைக் கொள்ளைகொண்ட இவரைப்பற்றி யான் என்ன கூறுவது?

"புலவர்க்கு வெண்பாப் புலி" என்பது புலவர் வழக்கு. வெண்பாவைப் பல கட்டுத் திட்டங்களுக்கு அடங்கிப் பாடவேண்டியிருப்பதால், இவ்வாறு கூறிவருகின்றனர் புலவர். நூல் பலவற்றை வெண்பாவிலேயே பாடிவந்த பழக்கத்தால் ஆற்றொழுக்கா இந்நூலை இப்பெரியார் பாடியுள்ளார். வேதாந்தக் கொள்கைகளைத் தெளிவாக இந்நூல் விளக்கிக் கூறுகின்றது.

"நால்வர்நூ னுன்மறைநூ னூலா யிரநூலும்
மால்வீட்டுங் கைவல்ய மாநூலும்—கோல்வேல்போல்
பாய்ந்து பவமறுக்கும் பாழ்வா சனைநீக்கும்
தேய்ந்துமன மாளச் செயும்."

என்று தேவாரத்தையும் நாலாயிரப் பிரபந்தத்தையும் வேதாந்த நூல்கள் எனக் கொண்டாடி அவற்றின் பெருமையை,

"வேதாந்த நூலே விகற்ப மெலாமாய்க்கும்
வேதாந்த நூலல்லா வேறுநூல்—நாதாந்த
நன்னிலையைக் காட்டாது நாட்டும்பல் சங்கற்பம்
இன்னலைச் செய்யு மிழுத்து."

என்று பெருமுழக்கமிட்டு வெளியிடுகின்றார். மற்றைய நூல்களோ அத்தகையன அல்ல என்று காட்ட,

"கற்கு முலகநூல் காத லழிக்காது
பற்றனைத்துஞ் சேர்க்கும் பயங்காட்டும்—செற்றம்
கட்லளவாக் காண்பிக்குங் கன்றுதுய ரெல்லாம்
அடலுறவே யாக்கு மலைத்து."

என முடிக்கின்றார். வேதாந்த நூல்களைக் கற்றலை ஒருவகையான கல்வியாகவும் மற்றைய நூல்களை ஓதுதலை வேறொருவகையான கல்வியாகவும் வேறுபாடுசெய்து,

"வித்தை யிரண்டாகு மேதினியி லவ்விரண்டில்
சத்துணர்த்தா வித்தை சடவித்தை—சித்துணர்த்தும்
ஞானவித்தை சித்துவித்தை நன்மாணு வீதுணர்ந்தால்
ஊனமிலா வின்படைவா யுற்று."

எனப் பெயரிட்டு,

"விஞ்ஞான வித்தைகற்கின் வேதனையெ லாநீங்கும்
அஞ்ஞான வித்தைகற்கி லாபத்தாம்—சுஞ்ஞான
வித்தையொன்றே வித்தையதாம் வேறாய வித்தையெலாம்
பித்தவித்தை யாமென்றே பேசு."

என அவற்றின் பயனையுங்கூறி வழி காட்டுகின்றார். மேலே கல்விதான் யாது? நீட்டி நீட்டிப் பேசுவதோ? நின்ற நிலையில் நிற்பதோ? என ஆராயத்தொடங்கி,

"கவிபாடு நற்றிறமுங் காவியமுங் கற்றுக்
குவிமனத்தார் போற்சபையிற் கூவி—அவிதேன்
கலந்துபெய் தாற்போற் கலகலெனப் பேசி
அலமருவார் செய்யா ரறம்."

என இடித்துரைக்கின்றார். இந்த நூல்களை யாரிடங் கற்பது என்னும் வினாவை எழுப்பின், அதற்கு விடையாக,

"கோலஞ் சிறந்து குணஞ்சிறந்து கோதற்ற
சீலஞ் சிறந்தவனே தேசிகனும்—ஞாலத்தில்
உண்டிச் சுவைக்கு முபசாரப் போற்றலுக்கும்
அண்டிப்போ திப்பர்குரு வன்று."

"பொக்கமுள போலிகுரு போதிக்கு மாவாக்யம்
தக்கவாக் காகாது சாத்திரரா—பக்குவர்கள்
செல்லா ரவன்பால் சிவஞான மில்லையெனக்
கல்லார்க் கவன்குருவாங் காண்."

என அறுதியிட் டுரைக்கின்றார். அத்தகைய பெரியாரிடத்தே கற்கப் புகுவாரைப்பற்றி ஆராய்ச்சி செய்து அவர்களைப் பல இனமாகப் பிரித்து அவர்களது இயல்புகளைச் சுருக்கி,

"மந்ததரர் மந்தரொடு வாய்ப்பவரு தீவிரர்மெய்ச்
செந்தீ விரதரராய்ச் செப்பவே—வந்தமைந்த
மாணவர்க ளுனிலையர் மற்றவர்தந் தன்மைகளை
மாணமையச் சொல்வேன் வகுத்து."

"மந்ததர சீடர் மயலற்ற வாரியனைப்
பந்தநர னென்றே பகர்ந்திடுவார்—நிந்தையுரை
ஆடி மகிழ்ந்திடுவா ரான்மநிலை கண்டுணரார்
வாடியழு வார்நரகில் வாய்ந்து."

"அதமகுண மந்த ரசுத்தவுண வுண்பார்
விதம்விதமா வுண்டுடுத்தி வீவார்—சதமா
உலகுடம்பைக் காண்பா ரொருபற்றும் போக்கார்
கலகமனச் சேட்டையருர் காண்."

"காதலியை யெஞ்ஞான்றுங் காதலிக்குங் காமியைப்போல்
காதலற்ற வாரியனைக் காதலிப்பார்—கோதகலச்
சற்றுஞ்சோ ராமற் றனையறிய நிட்டைசெய்வார்
செற்றமறு தீவிரர்க டேர்ந்து."

"எந்தவிடத் துற்றிடினு மேதமிலாச் சற்குரவன்
அந்தவிடத் தேசென் றடிபணிவார்—பந்தநிலை
வந்தவழி கேட்டு மகிழறிவ தாய்கிற்பார்
நிந்தையிலாத் தீவிரர்க ணோர்ந்து."

"மனவழிபோ கார்காணி மாதர்பொன் பற்ருர்
கனவறிவே யாகிக் களிப்பார்—மனமாரச்
சிந்திப்பார் தேசிகனுர் செப்பியமா வாக்கியத்தை
அந்தமிகு தீவிரத ரர்."

என ஒப்புமை நயஞ்சிறக்கப் பாக்களைப் பாடி அப்பாக்களில் உன்னு தொறும் உன்னுதொறும் கல்லினைநிகர்த்த கடின நெஞ்சும் உலைவாய் வைத்த மெழுகைப்போல் உருகும்படி பொன்போன்ற பொருள்களை அமைத்த திறல் போற்றத்தக்கதேயாம்.

வேதாந்திகளைப் பலரும் கேட்பதொரு கேள்வியை உள்ளத்தே வைத்து மேலே அதை விளக்கும் வாயிலாகச் சில பாடல்கள் பாடுகின்ருர்; அப்பாடல்களில், நிட்டைகூடும் நெறியையும், நிட்டைகூடிய விடத்துண்டாம் சுழுத்தியிருளையும், அச்சுழுத்தியிருளைக் கடக்கும் உபாயத்தையும், கடந்த விடத்துண்டாம் ஆன்மாநுபவத்தையும் அமைத்துக் குரு சிஷ்ய சம்வாத முறையில்,

"நிற்கநிற்கத் தூக்கவிரு ணீங்கா தெழுந்தெழுந்து
மற்சமர்செய் துர்ச்சனர்போல் வாட்டுகின்ற—தற்பனியான்
என்செய்வே னென்றிரங்கி யேங்குகின்ற மாணவனுக்
குன்னிப் புகல்வா னுளவு."

"தோன்று மிருளச் சுகமெனநீ பாராமல்
ஊன்றியிரு ளெங்கே யுதிப்பதெனச்—சான்ருே
இருந்துநீ பார்க்கி லிருளழியும் யானும்
இருந்தவணஞ் சொற்றிட்டே னிங்கு."

"இருள்வேருக் காண்பவனு ரென்றுன்னி யாய்ந்தால்
தெருள்வடிவ மங்கே திகழும்—இருள்வடிவைக்
காணுநான் மெய்யிருள் கற்பனையென் ருேர்வாயேல்
காணுமிருட் காணுமோ காண்."

"எங்கிருந் தந்த விருளெழு கின்றதென்று
பங்கமற வுன்னியுன்னிப் பார்த்துப்பார்த்—தங்கறிவா
நிற்கநிற்கப் பானுமுனே நின்றவிருள் போலழியும்
ஒற்கவஞ் ஞானவிரு ளோர்."

எனத் தெளிவுறுத்துகின்ருர். தானறிவாநந்தமாகிய சுவாநுபவத்திற்கு எதிரியாய் நிற்கும் மனத்தைப் பழிக்கப் புகுந்து,

"சூர னியானென்னுஞ் சுத்தமுத்தன் யானென்னும்
மார னியானென்னு மன்னனெனும்—தீரர்
எனைப்போல்வா ரிவ்வுலகி லெங்குமிலை யென்னும்
சினைத்துவளர் நெஞ்சந் திகைத்து."

என்று நம்மை அம்மனம் ஆட்டிவைக்கும் படிகளையெல்லாம் பரக்கக் கூறுகின்றார்.

இம்மனம் அடங்குவது எப்படி? நால்வரைப் பார்! நான்கு பேர் சென்றவழியில் நீயும் செல் என வழிவிடுகின்றார்.

"நால்வரை யீச்சுரனு ஞான வுபாசனையில்
மால்வளர்க்கு நெஞ்சழிக்க மன்னவைத்தான்—மால்போக்
குபாசனையே நெஞ்சலைவை யோட்டற் குரிய
உபாய மெனநீ யுணர்."

மனமடங்கியபோது வரும் பேரின்பத்தைத் தாந்துய்த் துணர்ந்ததனை

"பல்லூழிக் காலமனப் பாசமறப் பாடுபட்டுக்
கல்லைப்பொன் னுக்குவபோற் காசடர்ந்த—பொல்லா
மனத்தைச் சிவமயமா மன்னிடவே செய்துள்
உனற்கரிய வின்பானே னோர்ந்து."

"சர்க்கரைதேன் முக்கனிச் சாறுடுபா லென்னுதும்
தர்க்கமிட னீங்கிச் சகமறந்து—சொர்க்க
நரக மறந்தறிவா நண்ணினு லுண்டாம்
நிரதிசய வின்ப நிலைக்கு."

எனப்பாட்டி லமைத்துப்பாடிக் களிக்கின்றார். இவ்வறிவு நிலையே உண்மை யழகாவது: இதனைவற்புறுத்தி,

"உடம்பு தனக்கழகிங் கொண்மணிப்பூ ணல்ல
திடவறிவா நிற்றலிது தேர்வாய்—விடம்புரையும்
யாக்கைதனி லாசை யணுவளவுங் கொள்ளாயேல்
தேக்கறிவா நிற்பாய் தெளிந்து."

என விரித்துரைக்கின்றார்; இவ்வறிவு நிலையை மறந்து உடலின் மேலும் பிறவற்றின்மேலும் அன்பு பாராட்டி அல்லலுறுவாரை நோக்கி,

"ஒப்பாரி பெண்டென்ன லொப்பாரி சுற்றமெனல்
ஒப்பாரி யெப்பொருளு மோட்டையுடற்—கொப்பாரிப்
பேரிட் டழைப்போம் பிணமென்போ மாண்டபின்பு
பேரிவ்வுடற் கோவுயிர்க்கோ பேசு."

என வினவி அவர்களுக்கு வாய்ப்பூட்டிட்டு அவரை நல்வழியில் திருப்புகின்றார். மனிதராய்ப்பிறந்தவர்கள் ஞான நிலையை எளிதில் பெறலாம்; ஆதலின், விரைவென்ன என்று வாய்ப்பறை யறைவாரைக் குறித்து,

" மரணப் பெருநோயாம் வாதை வருமுன்
கரணப் புலச்சேட்டைக் காய்ந்து—புரணப்
பொருளா மறிவாய்ப் பொருந்துவா யாயின்
கருமாய்ந்து போகுங் கணி."

எனப் பாடுகின்றார். சாவது ஒருபுறமிருக்க, முதுமைவரின் ஏதேனும் செய்ய இயலுமோ? ஆதலின், இன்றே இவ்வழியிற் புகுந்து உய்யுங்கள் என்பார்,

" காலு நடுங்குங் கரநடுங்குங் கண்சுழலும்
தோலு நரம்புஞ் சுருண்டெழும்பும்—நாலுமே
கண்டபடி யாடுங் கடிய முதுமைதனில்
கண்டின்றே பாழ்ம்பிறப்பைக் காய்."

எனத் தட்டி எழுப்புகின்றார். பொன்னையும் பெண்ணையும் பிற மூணர்ச்சியோடு பார்த்துக் கெடுவாரை மனத்தகத்தே கொண்டு,

" சந்தைக்கூட் டத்தைச் சமட்டியாய்ப் பார்ப்பதுபோல்
எந்தவிடத் தெம்மா தெதிர்ப்படினும்—அந்தவிந்த
மாதரெனக் காணாது மாசமட்டி யாப்பார்க்கின்
கோதடையா துள்ளமிது கொள்."

" முன்னுக்குப் பின்முரணு மோகமொழி பேசவைக்கும்
பொன்னுறுதற் காஞ்சொல் புகலவைக்கும்—மன்னுணர்வோர்
நல்லாரைப் பொல்லாரை நாடாதொன் றாக்கவைக்கும்
பொல்லாப்பொன் னாசை புகைந்து.'

எனப் புகலுகின்றார். இவ்வாறெல்லாம் வழிகாட்டிய பெரியார் முடிவில் இந்துமதமே சிறந்ததென அதன்புகழை உரைத்துத் தமது நூலையும் இனிதே முடிக்கின்றார்; அம்முடிபு வருமாறு:—

" காலங் கடந்தமதங் கற்பகத்தை யொத்தமதம்
ஞாலமுய நாத னவின்றமதம்—சீலம்
சிறந்தபர ஞானிகளுந் தேர்ந்தமத மாகும்
திறம்பிறழா விந்துமதந் தேர்."

" இந்து மதந்தா னிறப்புப் பிறப்பின்றிச்
சந்ததமு மின்புருவாத் தங்குகின்ற—நிந்தையிலா
முத்திக்குச் சாதனமா முந்தொளிரு ஞானநிலை
வித்தகமாக் கூட்டும் விரைந்து."

இதுபோலப் பல நூல்களையும் எழுதி இப்பெரியார் உலகிற் குதவுவா ராக.

முற்றிற்று.

ஓம்
தத் சத்
பரப்ரஹ்மணேநமஃ.

# சாத்து கவிகள்.

சி. அப்துல் ஹக்கீம் நடுத்தரப் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்
(சென்னை - தண்டையார்பேட்டை)
ஸ்ரீமத். ம. மாசிலாமணி கிராமணியாரவர்களியற்றிய

## எட்டாரைச் சக்கரக்கவி.




இது: எட்டாராய், ஆர் ஒன்றுக்கு அவ்வாறெழுத்தாய், நடுவே ககரநின்று, குறட்டின்மேல் "குமரகுருபரன்" என்னுஞ் சொல் நின்று, சூட்டின்மேல் முப்பத்திரண்டெழுத்து நின்று, இடக்

குறுக்கு ஆரின் முனைநின்று தொடங்கி அதனெதிர் முனையி னிறுதியிற் சென்று முற்றி, முதல் தொடக்கத்துக்கு வலக்கீ ழாரின் முதற்றொடங்கி எதிரேறி இரண்டாமடி முற்றி, அதற்கடுத்தது அவ்வாறே யேறி மூன்றாமடி முற்றி, அதற்கடுத்தது அவ்விதமே ஏறி நான்காமடி முற்றி, முதல் தொடங்கிய ஆரின் முதலெழுத்தி லிருந்து வட்டை (சூட்டை) மேல் வலஞ்சுற்றி ஐந்தாவது ஆறாவது அடிகள் முடிந்தமை காண்க.

## நிலமண்டில வாசிரியப்பா.

திருமலி சென்னை குகருமாய்ந் துகுலவு
பெருமாள் பேட்டை மகபதிக் குயர்வுள
செல்வர் தினமர கரவெனுஞ் சுவாமியா
நற்குப் புசாமி குகன்றமி ழென்றிடத்
திருமேற் பெருக்கசெய் தனனல் லறிவு
நிலைவிளக் கமியா வருமேத் திடவே.

"திருமலி சென்னை - பெருமாள் பேட்டை - சுவாமி குப்பு சாமி - திருமேல் பெருக்க - நல்லறிவு நிலை விளக்கம் - யாவரும் ஏத்திடச் செய்தனன்" எனக் கூட்டி, இதற்குப் பொருள் கொள்க.

குறிப்புரை:—

திரு - அழகு
குகர் - இருதய குகைக்கணுட்ட முடையராய விருடிகள்.
ஆய்தல் - திரிபதார்த்த விசாரணை செய்தல்.
குகன் தமிழ் - முருகனது செந்தமிழ்.
திரு - கல்விச்செல்வம், பொருட்செல்வம், சிவஞானச்செல்வம் முதலிய செல்வம்.
"மகபதிக் குயர்வுள" என்பதில் மகபதிக்கும் உயருள என உம்மையை விரித்துக் கொள்க.

வேதாந்த சித்தாந்த சமரசரும்

வடமொழி தென்மொழி வல்லுநரும்

வேத மொழிபெயர்ப் பாசிரியருமாகிய

காசி வாசி என்னும்

திருமறைக்காட்டுச் சிவானந்த புரி

## யதீந்திர சுவாமியவர்கள் இயற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

வேதப் பொருளாம் விண்ணவர் கட்கு
நாதப் பெயர்கொ ணலந்தரு பீடக்
கதிரென விளங்கு கரபாத் திரன்றன்
மதிநிறை மரபை மண்மிசை விரித்த
உச்சிமேற் கொள்ளு மொப்பிலாக் குருவாஞ்
சச்சிதா னந்தன் றனித்தொட ரணியாங்
குப்புச் சாமி யெனுங்குணக் கடலான்
இப்புவி மாந்த ரெளிதினன் முத்தி
சித்தியு மேயச் சீர்மலி நந்தி
பத்தியில் வேண்டும் பதினா றுந்தரும்
அன்னவாய் மதியி னருங்கலை யொப்பச்
சொன்ன நூல்களின் சுவைசொலற் பாற்றோ
அக்கலை யனைத்து மடக்குடு பதியின்
மிக்கொளிர் மறைமுடி மேம்படு பொருள்கள்
நிறைந்துள வறிவு நிலைவி ளக்கம்
முறைய தெனவே மொழியுமிந் நூலை
எழுதா மறையா லெழுமுத்தி யநுபவந்
தழுவி யாசான் றாளுறு மன்பால்
எல்லா மரபு மெட்டுணை வழாது
கல்லா லின்கீழ்க் கண்ணுதல் போன்று
சொல்லாப் பொருளைச் சொல்லிக் காட்டி
வல்லார் வகுத்த வழியே செய்தனன்
இயலிசை நாடக மெண்ணிலா திசைத்தென்
அயலதை நாடி லறிவு நிலைமை
விளக்கம் வருமோ மேலோர்க் கணியோ

களக்க மறினவ் வறிவே கதியாய்
நிலைத்த பயனுய் நிகழ்தரு மின்பாய்
உலைப்படு கனலி னுறுபவ வெப்பம்
ஆறியா னந்த வார்கலி மூழ்கித்
௩0 தேறித் தானுய்த் திகழ்ந்திட லாகும்
அறிவே தெய்வ மெனவே யறைந்த
நெறியார் சொல்லை நினைமின் நினைமின்
அறிவா லறிவை யறியா தறிந்து
குறியாப் பொருளைக் கூடுமின் கூடுமின்
மாலுங் குன்றி மதிமிக வளரச்
சாலுங் குப்புச் சாமிதன் னூலே.

ஸ்ரீ ஜகத்குரு பீடம்
நியாய சந்திர வேதாந்த பாஸ்கரரும்
ஆத்மபுராண பகவத்கிதா கூடார்த்த தீபிகை முதலிய நூல்களின்
மொழிபெயர்ப் பாசிரியருமாகிய
ஸ்ரீமத். மகாமண்டலேசுர வீர சேகர
சுப்பைய ஞான தேசிகேந்திர சுவாமி யவர்களின் பாதசேகரர்
ஸ்ரீமத். வீர. சு. அனந்தா நந்தசாமி யவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நலமலி தனது சுகத்தினை விரும்பி நாடிநின் றயர்ந்திடா துய்ய
நிலவுல கதனி னிகரறு மறிவு நிலைவிளக் கப்பெயர் நூலைப்
பலகலை களைக்கற் றவர்களும் வியக்கும் படிபியற் றினன்புலப்
பகையைக், கொலவல னிவனே யெனப்படுஞ் சாமி குப்புசா மிப்
பெய ரவனே.

ஷை ஸ்ரீமத். சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமியவர்க்ளின்
பாதசேகரர்
ஸ்ரீமத். வீர. சு. பரமானந்த சுவாமியவர்க ளியற்றிய
நேரிசை வெண்பா.

ஆனு நிறைகல்வி யார்குப்பு சாமிதவன்
நானு வுடனுற்று நைவோர்க்குந்—தானுய்ச்
செறியுலக மெல்லாந் திகழுமா செய்தான்
அறிவு நிலைவிளக்கத் தால்.

ஷை ஸ்ரீமத். சுப்பையஞானதேசிகேந்திர சுவாமியவர்களின் பாதசேகரர்
ஸ்ரீமத். வீர. சு. கணேசானந்த சுவாமியவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

அலைமயக்க மெல்லா மறுப்பா னறிவு
நிலைவிளக்க நூலளித்தா னேராய்க்—கலைவிளக்கும்
பூமிதனி லுள்ள புலவரெல் லாம்புகழுஞ்
சாமிகுப்பு சாமிதவன் றான்.

---

ஷை ஸ்ரீமத். சுப்பையஞானதேசிகேந்திரசுவாமியவர்களின் பாதசேகரர்
ஸ்ரீமத். வீர. சு. பிரகாசானந்தசுவாமி யவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

காரணையா னீகையினுற் கடலணையான் கருணையினுற் கல்வி மிக்க
சூரியரிற் றலைமையுளான் சாமிகுப்பு சாமியெனுஞ் சுவான்ம நிட்டன்
பாரினுறு மானுடர்கள் பவக்கடலைக் கடந்தேறப் பனுவ லொன்றை
ஆரமுத மனவறிவு நிலைவிளக்க மெனும்பெயரா லமைத்தீந் தானல்.

---

ஷை ஸ்ரீமத். சுப்பையஞானதேசிகேந்திரசுவாமியவர்களின் பாதசேகரர்
ஸ்ரீமத். வீர. சு. சொரூபானந்த சுவாமியவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இனியவொழுக் கினியவுரை யினிபனவே யெந்நாளு மிதயந் தன்னி
லுனுமரிய பெருஞ்சென்னைச் சாமிகுப்பு சாமியெனு முவகை மிக்கோ
னனுதினமு மன்பரெலா மார்வமொடு மகமகிழ வருமைத் தாகக்
கனியுமனு பவத்துதித்த வறிவுநிலை விளக்கநூல் களித்தீந் தானே.

---

சென்னை - அகத்திய குருகுலம்
சாது நாராயண தேசிகர் மடாலயாதிபதி
உயர் திரு. சுவாமி ஞாநாநந்த மணவாள மாமுனிகள்
இயற்றிய
நேரிசை வெண்பா.

பலவிளக்கத் தாலே பகுத்தறிவை யூட்டி
நலம்விளக்க வந்தசிவ ஞானி—கலைவிளக்க
மாமிதெனப் போற்ற வறிவு நிலைவிளக்கஞ்
சாமிகுப்புச் சாமிமொழிந் தான்.

---

ஷை சுவாமிகளின் பிரதம சீடர்

## உயர் திரு. சுவாமி அருணகிரி நாதர் இயற்றிய

### நேரிசை வெண்பா.

மலைவிளக்கைப் போலுலகின் மன்ன வறிவு
நிலைவிளக்கஞ் செய்தளித்தா னேராய்ப்—பலவிளக்கந்
தண்டமிழில் விண்டதவச் சாமிகுப்பு சாமியிந்நூல்
கண்டவர்கட் குண்டுநலங் காண்.

---

## ஸ்ரீமத். ஞ. சாமிநாத சுவாமியவர்க ளியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவிளங்கு சென்னைநகர் தனிற்பெருமாள் பேட்டைதனைத்
திகழ்த்த வந்த
உருவிளங்கு சாமிகுப்பு சாமியெனு முயர்நாம
முற்ற சீலன்
கருவிலக்கு மறிவுநிலை விளக்கமெனு மொருநூலைக்
கணக்காத் தந்தான்
தெருணிறைந்த மனத்தர்சொலுந் திரமனைத்து முறையமைத்துச்
சிறக்க மாதோ.

---

திருத்துருத்தி-இந்திரபீடம்-ஸ்ரீ கரபாத்திர சுவாமிகள்
ஆதீனத்தின் வழிவந்த
ஸ்ரீ. ஈசூர். சச்சிதானந்த சுவாமிகள் பரம்பரை

## ஸ்ரீமத். புலியூர்-சிவராஜ சுவாமியவர்க ளியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமிமுத லாச்செறியும் பொருட்கெல்லா முதற்பொருளிற்
புந்தி வைத்துக்
காமியமெ லாமகற்றி நிட்காமத் தவஞ்செய்யக்
கருதுவோர்கட்
காமினிய வறிவுநிலை விளக்கமெனு நூலுரைத்தா
னவனு ரென்னிற்
சாமிகுப்புச் சாமியெனுஞ் சகசநிலை தனில்வாழுந்
தக்கோன் றானே.

---

சிதம்பரம்-மௌன சுவாமிகள் மடம்
ஸ்ரீ. செல்லப்ப ஞானதேசிக சுவாமிகளின் மாணவர்
சென்னை-சூளை-திருவொற்றியூரான் சம்ஸ்கிருத வித்தியாசாலை
ஸ்ரீமத். சுவாமி முக்தாநந்தா அவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

பிறவி நிலைதுளக்கிப் பேசருமின் பெய்த
வறிவு நிலைவிளக்க மாக்கிக்—கறையகன்று
தங்குபுகழ் பூத்தனனாற் சாமிகுப்பு சாமிநிதி
சங்குபுகழ் வண்கைநலத் தான்.

---

ஸ்ரீமத். திருவருட் பிரகாச வள்ளாலர் மரபு காஞ்சிபுரம்
ஸ்ரீமத். நிச்சல. இராமாநந்த சுவாமிக ளவர்களின்
பாதசேகரர்
ஸ்ரீமத். கா. நிச்சல. சொரூபாநந்த மணியவர்கள்
இயற்றிய

சந்த விருத்தம்.

(தானதத்தன தானதத்தன தானதத்தன தானனம்)

சீர்மிகுத்தகொடை நார்மிகுத்தகரன்
செல்வமிக்ககுண பூமகன்
ஏர்மிகுத்தவுப சாந்தமிக்கவுளன்
எங்குமோங்கிவளர் தாரகன்
பார்மிகுத்தமறை சார்ந்தநற்பொருள்
பன்னுகின்றவருள் வாயினன்
நேர்மிகுத்தபுகழ் வாய்தலுற்றநலன்
நீர்மைபெற்றநெறி வாய்தவன். (க)

வெண்பா.

சான்றவனுஞ் சாமிகுப்பு சாமியெனுஞ் சற்புருட
னான்றோர் புகழ வருமையாய்—வான்றே
யறிவு நிலைவிளக்க மாநந்த மாக
நெறியா யுரைத்தா னிலத்து. (உ)

---

சென்னை-திருவல்லிக்கேணி

## பிர்மஸ்ரீ. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்ய ரவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மாகுநூல் யாத்துச்
செறிவுமிகு மன்பாற் செகத்தோ—ரறிவுற்று
ளுய்யவே சாமிகுப்பு சாமி யுவந்தளித்தான்
மெய்யமருந் தத்துவங்கள் விண்டு.

---

சென்னை-திருவேட்டீச்சுவரன் பேட்டை-கார்பொரேஷன்
மாடல்ஸ்கூல் ஹெட்மாஸ்டரும், செய்யாறுதாலுக்கா
போதியர் பாளையம் சமரச சன்மார்க்கசங்க
அக்கிராசனருமாகிய

## பிர்மஸ்ரீ. அருட்கவி. ந. சுப்பிரமணிய ஐயரவர்க ளியற்றிய

### கட்டளைக் கலித்துறை.

சிற்கன விந்திர பீடக் கரபாத் திரக்குரவன்
நற்சச் சிதாநந்த னையாக்கண் ணென்குரு நாதரடி
யற்புற வேத்தரு ளார்ந்துநற் சாந்த மமருளத்தாற்
றற்பர மானவன் சாமிகுப் புச்சாமி தன்மயனே. (க)

### நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மாகுமொரு நூலை
யறிவு நிலைவிளங்கி யான்ம—நெறியி
லொழுகி யுலகமய லோய்ந்துலகு நிற்கப்
பழுதறவே யாத்தான் பரிந்து. (உ)

### நிலமண்டில வாசிரியப்பா.

ஆதலி னன்னு ணநந்தப் பேற்றை
மாதவஞ் செறியு மனத்தாற் பற்றி
நிலைத்து நித்தமாய் நிற்க வருள்வாய்
கலைத்துறை கடந்த கந்தப் பெரும
சங்கர தேசிக சண்முக வேலவ
மங்கல வடிவ வள்ளிநா யகனே ! (ங)

---

சென்னை - மண்ணடி

## பிர்மஸ்ரீ. எம். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களெழுதிய

# சிறப்புரை.

"அறிவுநிலை விளக்கம்" என்னும் இவ்வரியநூலைப் படிக்கப் படிக்க ஆரறிவும் ஆனந்தமும் ஊற்றெடுக்கும்.

மாநிலத்தே மானிடராய்ப்பிறந்தோர் மானிடராகவாழவேண்டின், அவர்க்கு இத்தகைய நூல்கள் பல இன்றியமையாதனவாகும்.

இரவுபகல் அறுபதுநாழிகையும் இன்னலே கொண்டு, என் செய்வோம் என்றேங்கும் மக்களுக்கு இனிய ஊன்றுகோலாகவிளங்கும் இந்நூலை எப்பாவலரும் உச்சிமீது கொண்டு, கொண்டாடுவரென்பதற்கு ஐயமின்றாம்.

வேதாந்த சித்தாந்த உண்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் செம்பாகமான வெண்பாச் செய்யுள் நடையில் எடுத்தோதும் இந்நூலின் சிறப்பை என்னென்று சொல்வது?

பலரும் படித்தறிந்து பயன்பெற வேண்டுமென்னும் பான்மையால், இந்நூல் ஆக்கப்பட்டிருத்தல் போற்றத்தக்கதாம்.

சமயச் சழக்கென்பதில்லாது சமரஸமேகொண்டு துலங்கும் இந்தநூலை யாவரும் ஆர்வமுடன் ஏற்பரென்றே எண்ணுகின்றேம்.

உய்ய விரும்பும் உலகினர்க்கு, திருத்துருத்தி - இந்திரபீடம் ஸ்ரீ. கரபாத்திரசுவாமிகளாதீனத்தின் வழிவந்த ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் சிஷ்யப்ர சிஷ்யராகிய ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமியவர்களால் இயற்றப்பட்ட இந்நூலொன்றே போதுமென்பது திண்ணம்.

இது, வேதாந்த சாஸ்திர விசாரஞ்செய்பவர்க்கு ஏற்ற துணையாயிருத்தலின், இதனை ஒவ்வொருவரும் பொன்னே போல் போற்றவேண்டும்.

---

இந்நூலாசிரியரின் சமஸ்தான சம்பிரதியாராகிய

## வளவனூர். பிர்மஸ்ரீ. சு. ஐயாசாமி ஐயரவர்கள்

## இயற்றிய

### நேரிசை வெண்பா.

ஆயபுக ழார்ந்த வறிவு நிலைவிளக்கந்
தூயமதி வெண்பாவாற் சொற்றிட்டான்—நேயமிகுந்
தற்பரன ருட்குவந்த சாமிகுப்பு சாமியெனும்
வற்பகலாச் சிந்தா மணி.

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் மாணவர்களுள் ஒருவராகிய
வேதாந்த ரத்நாகரம்

## ஸ்ரீமத். பி. ஆறுமுகமுதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அறிவுநிலை கண்டெவரு மாநந்த மாக
அறிவு நிலைவிளக்க மன்பாய்—நெறியமையச்
சாமிகுப்பு சாமியெனுஞ் சாந்த னெனதுநண்பன்
றூமிகுப்பச் சொற்றான் றுணிந்து.

---

## ஸ்ரீமத். கா. நமச்சிவாய முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

செறிவுந் தெளிவுந் திறலும் பொருந்த
அறிவு நிலைவிளக்க மாக்கிக்—குறிதந்தான்
காமியமில் லாதான் கனிந்து பிறர்க்குதவும்
சாமிகுப்பு சாமியெனுஞ் சாது.

---

சென்னை-நியாயகலாசாலை ஆசிரியராகவும், சென்னை-பச்சையப்பன்
கலாசாலைத்தத்துவநூல் ஆசிரியராகவும் இருந்த

## ஸ்ரீமத். ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பி. ஏ., எம். எல்., அட்வகேட் அவர்கள் எழுதிய

# சிறப்புரை.

---

"அறிவுநிலை விளக்கம்" என்னும் இந்தப் புண்ணிய நூலும், இதன் ஆசிரியர் அவர்களது மற்றைய நூல்கள் போல், தன்னைப் பயில்வார்க்கு உயரிய புருஷார்த்தங்களைச் சுட்டிக்காட்டும் இயல்புடையதாய் விளங்குவது கண்டு, எவரும் மகிழ்வெய்துவர் என்பதில் ஐயமில்லை. நம் அருமைத் தமிழ்நாட்டில் எவ்வளவுக்கெவ்வளவு அத்வைத வாழ்க்கை அருகியிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு விரிவாக அத்வைதப் பேச்சுக்களும் நூல்களும் மலிந்து கிடக்கின்றன. இவ்விரண்டில் எது காரணம் எது காரியம் என்னும் ஆராய்ச்சியை ஒருவன் மேற்கொள்வானாயின், அவன் தனது ஆராய்ச்சி வன்மைக்குத் தகுந்த பலனை ஒருநாள் அடைந்தே தீருவான்.

---

சென்னை-நகரபரிபாலனசபை அங்கத்தினரும்
பச்சையப்பன் தர்மபரிபாலன டிரஸ்டியும்
சென்னை-அட்வோகேட்டு மான

## ஸ்ரீமத். தி. சு. நடராஜப்பிள்ளை பி. ஏ., பி. எல்.,

அவர்கள் எழுதிய

# மதிப்புரை.

---

ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி யவர்கள் அன்புடனுலகுக் களித்த அறிவுநிலைவிளக்க நூலை ஓதிக் களித்தேன். வெறுங் கல்வியால் இன்ப நிலை யெய்துவ தியலாது எனவும், பெருஞ்செல்வம் படைத்தவரெல்லோரும் வளநிதியால் வாழ்வடைவா ரென்பதில்லை எனவும் அறிவுறுத்தவேண்டி ஆசிரியர் யாவருக்கும் எளிதில் விளங்க எழுதியுள்ள இச்சிறு நூல் போற்றத்தக்கது. பிறத்தலாலாய பயன் பொருள் தேடுவதென்றும், 'காலினும் கலத்தினும் மீட்டிய' பொருளிலார் கடையரென்றும் கருதுவர் உலகத்தவரென்றும், ஓதநீர்க் கொள்கைத்து யாம் ஓதிய நூலென இறுமாந்து, பிறமாந்தரெலாம் கசடரென வெண்ணிப் பிறரை யெள்ளி நகையாடுவார் கற்றறிந்தாரெனக் கருதப்படுபவ ராகாரென்றும், நன்மையிலும், தீமையிலும், ஏழ்மையிலும் செல்வத்திலும் ஒருசமன் கொண்ட தலையாயவர் செய்கை இன்ன தன்மைத் தென்றும் தெள்ளிதில் விளக்கும் இந்நூலை இன்பமுடன் ஓதாதவரிரார். நூலினுள் ஆங்காங்கே சொற்சுவையும், பொருட் சுவையும், ஒப்புமை நயமும், அலங்கார அழகும், நுண்ணிய கருத் தமைத்த சொற்றொடர்களும் பொதிந்திருத்தலைக்கண்டு அகமகிழ்ந்தேன். உலகத்தாருக்கு இத்துணைப் பேருதவிபுரிந்த சாமி குப்புசாமிக்கு மன்பதையர் நன்றியறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டவராவர். இச்சிறு நூல் பலராலும் வாங்கப்பட்டுப் பெரிதும் பயன்படுமென வெண்ணுகிறேன்.

---

சென்னை-உயர்தரு நீதிமன்றம் வழக்கறிஞர்

## ஸ்ரீமத். ஈ. ந. தணிகாசல முதலியார் பி. ஏ., பி. எல்.,

அவர்களியற்றிய

### கலிவிருத்தம்.

அறிவீ தெனவு மருணான் முறையி
னெறியீ தெனவு நிலையா வுடலிற்
செறியுங் கரணத் துயர்சேர் வதனைக்
குறிகாட் டிடையே குருகாட் டுவதை. (க)

விரிவா யறிவி னிலையீ தென்னத்
தெரியா வுணர்வைத் தெரிவித் தனனே
சொரிமா மழைசா மிகுப்பு சாமி
பரிவா யறிவு நிலைவிளக் கம்மே. (௨.)

---

சென்னை-சஞ்சீவிராயன் பேட்டை-தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். கொ. இராமலிங்கத்தம்பிரானவர்களியற்றிய

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தன்னிலக் கணநூல் கற்றல்செய் யாமல்
தாமென்று மந்நியங் கற்றல்
தன்னமுஞ் சாலா தெனவறி வுறுக்குஞ்
சான்றவ ருரைபொருள் பொன்போல்
மன்னுறப் போற்றிப் படர்ந்தவே தாந்த
வாழ்வருள் கொள்கையை மேற்கொண்
டின்னல்செய் பொறியோ டொன்றிய புலனை
யியங்குறு தடக்குறு மறிஞன். (௧)

பேரறி வுடையோன் சாதுசங் கத்துட்
பிறங்குமா மணியெனத் திகழ்வோன்
ஏரமை யுண்மை யடியவர்க் காணி
னிருநிதி பெற்றெனெ மகிழ்வோன்
சீரமை சாமி குப்புசா மியெனுஞ்
சீர்த்திசால் புலமைமிக் குடையோன்
நாரமை யறிவு நிலைவிளக் கமெனு
நற்றமிழ் நூலரு ளினனால். (௨)

---

## ஸ்ரீமத். A. C. பாலசுந்தர நாயகர், பி. ஏ., எல். டி.,

சென்னை-டிஸ்ட்ரிக்ட் எஜ்ஜூகேஷனல் கௌன்சில்

## அவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மதிகெடுக்கு மாயையின்சொ ரூபங்கள் பலகோடி மயங்கு மக்கள், கதிகொடுக்கு மறிவுதனை யிறைவனடி நாடாது கலக்கு மிந்நாள், நிதிகொடுக்குஞ் செயல்களையே நிலையாக வெண்ணியொழி வில்லா மாந்தர், துதிகொடுக்கும் வாழ்வெய்திப் பதிகொடுக்கு நிலையதனைத் துய்க்க வெண்ணி. (௧)

அய்யாக்க ணெனுங்குரவ னடிபணிந்து பலநூல்க ளாய்ந்த நல்லோன்,பொய்யாத புகழுடையோன் சாமிகுப்பு சாமியென்போன் போற்றிச் செய்த, மெய்யான வறிவுநிலை விளக்கமெனு நன்னூலை மேவி யோதின், பொய்யான பாசமெலாம் போயலறி விழஞானம் பொலிந்து தோன்றும். (௨)

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை-உயர்தரப்பாடசாலை
பௌதிகசாஸ்திர உதவிஆசிரியர்
ஸ்ரீமத். ம. எதிராஜ நாயகர் பி. எ., எல். டி.,
அவர்கள் எழுதிய

# மதிப்புரை.

---

I am very glad to have perused through one more of the poetical works of Sri Swami Kuppuswamiar. The book, "Arivu Nilai Vilakkam", is a long composition containing more than five hundred stanzas of the Venba type. The subject-matter of the piece, as the title suggests, is an enunciation of the basic rules of human conduct and the manner in which the subject has been dealt with leaves nothing to be desired. The poet with his usual ease at the composition of this most difficult type of Tamil metre, Venba, has sustained the interest of the reader from the beginning to the end. It is fervently hoped that the poet would bring many more works of this kind to enlighten the world around him with his matured wisdom mellowed by experience.

## ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு.

ஸ்ரீமத். சாமி குப்புசாமி அவர்களின் மற்றுமோர் செய்யுள் நூலைப் பெருமகிழ்ச்சியுடன் வாசித்துப்பார்த்தேன். இது 500-க்கு மேற்பட்ட வெண்பாக்களாலாய பெரியதோர் நூலாகும்; இந்நூல் இதன் பெயருக்கிணங்க மானுடவொழுக்கத்திற்கு அடிப்படையாக வுள்ள முறைகளை விளக்குகின்றது. இந்நூலின் பொருளுக்கு இன்றியமையாதனவெல்லாம் இதன்கண் செவ்வையாக அமைக்கப் பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியர் இதனைத் தமிழ்யாப்பில் பெரிதுங் கடினமான வெண்பாவில் தனக்குள்ள பயிற்சியினால் எளிதில் வாசிப்போர் மனதை ஆதிமுதல் அந்தம்வரையிற் கவரும்படி அழகுபெற எழுதியுள்ளார். தமது முதிர்ந்த அனுபவத்தாலாய முதறிவினால், இவ்வாசிரியர் இது போன்ற பலநூல்களை இயற்றி உலகத்திற்குப் பயன்படுமாறு அளிப்பாரெனப் பெரிதும் நம்புகிறேன்.

---

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை - உயர்தரக்கல்விக்கழகம்
தமிழ்ப்பேராசிரியர்

## ஸ்ரீமத். கா. மு. சின்னப்பா பிள்ளை அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

உலகுவரு மக்க ளுயர்கதியை யெய்த
இலகுநெறி யாவு மெடுத்து—நிலவும்
குருஸ்தவ மேமுதலாக் கூறுபதி னன்கு
பெருமையுறு நூல்செய்தான் பின்பு. (க)

அறிவு நிலைவிளக்க மா நூலு மோர்ந்தே
திறம்பொருந்தச் செய்தளித்தான் சீரார்—அறஞ்செய்யும்
தண்ணளியான் சாமிகுப்பு சாமியெனு நற்புலவன்
கண்ணியமா வாழ்க களித்து. (உ)

---

சென்னை-பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மாமுலகின் பந்தச்
செறிவு நிலைதேயச் செய்தா—னறிவுருவாஞ்
சாந்தநிலை சார்ந்தவெழிற் சாமிகுப்பு சாமியெனு
மேய்ந்தபுகழ்ச் செல்வ னினிது.

---

ஆசிரியர். ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்களின் புதல்வர்
சென்னை-உயர் தருநீதிமன்றம் வழக்கறிஞர்

## ஸ்ரீமத்.
## கோ. வ. முத்துக்குமாரசாமி செட்டியார் பி. ஏ., பி. எல்.,
## அவர்கள்எழுதிய

# மதிப்புரை.

---

It is with great pleasure that I went through "Arivunilai Vilakkam" by Mr. Swami Kuppuswami. The subject matter is easily assimilable as it is couched in lucid and simple Venbas. The book exhibits the erudition of the author in our scriptures and the fruits of his Divine contemplations. As an aid to the advancement of our Advaitic philosophy and as a guide to persons in the words of God or Self-Realisation it is bound to be of immense use.

## ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு.

திருவாளர். சாமிகுப்புசாமி யவர்களுடைய அறிவுநிலை விளக்கத்தைப் பெருமகிழ்ச்சியோடு படித்துப்பார்த்தேன். இது, தெளிவான எளிய மொழிகளமைந்த வெண்பாக்களினல் யாக்கப்பட்டிருப்பதால், இதன்கண் அமைந்துள்ள பொருள் எளிதில் மனதில் பதியத்தக்கதாகும். நம்வேதசாத்திரங்களில் ஆசிரியருக்குள்ள விற்பத்தியையும், தெய்வத்தியானங்களின் பலன்களையும் இந்நூல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. நமது அத்வைத சித்தாந்த வளர்ச்சிக்குத்துணையாகவும், ஆத்மாநுபவ வனத்தில் அல்லது கடவுட் காட்டில் வாழும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் நின்று இந்நூல் அளவற்ற பயன்களைத் திறமாகத்தரும்.

---

### ஸ்ரீமத். A. S. அண்ணுமலை முதலியார் B. A.,
### (*Assesor Madras Corporation*) அவர்களியற்றிய
### நேரிசை வெண்பா.

தத்துவநூ லாய்ந்துணர்ந்த சாமிகுப்பு சாமியென்பான்
நித்த வறிவு நிலைவிளக்கம்—புத்தமுதம்
போலவே மெய்ப்புலவர் போற்றிநிதங் கைக்கொள்ள
ஏல வளித்தா னிசைந்து.

---

### ரிடையர்ட் சப் ரேஜிஸ்டிரார். மேலவலம்.
### ஸ்ரீமத். சிவகாருண்ய முதலியார் பி. ஏ., அவர்கள்
### இயற்றிய
### நேரிசை வெண்பா.

ஈனமிலா நன்னெறியை யெவ்வெவருங் கற்கவெளி
தானநூ லேதென்று ராயுங்கால்—ஈனக்
குறியிகந்த சாமிகுப்பு சாமி குரவன்
அறிவு நிலைவிளக்க மாம். (க)

அறிவு நிலைவிளக்க மாரே னுங் கற்றூர்
அறிவு விளங்க வறிவார்—செறியும்
மலமாயைக் குள்ளாழார் மாணெறியே சேர்வார்
நிலமீதி லையமிலை நேர். (உ)

---

சென்னை - புதுவண்ணாரப்பேட்டை - வித்துவான்

## ஸ்ரீமத். வ. சே. சேஷாசல கிராமணியாரவர்கள்

## இயற்றிய

நேரிசை வெண்பா

அறிவே சிவமாநல் லன்பே சுகமாம்
அறிவு நிலைவிளக்க மஃதை—அறியப்பார்
சாற்றுமந் நூலதனைச் சாமிகுப்பு சாமிநண்பன்
சாற்றி மகிழ்ந்தான் றழைந்து.

---

சென்னை - சூளைப்பட்டாளம்

'அறப்பிரசாரகசபை' 'திருக்கழுக்குன்றம் ஸ்ரீவேகிரீச்சுரர் அன்னதானசங்கம்' ஆகிய இவ்விரண்டுசபைகளின் அதிபர்

## இயற்றமிழ் ரத்தினாகரம்

## ஸ்ரீமத். செங்கை. தங்கவேலு முதலியாரவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

வம்மின் வம்மின் வம்மி னுலகீர்
காண்மின் காண்மின் காண்மி னிந்நூல்
இந்நூற் றன்மை யியம்புவன் கேண்மோ
பல்கலைப் பொருளும் பன்னூற் றுணிபும்
ஒழுக்கமு நீதியு முபர்தத் துவமும்
சரியை கிரியை தவயோக ஞானமும்
அறிவு நூலி னலகிலாப் பயனும்
அறஞ்செய் யாதா ரடையுந் தீமையும்
நால்வகைச் சீடரி னடையுங் குருவின்
குலவுறு நெறியுங் குரவனை யிகழ்ந்தோர்
அடையு மிடுக்கணு மாரியன் றன்பால்
அன்புறு வோர்க ளடையுநற் கதியும்
பவந்தனை யறுக்கும் பலவகை நெறியும்
மனமடங் காதுசெய் மாத்தீச் செயல்களும்
அச்செய லொழிக்கு மருஞ்சா தனங்களும்
அறிவின் றிடத்தா லாம்பெரும் பயன்களும்
சிந்தையை யடக்கின் சிவமாந் தன்மையும்
நித்திய வின்ப நிலையின் மாண்பும்
பந்த மனைத்தையும் பாற்றும் வகைகளும்
ஆநந் தம்பெறற் கான முறைகளும்

துன்பம் வளர்க்குந் துறையி னினங்களும்
உடம்பின் பற்று முண்டாந் துக்கமும்
சிந்தனை விரியின் செகமுதித் திடலும்
இறப்பொடு பிறப்புமெண் ணத்தால் விளைதலும்
பெண்ணாற் பொன்னாற் பிறக்கு மின்னலும்
பொன்னு ளுறவும் புகழு முறுதலும்
உணர்வை யுணர்தலே யுடற்பய னெனலும்
அவ்வுணர் வதனா லாஞ்சுக நிலையும்
அறிவறி யாமையா லாகுமா குலமும்
கிழப்பரு வத்திலாங் கேட்டின் விரிவும்
பெண்மயக் கதனாற் பெருகுங் கவலையும்
அன்ன கவலையை யழிக்கு முறையும்
பாவத் தாலாம் பல்வகைத் துயரமும்
அத்துய ரனைத்தையு மழிக்கு முபாயமும்
ஈசன் றுதியா லெய்தும் பயனும்
இவைபோல் வனவா மெண்ணில்பல் பொருள்களும்
ஓதுநர்க் குணர்த்து மொண்மைய தின்நூல்
இவ்வரு ணூலிற் கியையபி தானம்
அறிவு நிலைவி ளக்க மாமால்
இந்நூ லொன்றையே யினிதுகற் பீரேல்
பன்னூ லோதிய பாவல ராவீர்
இத்தகை நூலினை யியற்றிய பெரியனை
விருத்தப் பாவினில் விளக்கி
ஆர்வம் பொருந்த வறைகுவ னன்றே.

---

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கலைமடந்தை திருமடந்தை யாமிவரை யிருமருங்குங் கரத்திற் பற்றி, மலைமடந்தை யுலவுசென்னை நகர்ப்பெருமாள் பேட்டைதனில் வாழுஞ் சாமி, நிலைமடந்தை போற்பொறுமை படைத்தொளிரு நற் சாமி நிலவு செம்பொற், சிலைமடந்தை யகடுவரு மயலொருவி யறி வுருவாத் திகழுஞ் சாமி. (க)

தகநிறைந்த புகழ்ச்சாமி புலவர்துதி செயுஞ்சாமி தனதனைப் போல், அகநிறைந்த தனச்சாமி யலைசினமி லாச்சாமி யழகார் சாமி, சகநிறைந்த சீர்த்தியையாக் கண்ணுச்சா மிப்பெரியோன் றுள்சேர் சாமி, சுகநிறைந்த வுருச்சாமி வேதாந்த சாத்திரத்தின் றுறைதேர் சாமி. (உ)

திருக்குறளி லார்வமுறு திருச்சாமி நீதிநெறி செப்புஞ் சாமி, உருக்கமுடன் முன்னீரேழ் நூலளித்த சாமிமெய்யே யுரைக்குஞ் சாமி, பெருக்கமுற வுண்மையறி வாநந்த நிலையிலென்றும் பேராச் சாமி, தருக்ககன்ற தயைசாமி தவச்சாமி சாமிகுப்பு சாமி யாமால். (௩)

---

சைவசித்தாந்த மகாசமாசப் போஷகரிலொருவரும்
செம்பியம், மிராசுதார் & ஆனரெரி மாஜெஸ்டிரேட்டுமாகிய
பண்டிதரத்தினம்

## குகஸ்ரீ. புழலை. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்

## இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஓதரிய வேதமுத லாதியநூற் கலையனைத்து மொருங்குணர்ந்து, போதம்வழங் கறிவுநிலை விளக்கமெனு நூலதனுட் பொருத்த மிக்க, ஆதரவாய்த் தனக்குரிய வனுபவத்தை வெண்பாவா லழகாய்ச் சொற்றான், சாதனமார் தேனைவரு சாமிகுப்பு சாமியெனுஞ் சதுரன் றானே.

---

தண்டல் கழனிக் கிராமமுனிசீபு

## ஸ்ரீமத். புழலை. மாணிக்கவேலு முதலியாரவர்கள்

## இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

நலமலிந் தோங்குந் தேனை நகரருந் தவத்தின் வந்தோன்
தலமலி புகழ்மிக் கார்ந்த சாமிநற் குப்பு சாமி
நிலவுறு மறிவு நிலைவிளக் கமெனு நிமல நூலை
வலமலி பொருள்கண் மல்க மாண்புறச் செப்பி னானால்.

---

## ஸ்ரீமத். புராணிகர். கு. குமாரசாமி முதலியாரவர்கள்

## இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தேனைமரு வியசுரும்பர் நறவுமிழ்பூம் பொழிலுடுத்த தெய்வக் கற்பின், தேனைநிகர் மொழிமடவார் மணிமாட நிறைவீதி சீர்சான் மிக்க, தேனைநகர் சாமிகுப்பு சாமிநய மிகத்தொனிக்கத் திகழ் மெய்ஞ் ஞானத், தேனைநிரம் பியவறிவு நிலைவிளக்க மெனுநூலைத் தெளிந்தீந் தானே.

---

## ஸ்ரீமத். வாயலூர். நயினக்கண்ணு முதலியாரவர்கள் இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முறிவுபடா தறச்செயலை நன்கியற்றி வழிகாட்டு முறைமைமிக்குச், செறிவுபட வுலகியலுக் கொத்தபடி நூன்முகமாய்த் தெளிவை நல்கி, அறிவுதிட மிகுதேனை வருகுப்பு சாமியென்போ னருமை சான்ற, அறிவுநிலை விளக்கமதை மிகவழகாய் வெகுநயமா யறைந் தான் மாதோ.

---

செம்பியம் - உபாத்தியாயர்

## ஸ்ரீமத். தி. சிவபாத முதலியாரவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

நிலம்பூத்த புகழ்மலிசெஞ் சுட்டரவி னரிதுயில்கூர் நெடுமால் தேவி, பொலம்பூத்த தேனைவரு சாமிகுப்பு சாமியெனும் புலவன் ஞான, நலம்பூத்த வறிவுநிலை விளக்கமெனு முயரியநூன் ஞாலம் போற்ற, வலம்பூத்த சொன்னயமும் பொருணயமு மிகத் தொனிக்க வழங்கி னனால்.

---

செம்பியம்-எஸ்-பி-ஜி-மிஷன் ஸ்கூல் உபாத்தியாயர்

## ஸ்ரீமத். ச. இ. தங்கவேலு முதலியாரவர்களியற்றிய

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிவமணங் கமழுந் திருமுகப் பொலிவுந் திருந்திய பத்தியிற் சிறந்த, நவமணி யாகுங் குருவிசு வாச நலமுமிக் குறவமைந் திட்ட தவமக லாத சாமிநற் குப்பு சாமியென் றுலகுசொல் சாது குலவுநல் லறிவு நிலைவிளக் கத்தைக் குணமுற வருளினன் மாதோ.

---

பெங்களூர் - சென்ட் ஜோசெப் காலேஜ் - மாஜி தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். தரங்கம்பாடி. சபாபதிப்பிள்ளை யவர்களியற்றிய

### எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாலாறு வளம்புரியுந் தொண்டை நாட்டிற் பகருஞ்சான் ரேருடைத்தென் றௌவை போற்றும், நாலாறு கோட்டத்துட் புழற்கோட் டத்து நன்மைதருந் தேனைநகர் செய்தவத்தான், நாலாக விளங்குமறை முடிவை யோர்ந்து நயந்துரைசெய் சாமிகுப்பு சாமி நல்லோன், மேலாக வறிவுநிலை விளக்கஞ் சொற்றான் மேதினியோ ரஃதேற்று வியக்க மாதோ.

---

## ஸ்ரீமத். பளுவை. க. மு. வரதராஜப்பிள்ளையவர்கள்

## இயற்றிய

### கட்டளைக் கலித்துறை.

கற்றவர் போற்று மறிவு நிலைவிளக் கம்புகன்றான்
சொற்றிறம் வாய்ந்தவெண் பாவா னயமாய்ச் சுருதிமுதல்
பெற்றிடு நுண்பொரு ளிங்கெளி தாகப் பிறர்க்குதவ
முற்றுணர் தேனை வருகுப்பு சாமி முனிவரனே

---

ஆசிரியர். ஸ்ரீமத். கோ. வடிவேல் செட்டியாரவர்களின் மாணவருள்
ஒருவரும், வேலூர்-ஊரிஸ் கல்லூரி-தமிழாசிரியருமாகிய

## ஸ்ரீமத். கீ. வேணுகோபால நாயகரவர்கள்

## இயற்றிய

### நிலைமண்டில வாசிரியப்பா.

சீரார் பௌவச் செழுமை யானும்
காரார் மாளிகைக் கவின்பெற லானும்
பேரார் தமிழொடு பிறமொழி யானும்
நேரார் மாந்தர் நிறைந்திட லானும்
பொன்னும் வளனும் புகழு மீதூர்
மின்னு மணியு மிளிர்தர லானும்
வேண்டிய யாவும் வேண்டியாங் கெய்தி
மாண்பமை சிறப்பின் மன்னிட லானும்
விண்ணுல கிதனின் வேறிலை யென்று
மண்ணுல கோர்துதி மாண்புறு சென்னையில்
பின்னை நடம்புரி பெருமாள் பேட்டை
மன்னியே வாழ்வோன் மாபெருந் தலைவன்
பசித்தார்க் குணவிடு பாக்கிய சீலன்
புசித்தார்க் கண்டு புகழ்ந்து பேசுவான்
அறிவின் மேலா னறத்தின் மேலான்
தறிபோற் றனுவினைச் சமைக்குந் தவத்தான்
இந்திர பீட மீசூர்ச் சச்சிதா
நந்தன் றிருவடி நண்ணிய சற்குரு
ஐயாக் கண்ணெனு மமல னருளால்
நையாப் பெருநெறி நன்று யடைந்தோன்

குறிபெறு மக்கள் குணம்பெற வேண்டிச்
செறிதரு வாழ்க்கைச் செய்முறை யனைத்தும்
முறையிற் பன்னூன் முகத்தாற் செப்பினன்
கறைதபு நூல்களைக் கழறுதுஞ் செவ்வே
குருவின் றிருவருள் கூடா தார்சிறு
ஒருநூ லறிவு முணரா ரென்றே
முதலிற் குருஸ்தவம் மொழிந்ததன் பிறகு
இதந்தரு போத விளக்க மியற்றிப்
பார்க்குஞ் சொரூபா நந்த விளக்கம்
யார்க்குந் தெளிவுற யாத்துப் பின்னர்
அநுபவா நந்த விளக்க மறைந்து
தநுவறச் சாமி விளக்கஞ் சாற்றித்
திருவள் ளுவர்தோத் திரவிளக் கஞ்சொலி
மருவு நீதி மார்க்கம் விளக்கும்
கன்னலின் மொழியார் கற்பு விளக்கம்
அன்ன தான விளக்கமு மதனொடு
கருணை விளக்கமுங் கழறி மனத்தின்
இருளிரி நன்மதி தீப மிசைத்து
விபூதி விளக்கம் வியனுறச் சமைத்த
நுபூதி மான்க ளுனித்தறிந் துவக்க
ஞான சார விளக்க நவின்று
மோனமாந் துறவு நிலைவிளக் கம்பனி
அல்ல லறுத்தக வாழ்வினை யடையும்
இல்லற வொழுக்க விளக்க மினிதே
பதந்தரு வாய்மையிற் பண்பா யுரைத்தே
எதனினு மேலா மியலுற வேண்டிப்
பிறநூற் பேதப் பிதற்றினை யகற்றும்
அறநூ லான்ற வபேத நிலையாம்
அறிவு நிலைவிளக் கம்மென் றொருநூல்
நெறிதரப் புகன்று ணிகரிலா மரபால்
தமிழ்மறை மன்னத் தகுபரி சளிப்போன்
இமிழ்தரு வில்லறத் துறவியா யிலகும்
சனகனே போன்ற சாந்தமார் நல்லோன்
தனதனேர் சாமி குப்பு சாமி
கற்றவர் வருந்தக் காணுக் கனவான்
மற்றவர் பசியை மாற்றுங் கருணையான்
தெளியார் சிந்தை தேற்றுந் திறலான்

அளிமன முருவ மாகியே யனைவரும்
தன்னிலை கண்டுதா னுருவ தற்குப்
பண்ணுவே தாந்த முலகிற் பல்கவே.

---

ஷை செட்டியாரவர்களின் மாணவரும்,
சென்னை. ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய
**ஸ்ரீமத். கந்தசாமி முதலியாரவர்க ளியற்றிய**

நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மன்பா வளித்தான்
அறிவுநிலை கண்டுணர்ந்த வையன்—பிறிவில்சீர்ச்
சாமிகுப்புச் சாமியென்பான் சற்குணத்தோ னின்பமுற
ஆமிதனுன் மிக்குண்டா மன்பு.

---

ஷை செட்டியாரவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய
**ஸ்ரீமத். N. A. துரை அரங்கசாமிப் பிள்ளையவர்கள் இயற்றிய**

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பெறிக டமது போர்த்தொழிலைப் போக்கிப் பொருளை யடைவ திங்கே, அறிவு நிலையை யாய்ந்தறித லல்லா லருமை யதையுணர, அறிவு நிலையின் விளக்கமெனு மரிய நூலை யருளுடனே, நெறியிற் சிறந்த சாமிகுப்பு சாமி நிமல னியற்றினனே.

---

ஷை செட்டியா ரவர்களின் மாணவர்களுள் ஒருவரும்,
திருக்குறள் மணக்குடவருரை பதிப் பாசிரியருமாகிய
சென்னை-சிந்தாதிரிப்பேட்டை
**ஸ்ரீமத். கா. பொன்னுசாமி நாட்டாரவர்க ளியற்றிய**

நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மாராய்ச்சி யாலே
செறியவொரு நூலாகச் சேர்த்துப்—பிறிவில்லாச்
சாமிகுப்பு சாமியெனுஞ் சாந்த னியற்றிநற்
பூமிதனிற் பெற்ருன் புகழ். (௧)

இந்நூலி லேய்ந்த விருக்கின் முடிபொருளை
எந்நாளும் பார்ப்பார்க் கிதமெல்லாம்—செந்நெறியா
வந்திலகும் நல்லோர் வரமு மிகப்பலிக்கும்
இந்திரனு வாழ்வ ரியைந்து. (௨)

---

சென்னை-ஹிந்து தியலாஜிகல் உயர்தரப்பாடசாலைத் தமிழாசிரியர்

## ஸ்ரீமத். தை. ஆ. கனகசபாபதி முதலியாரவர்கள்

## இயற்றிய

### நிலைமண்டில வாசிரியப்பா.

சத்திய சீலன் சச்சிதா நந்தன்
மாணவன் றனது மாணவ னுய
ஆதுலர்க் கன்ன மளித்துக் களிக்கும்
சாமி குப்பு சாமி தன்னின்
அறிவுநிலை விளக்க மாழ்ந்து பார்ப்பார்
அறிவினைப் பெறுவரென் றறைகுவ னினிதே.

---

சித்தூர்-ஷெர்மன் உயர்தரக்கலாசாலைத் தமிழாசிரியர்

## ஸ்ரீமத். பூ. ஸ்ரீனிவாசலு நாயுடவர்க ளியற்றிய

### நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மான வருணூல்
அறிவுநிலை காண்டற் கமைந்த—நெறிசெறிய
வார்த்தியொடு சாமிகுப்பு சாமி யளித்திட்டான்
பார்த்தார்க் கமுதாகப் பார்த்து.

---

வல்நகர் - வித்துவான்

## ஸ்ரீமத். வைத்தியலிங்கம் பிள்ளையவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

அறிவை யறியா தயலை யறிந்து
பிறவிக் கிலக்காகும் பீழைச்—செறிவைக்
கலைவிளக்கத் தோவியுயக் கண்டா னறிவு
நிலைவிளக்க நூலொன்று நின்று. (௧)

தக்க வணையவன்றான் சாமிகுப்பு சாமியெனு
மிக்க வபிதான மேவியோன்—எக்கலையுங்
கற்று னெழிற்சென்னைக் கண்ணுளா னின்புருவ
முற்றுன் றனைநன் குணர்ந்து (௨)

ஷை பிள்ளையவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய
மன்னுய்க்கன்பாளையம்

## ஸ்ரீமத். ந. க. அரங்கசாமி முதலியாரவர்களியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

காரண காரியங் கடந்த பொருளை
ஆரண நெறியா வையாக் கண்ணெனும்
தேசிக னருளாற் றெளிவா யறிந்தவன்
மாசிலாக் குணங்கண் மன்னிய புனிதன்
(௫) பவமறு நெறியைப் பலர்க்கு முரைப்பவன்
சிவநெறி யெவர்க்குந் தேன்போல் விளக்குவோன்
காமிய நெறியைக் கடையெனக் கண்டவன்
சாமி குப்பு சாமி யென்போன்
பின்னிய பாசப் பிறப்பினை நீக்கி
(௧0) மன்னிட மக்கள் வளமெலா மமைய
நிலைபெற வறிவு நிலைவிளக் கத்தைத்
தலைமை சான்ற சற்குணர் வியக்க
வெண்பா வடிவாய் விளம்பின னதன்பொருள்
மன்பதை யோர்க்கொரு மருந்தா கும்மே.

---

ஷை பிள்ளையவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய

## ஸ்ரீமத். துரைசாமி ஆச்சாரியவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பல்வளஞ்சேர் சென்னைநகர் நற்பெருமாள் பேட்டையினிற் பளகி லாது, சொல்வளமும் பொருள்வளமுஞ் சேர்ந்துவர வாழ்ந் திடுவோன் றுகளிலாத, நல்வளஞ்சார் சாமிகுப்பு சாமியெனு மபி தான னன்னூ லாய்ந்து, எல்வளம்போ லறிவுநிலை விளக்கமெனு நூலியம்பி யிசைபெற் றனே.

---

ஷை பிள்ளையவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய
காட்டுக்கா நல்லூர்

## ஸ்ரீமத். கா. மு. சுந்தரனு ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

இன்னலிலாச் சாமிகுப்பு சாமி யெனுமேந்தல்
பன்னரிய நூல்கள் பலவாய்ந்து—மன்னும்
அறிவு நிலைவிளக்க மன்பாகச் சொற்றுன்
நெறியெவர்க்குந் தோன்ற நிலத்து.

ஷை பிள்ளையவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய
காட்டுக்கா நெல்லூர்

## ஸ்ரீமத்· ரா. செங்கல்வராய ரெட்டியாரவர்க ளியற்றிய

### உந்தியார்.

சாமி யறிகுப்பு சாமி யெனுஞ்சீலன்
பூமி புகழ்ந்திட வுந்தீபற
புகன்றா னொருநூலை யுந்தீபற (௧)

அன்ன தறிவு நிலைவிளக் கம்மெனச்
சொன்ன பெயரதா முந்தீபற
சோகமெ லாநீக்கு முந்தீபற (௨)

வேதனை போக்கும் விதியறி வார்க்கிது
மாதன மாகுமென் றுந்தீபற
மகிழ்ச்சியை யாக்குமென் றுந்தீபற. (௩)

---

ஷை பிள்ளையவர்களின் மாணவர்களுள் ஒருவராகிய
கண்ணமங்கலம்-போர்டு உயர்தர எலிமெண்டரி பாடசாலை
உபாத்தியாயர்

## ஸ்ரீமத். கா. சு· முருகப் பிள்ளை யவர்க ளியற்றிய

### நேரிசை வெண்பா.

செறிவு நிறைதருசீர்ச் செம்மணித்தார் போல
அறிவு நிலைவிளக்க மன்பா—வறியரெலாம்
சாமியெனப் போற்றுகின்ற சாமிகுப்பு சாமியென்பான்
பூமிகொளத் தந்தான் புரிந்து.

---

சென்னை-தண்டையார்ப்பேட்டை-க்ஷத்திரியமித்திரன் பத்திராதிபரும்
தொ. சா. த. ப. சங்கக் காரியதரிசியும்
பஞ்சாலய தருமபரிபாலன சபைத்தலைவரும்
கிராமணிகுலப் பிரதிநிதியும், ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம்
நமது குலத்தொழில்-க்ஷத்திரியன்-நாடார் என்னும் சொல் ஆராச்சி
முதலிய நூல்களின் ஆசிரியருமாகிய

## ஸ்ரீமத்· த· விஜயதுரைசாமி கிராமணியா ரவர்கள் இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கற்பனையெ லாங்கடந்த வாலறிவாய் மிளிருமையாக் கண்ணுச் சாமி, பொற்பதுமத் தாள்போற்றுஞ் சாமிகுப்பு சாமியெனும்

புனிதன் ஞான, நற்பயனை நானிலத்தில் யாவர்களு மெய்தியுய நயந்து சீர்சால், விற்பனமா ரறிவுநிலை விளக்கமெனும் பெருநூலை விளம்பி னுனல்.

---

மருங்காபுரி சமஸ்த்தான வித்வான்

ஸ்ரீமத். ஏகை. சிவசண்முகம் பிள்ளை யவர்களின் குமாரர்

## ஸ்ரீமத். ஏகை. சிவராஜம் பிள்ளை யவர்க ளியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மருளாரும் பலவிகற்பர் கோட்கிணங்கி யெந்நாளு மயங்கி வாய்மைப், பொருளாவ திதுவெனநன் குணராது புல்லறிவாற் பொருந்தும் வாழ்க்கை, இருளாரு முலகினிலே யுடையதெனச் செருக்கிப்பல் விடருற் றோர்க்குத், தெருளாருங் கதிர்விளக்க மெனத்தோன்றிப் பல்விளக்கந் தெருட்டி யாண்டோன்.

எத்திக்கும் புகழ்பரப்புஞ் சாமிகுப்பு சாமியெனு மினிமை யாளன், தித்திக்கும் படிபலவெண் பாவிலரு நீதிகளைத் திகழக் காட்டி, முத்திக்கு முழுமுதலாம் பெரும்பொருளை யடையநல முதிர்ந்த ஞானம், சித்திக்கும் படியறிவு நிலைவிளக்க மெனவொரு நூல் செப்பி னுனே.

---

சென்னை-தண்டையார்ப்பேட்டை

## ஸ்ரீமத். கா. கங்காதரம் பிள்ளையவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சுருதிவழி யாகவந்த தொன்னூலி னுட்பொருளைத் சூழ்ந்து ணர்ந்தோன், கருதிவரு மன்பருளக் கற்பனையைக் கரைத்தறிவைக் காணச் செய்வோன், பொருதிரையார் நெடியகட லனையபெருங் கருணையுளான் பொருவின் ஞானப், பருதியனை யான்சாமி குப்புசா மிப்பெயர்கொள் பாவ லன்ருன்.

அவனியிலஞ் ஞானவிரு ளிருந்தவிடந் தெரியாம லலறி யோடத், தவநிலையா மெய்ஞ்ஞானப் பிரகாச நிறைத்திடவே தகவா யுன்னி, நவமணிகோத் ததுபோல நயமலிய வரும்பொருள்க ணன்க மைத்துச், சிவமலிந்த வறிவுநிலை விளக்கநூ லியற்றிச்சீர் செறிந் தான் மாதோ.

---

சென்னை-தண்டையார்ப்பேட்டை

## ஸ்ரீமத். சே. உமாபதி கிராமணி, B.A., L.T., (Dip in Geog) அவர்களியற்றிய

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒளியாக வெளியாக வுருவாக வருவாக வொன்றி னாலுந்
தெளியாத பெருமானைத் தெளிவாக வெளியாருந் தெளிந்து நாளுங்
களிகூர வறிவுநிலை விளக்கமெனு மொருநூலைக் கண்டான் வண்மை
அளிமேவு மருந்தவநற் சாமிகுப்பு சாமிபுவி யறிய மாதோ.

---

திருமயிலை-செந்தோம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். ம. செல்வநாத முதலியாரவர்கள் இயற்றிய

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறிதிரை யுலகில் மக்களாக் கையினன் மாட்சியோ டெய்துறு முறுதி, குறிகுணங் கடந்த பரம்பொரு ளுருவாய்க் குலவுற வதிதலே முறையென், றறிவுநூ லுணர்ந்தோ ருரைசெயு நெறியே யாய்ந்தவா தீனத்தி லுறைவோன், நெறிமுறை பிறழா வாத்தும ஞானி நிகரிலாக் குணநிதி யானோன். (௧)

தேசிக னெனயாக் கண்ணெனும் படிவன் றிருவடி வழிபடு முரவோன், வாசவண் கமலப் பாசடை யதன்மேல் வதிதரு மறனிகராக, நேசவில் லறத்தி லுறையினு மார்வம் நேர்தரா வகத்துறவுடையோன், மாசிலா தொளிருந் தத்துவ மசிமா வாக்கியப் பொருளறிந் துய்ந்தோன். (௨)

நிலமிசை யுலவு மெவ்வுயிர் தமையு நிலவுதன் னுயிரெனப் புரப்போன், பலகலைக் கேள்விப் பான்மையா லென்றும் படர்மனம் விளக்கமிக் குறலால், பலனுறு மறிவு நிலைவிளக் கென்னும் பரிவமர் ஞானநூ லொன்று, குலவுற வியற்றித் தந்தனன் சாமி குப்புசாமிப்பெய ரண்ணல். (௩)

---

சென்னை-சைவசித்தாந்த பிரசங்க ஞானபானு

## ஸ்ரீமத். க. இராஜாராம் பிள்ளை யவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அகமுகச்செல் வத்தினொடு புறமுகத்துச் செல்வமுநன் கமையப் பெற்றுத், தகவினொடு தருமங்க டமைவளர்க்குஞ் சாமிகுப்பு

சாமி வள்ளல், சகமுய்ய வறிவுநிலை விளக்கமெனுஞ் சாத்திரத்தைத் தந்தா னந்தச், சுகமலிந்த சாத்திரத்தின் பொருள்காண்போ ரின்புறுவார் துயர்தீர் வாரே.

---

சென்னைபுரி-வித்வான்

ஜா. பசுபதி நாயகரென்கிற

## ஸ்ரீமத். விஷ்ணுபாதசேகர ரவர்களியற்றிய

### கலித்துறை.

பூமி மீதினிற் புண்ணியம் யாவையும் புரிவோன்
நேமி தன்னொளி போற்புக ழெங்கணு நிறைப்போன்
காமி யன்றவன் கண்ணுத ருனென வுணர்ந்தோன்
சாமி நங்குப்பு சாமியென் பானொரு சனகன். (௧)

அன்ன வன்பல நூற்க ளியற்றிய தறிவீர்
இன்ன மோர்கலை யியற்றினன் யான்சொல வுணர்வீர்
அன்ன நூற்பெய ராதிய வும்மினி யறைவேன்
சென்னை யம்பதி யாதிய வூர்களிற் றிகழ்வீர். (௨.)

மறைவி றெளிபொருள் வண்கலை யென்னலா மிதனை
நறவி னினிமைகொள் நற்கவிக் கோவையு மெனலாம்
திறவு கருவியின் சேதன நிலைதிறப் புறலால்
அறிவு நிலைவிக் கம்மென்ப தாமிதன் பெயரே. (௩.)

### நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மாமிந்த நூற்பேர்
இறைவை யினியிதுவே யாகும்—பிறவி
யொழிக்கும் வழிமாடி யும்பரே றற்கே
தழைக்குமீ தான்ஞானத் தாரு. (௪)

ஆகையினா லிந்த வம்புவிக்கண் வாழ்ந்திடுவீர்
ஏகமுயி ரென்பார்க்கே யீதுரிமை—யாகாது
எத்தனையுண் டோமதங்க ளிவ்வுலகில் வைதிகமாய்
அத்தனைக்கு மீதுரிமை யாம். (௫)

---

## ஸ்ரீமத். மாங்காடு. வடிவேலு முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அறிவி னிலையதனை யாய்ந்தஃதில் லார்க்கே
அறிவு நிலைவிளக்க மாக்கி—நெறிதந்தான்
காமியங்கள் யாவுங் கழன்றிந்த்ர பீடவழிச்
சாமிகுப்புச் சாமியவன் றான்.

---

சென்னைச் சித்தாந்தப் பிரகாச சபைத்தலைவர்
வித்துவான், பாரிப்பாக்கம்.

## ஸ்ரீமத். கண்ணப்ப முதலியாரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகின ரறிவி னோங்கிடு நிலையை யுள்ளவா றுணர்ந்துய நன்கு
நலமிக வறிவு நிலைவிளக் கத்தை நயமிக வளித்தனன் சீறிப்
புலமிக விழைக்கும் போரினை வென்று புண்ணிய வறிவுரு வாகிப்
பலமிகு சாமி குப்புசா மிப்பேர் பாங்குறக் கொண்டவன் மாதோ.

---

சென்னை-முத்தியாலு பேட்டை-உயர்தரக் கலாசாலைத்
தமிழ்ப்புலவரும், மருத்துப்புலவருமாகிய

## ஸ்ரீமத். சி. குமரகுரு செட்டியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பறிமணிக ளோடுகல்லாப் பார்க்குமனத் தவர்போற்றப் படியு முய்யக், குறிகுணங்க ளொன்றுமிலா வையாக்கண் ணமலனருள் கொண்டோ னீர்மை, செறிவுதரு சாமிகுப்பு சாமிமால் சொற் பொருள்கள் சிறந்து நிற்க, அறிவுநிலை விளக்கமொன்றிங் கமைத்து வினை குமைத்தறிவா யமர்ந்திட் டானே.

---

சென்னை-இராயப்பேட்டை-வித்துவான்

## ஸ்ரீமத். வல்லி. ப. தெய்வநாயக முதலியாரவர்கள் இயற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

பொன்னவள் கலைமகள் புனித வருளை
நன்னய மாக நண்ணிடப் பெற்றோன்
பாவலர் நாவலர் பரவப் பெற்றோன்
சீவகா ருண்யஞ் சிறக்கக் கொண்டோன்

தர்க்கம்வே தாந்தந் தழைக்கக் கற்றவன்
நிர்க்குண மாக நிலவும் பெற்றியன்
தருவென யார்க்குந் தந்திடும் வள்ளல்
அருமைமா வாக்கிய மன்பருக் கருள்வோன்
கற்ற புலவரைக் காக்குங் கனவான்
நற்றமிழ் நூல்க ணல்கும் புலவன்
ஒருமை மனத்த னுலவா வின்பன்
அருமையா நிட்டை யாரச் செய்வோன்
கூழுஞ் சோறுங் கொடுக்குங் குணவான்
வாழுந் தனிகன் வாய்மையே மொழிவோன்
வண்டியிற் சோறு வழங்கிடும் வள்ளல்
அண்டினோர் தம்மை யாதரித் தருள்வோன்
காமிக ளாலே காண்டற் கரியவன்
சாமி குப்பு சாமியாம் பெயரினன்
நின்மல வறிவு நிலைவி ளக்கம்
என்னு நூலினை யியற்றி யீந்தனன்
அவ்வரு ளானெறி யடைவுட னொழுகுவோர்
செவ்விய வறங்கள் செய்திடு வார்கள்
தீவினை தன்னைச் செகுத்திடு வார்கள்
ஆவினை செய்யறி யாமை வீட்டுவார்
நித்தியா நித்திய நிலையுணர் வார்கள்
இத்தரை விண்ணுல கின்பம் வெறுப்பார்
பிறவித் துயரின் பெருக்க மறிவார்
திறவீட் டின்பஞ் சேர விழைவார்
கருப்புகுத் திடற்குக் காரண மான
தருக்கு முயற்சி தம்மைச் செய்யார்
வீட்டின் பதனை மேவிடற் கான
மூட்டருள் யோக முயற்சியே செய்வார்
அழியுட லானெனு மகப்பற் றினையும்
இழிபொரு டன்ன தெனும்புறப் பற்றையும்
விடுத்துமெய் யுணர்வு மேவுவா ரென்னின்
தொடுத்திநூல் பெருமை சொல்லுவார் யாரே.

திருத்துருத்தி-இந்திரபீடம்
பிர்மஸ்ரீ. தண்டரை. சுப்பராய ஆச்சாரிய சுவாமிகளின்
பௌத்திரிகேயரும்
ஸ்ரீ. சச்சிதாநந்த சுவாமிகள் தர்மபரிபாலன சபையின்
காரியதரிசியு மாகிய

## பிர்மஸ்ரீ. ரா. சுப்பிரமணிய ஆச்சாரியவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

அறிவினர்கள் கொள்ள வருமறைக ணன்காய்ந்
தறிவு நிலைவிளக்க மாற்றி—யறிவுமிக்க
சாமிகுப்பு சாமியெனுஞ் சாந்த னுவந்தளித்தான்
பூமியுளார் போற்றப் புகழ்ந்து.

---

செங்கற்பட்டு-செஞ்சோசப் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். பொன்மார். நடேச முதலியாரவர்க ளியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

ஆழிசூ ழுலகி லனைவரும் போற்றக்
கங்கை தாங்குங் கண்ணுதற் கடவுள்
பாத மறவாப் பண்புள சீலன்
அன்பு வாய்ந்த வங்கப்ப னீன்ற
செம்ம லாவான் சிற்ச பேசன்
தன்னடி போற்றுஞ் சச்சிதா நந்தக்
குரவற் பேணுங் குலநிறை மேலோன்
ஐயாக் கண்ணு மண்ணலைக் குருவாய்ப்
பெற்று வாழும் பெருந்தகை யாளன்
சோறுண வகற்றிச் சுவைக்கனி நுகர்வோன்
தன்பெரு நிதியந் தனக்குப் பேழை
அற்றூர் தங்க ளகட தென்று
குறிக்கொண் டென்றுங் குறைவிலா வன்னம்
வறியோர் தெவிட்ட வான்முகி லென்ன
உன்னரு மன்பா லுளமகிழ்ந் தளிப்போன்
செந்தமிழ் மொழியைச் சீருடன் வளர்ப்போன்
புலவர் தமக்குப் பொருண்மிக நல்குவோன்
பொய்யா மொழியாப் புகறமிழ் மறையை
அங்கா ளுலகிற் களித்தரு ணந்தம்
வள்ளுவ னாரே வந்தன ரென்று

கண்டோர் கேட்டோர் களித்ததி சயிக்கத்
திருக்குறண் மனனஞ் செய்துசொல் வார்க்குப்
பரிசுநன் களிப்போன் பரம னுருவாம்
திருநீ றென்னுஞ் சிறப்புறு மருந்தை
உ௫. பலர்க்கு மீந்து பவப்பிணி யொழிப்போன்
அன்னமும் பொருளு மரன்றிரு நீறும்
தருதன் மட்டுஞ் சாலா தென்றே
சிவனறி ஞானஞ் செவ்விதின் விளக்கும்
ஒருபெருஞ் சாத்திர வொப்பருங் கடலின்
௩0. சார மான தலைசே ரறிவு
நிலைவிளக் கத்தை நேயமாத் தந்தனன்.
சாமி குப்பு சாமி யென்போன்
அன்னோ னென்று மன்புடன் வாழ்கவே.

---

காஞ்சிபுரத்திற் கடுத்துள்ள கருக்குப்பேட்டைக் கிராமம்
தமிழ்ப்புலவர்

## ஸ்ரீமத். மு. சண்முகசுந்தர முதலியாரவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

ஐயாக்க ணாரியன்பா லன்புறா லாய்ந்துணர்வால்
மையார் மனத்தின் மருளொழித்தோன்—கையார்ந்து
தாலத்திற் றன்பாலே சாரும் மிடியருக்குப்
பாலன்னம் தந்திடுவோன் பார். (க)

தாலமிசை யின்னுமோர் தாயுதரஞ் சாராது
வாலறிவைப் பெற்றுநிதம் வண்மைபெற—ஞாலம்
அறிவு நிலைவிளக்க மாராய்ந்து தந்தான்
நெறிசாமி குப்புசாமி நேர். (உ)

---

காஞ்சிபுரம்-பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமத். திரு. வி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பா.

அறிவு விளங்கி யரனருள்கூ டப்பார்
அறிவு நிலைவிளக்க மாநூல்—நெறியளித்தான்
தக்க கொடையாளன் சாமிகுப்பு சாமியெனும்
மிக்க புலவனருண் மிக்கு.

---

செங்கற்பட்டு-கோலம்பாஸ் ஹைஸ்கூல்-தலைமைத் தமிழாசிரியர்
ஸ்ரீமத். வே. முத்துசாமி முதலியாரவர்க ளியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

பூவுல கதனிற் புனிதமா தவர்கள்
நாவிரி கீர்த்தி நண்ணிய ஞானிகள்
கோணுத லின்றிக் குறிகுணங் கடந்து
வானுற வோங்கி வளர்ந்திடு மலைகளில்
உடம்பை வளர்க்கு முண்டிக டவிர்த்தே
உறுபொறி யைந்தையு முயிர்ப்பையு மடக்கி
மனக்குறும் பகற்றி மாண்புறும் யுகம்பல
வாடுதல் வதங்குத லின்றித் தூணென
அசைத லின்றி யங்க ணுறக்கம்
சிறிது மின்றிச் செழுந்தவ மியற்றித்
தூய தாய துரிய நிலைதனில்
ஆயு மறிவிற் ககன்றிடு மறிவறி
குணமுறு சாமி குப்பு சாமி
எனும்பெருந் தகைமை யேய்ந்த வண்ணல்
நிலைத்த வறிவு நிலைவி ளக்கம்
என்னு நூலை யெழிலுற வியற்றி
உலகிற் குறுதியா யுண்மை விளக்கிப்
பலர்புகழ் ஞாயிறு பாவிய விருளை
அலர்கதிர் தன்னு லகற்றுமா போல
அகவிரு ளதனை யகற்றி ஞான
ஒளிவள ரச்செய் துலவா வின்பம்
நாளும் பயக்க நயந்தளித் தனனே.

---

திருப்பாதிரிப்புலியூர்-ஞானியார் மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமி யவர்களின்
மாணவர்களுள் ஒருவராகிய
சென்னை-திருவல்லிக்கேணி
வைத்தியம். ஸ்ரீமத். கு. நாராயணசாமி நாயகரவர்கள்
இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

புவனமுறுஞ் சமரசமாம் போதநிறை குணவரையான் புலமி லாரும், பவமிகந்து பதக்கரைசேர் நெறிகாண வறிவுறுத்தும் பண்

பன் பாங்காத், தவமுனுற்றி மனத்திணைவென் றறிவுகண்ட சாமி குப்பு சாமிச் சான்றோன், எவமறுபல் லறங்களமைத் தறிவுநிலை விளக்கமறை யியம்பி னானே.

---

திருநெல்வேலி-சைவப்பிரசாரகர்

**ஸ்ரீமத். வி. அ. சங்கரநாராயணப் பிள்ளையவர்கள்**

**இயற்றிய**

**அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.**

அறிவரு ளடக்கஞ் சீல மாதிய குணத்தா னீடி
அறிவதாம் பதியை ஞான்று மகத்தினிற் றொழுது மெய்யை
அறிவதே தொழிலா யறிவு நிலைவிளக் கமதென் றோதும்
அறிவுநூ லாய தொன்றை யாக்கினீர் யாக்கி னீரே. (க)

புண்ணியச் சாமி குப்புச் சாமியாம் புனித நீர்சொல்
புண்ணியப் பொருள்ப திந்த புத்தகமு தனைய நூலைப்
புண்ணிய மென்று மக்கள் புந்தியி னினைந்து கொள்ளின்
புண்ணியம் புரிந்து பொன்றுப் புகழுறு பதஞ்சேர் வாரே.(உ)

---

உடுமலைச்சரபம்-ஸ்ரீமத்-முத்துசாமிக் கவிராய ரவர்களின் மாணவர்

தமிழ் நாடகாசிரியர். சிவகாசி

**ஸ்ரீமத். ச. சு: சங்கரலிங்கக் கவிராயரவர்க ளியற்றிய**

**பன்னிரண்டு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.**

தித்திக்கு ஞானநிலை செப்புந் திறத்தினிற்
றிகழுநான் மறையின்முடிவு
திருநெறித் தமிழ்வேதந் திவ்யபக வத்கீதை
சிவஞான போதமுறையைப்
பத்திநெறி போதிக்கும் பான்மையிற் சூதர்சொன
பதினெண் புராணங்களைப்
பாங்காக நீதிக ளுரைத்திடுந் தன்மையிற்
பகர்திருக் குறணூலினை
யொத்திருக் கின்றதென நந்தமிழ் நாட்டவ
ருச்சிமிசை கொண்டுமகிழ
வோகையுட னேங்கறிவு நிலைவிளக் கந்தனை
யுனுற்றிநல் கினனன்னவன்
முத்திதரு மாத்தும ஞானியை யாக்கண்ணு
மூர்த்திநன் மாணுக்கனும்
மோகநெறி யேகாத சாமிகுப் புச்சாமி
முனிவர னென்பமாதோ.

---

பொதிகைமலைச் சித்தர்மரபு. ஸ்ரீ. நாராயண தேசிகரவர்களின்
மாணவர்களுள் ஒருவராகிய
பண்டிதஸ்ரீ. பூ. அ. கோவிந்தராஜ தாசரவர்களின் தலைமைமாணவர்

## ஸ்ரீமத். தி. முனிசாமி நாயகரவர்க ளியற்றிய

### கட்டளைக் கலித்துறை.

கரபாத் திரர்சச்சி தாநந்த சாமி களின்மரபின்
பரமா நிலைகாட்டும் பண்ணவ னுய்நற் பரிவுடையான்
உரமாரை யாக்கண்ணு தன்னிரு தாளை யுளத்தினிற்கொண்
டிரவாமை யாசகர்க் கின்பமாச் செய்யு மினியவனே. (க)

கருணையுங் கார்நிக ரீகையுஞ் சுத்தக் கவித்திறனும்
பெருமைசேர் வாக்கும் பிரிவிலா ஞானமும் பெற்றமொய்ம்பன்
அருமைக் குணத்தினன் சாமிகுப் புச்சாமி யன்பனெங்கும்
பொருவற வாழ்பவன் புண்ணிய மூர்த்தி புகழினனே. (உ)

தன்னையின் னுனென்று தா னுணர்ந் தின்புறச் சத்தியற்றுப்
பின்னிய மாயையுட் பட்டுழல் கின்றவர் பேருலகில்
உன்னுமூ வாசைவிட் டின்பந் தனையுற் றுலாவமென்மேல்
மன்னு மறிவு நிலைவிளக் கஞ்சொலி வைத்தனனே. (௩)

---

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்-மாஜி தமிழ்ப் பண்டிதரும்
உரை யாசிரியரும், சைவப்பிரசாரகரு மாகிய
ஸ்ரீமத். ஈக்காடு. இரத்தினவேலு முதலியாரவர்கள் குமாரர்
பிரசங்க சண்டமாருதம். புராணிகர். வித்துவான்

## ஸ்ரீமத். ஈக்காடு. சபாபதி முதலியாரவர்க ளியற்றிய

### நேரிசை வெண்பா.

ஆன்றோர் புகழ வறிவு நிலைவிளக்கந்
தேன்றோயும் வெண்பாவாற் செப்பினன்—சான்றோனுஞ்
சாமிகுப்பு சாமியன்ன தானத்தி லேமகிழ்வோன்
தோமில்பன் னூலுமுணர்ந் தோன்.

---

பிரசங்க சூளாமணி. ஸ்ரீமத். க. வ. திருவேங்கட நாயடவர்களின்
மாணவர்

## ஸ்ரீமத். திருத்தணிகை. சண்முக முதலியாரவர்கள் இயற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பற்றியபற் றனைத்தினையும் பரன்பற்றுப் பற்றுத பாரோ
ருய்யப், பெற்றவரு ணிட்டைதனி லுற்றவநு பூதிநிலை பிறங்கக்

கொண்ட, கற்றவரும் களிகூரும் கனவறிவு நிலைவிளக்கங் கழறி ஞனல், நற்றவத்தின் வடிவான சாமிகுப்பு சாமியெனு நலத்தி ஞனே.

---

காசி - துரியாதீத அவதூத நிர்வாண சற்குரு சுவாமிகளின் பிரதம சீடராகிய பிர்மஸ்ரீ. சாது - இராமாசுவாமி சர்மாவின் தலைமை மாணவரும், சைதாப்பேட்டை - முனிசிபல் சேர்மன். திருவாளர். சடையப்ப முதலியாரவர்களின் தலைமைக் குமாரருமாகிய திருவாளர்.

## அருட்பிரகாச நடராஜ முதலியாரவர்கள்

எழுதிய

# சிறப்புரை.

பெரியார் ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி அவர்களால் இயற்றப்பட்ட, அறிவுநிலை விளக்கம் என்னும் நூலை அன்போடு வரவேற்று, இன்போடு வாசித்துப் பார்த்தேன்; இந்நூல் நம்தமிழ் நாட்டிற்கே ஒரு புத்துணர்ச்சி தரவல்லதாக இருக்கிறது. ஏனெனில், வயிற்றுப் பிழைப்பு மட்டிற்கு மாத்திரம் வேண்டிய உலக நூல்களை வாசித்துப் பொருளையீட்டி; அப்பொருளைக்கொண்டு தம் சரீரத்தையும், மனைவி மக்களையும் போஷிப்பதையே பெரியபாரமாகவும், திருப்தியாகவும் எண்ணுகின்ற மாக்கள் புற்றீசல் போலப் பொல பொலெனக் கலகலெனப் புறப்பட்டுப் பரவுகின்ற இக்காலத்தில், இப்பெரியார் மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல் மானுடச்சட்டை தாங்கி, அறிவுநூல்களை ஓதி, குருவருள் கொண்டு, சுவாநுபவமுங் கைவரப்பெற்று; அச்சுவாநுபவத்தை 'தாம்பெற்ற திவ்வையகம் பெறுக' என்ற முதுமொழிப்படி உலகமும் பெற்றுய்ய எண்ணி, வேதசிவாகமம் முதலிய அருணூல்களில், இலை மறை காயாகப் பொதிந்துள்ளனவும், அரியனவும், பெரியனவுமான அகமுகத் தநுபூதிப் பொருள்களை 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' ஐயந்-திரிபு-அறியாமை யாகிய முக்குற்றங்களு மின்றி விளங்க அமைத்து, பாயிரம் உட்பட 514-வெண்பாக்களால் இந்நூலைத் தந்திருப்பதனு லாம்.

அன்றியும், சில ஆண்டுகட்கு முன்னர் தவராஜ சிங்கமாகிய தாயுமான சுவாமிகள் "காக முறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ, போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா, யேக வுருவா கிடக்குதையோ வின்புற் றிடநா மினியெடுத்த, தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் செகத்

தீரே" என்று உலகத்தவர்களைப் பரிதாபத்துடன் கூப்பிட்டு, உண்மைநிலையை யுணர்த்தியதுபோல, இப்பெரியார் இக்காலத்தில் தோன்றி, ஆத்மாவை அறிய வொட்டாமல், புறமுகத்திலும் அகமுகத்திலும் மறியல்செய்கின்ற மண்ணாசை-பொன்னாசை-பெண்ணாசை-கொலை-களவு-காமம்-பொய்-அபிமானம்-கோபம்-பொறாமை என்னும் துர்க்குணங்களாகிய பகைவர்களைச் சங்காரஞ்செய்து, யாவரும் அறிவாகாரமாக விளங்கும்படி கருணை மேலிட்டால், இரக்கத்துடன் இந்நூலில் கூறியுள்ள பொருள்கள் பொன்னேபோல் போற்றத் தக்கனவுமாகும்.

இவ்வரிய நூலை யளித்தருளிய இப்பெரியார் இன்னும் இது போன்ற ஞானநூல்களை ஞாலத்தவர்க்களித்து, ஞாயிறும் நளிர் மதியும் உள்ளளவும் நலமுடன் வாழ்வாராக.

---

இந்நூலாசிரியரின் திருவடித் தொண்டர்களுள் ளொருவரும் குருதோத்திரப்பாகீர்த்தனை நூ லாசிரியருமாகிய மதுராந்தகம்

## அருட்கவி. ஸ்ரீமத். மு. வடிவேல் சுவாமியவர்கள்

## இயற்றிய

### நேரிசை வெண்பா.

அறிவை யறிவித் தறிவுருவ மாக்கும்
அறிவு நிலைவிளக்க மாநூல்—அறிவுருவம்
தானான சற்குருவாஞ் சாமிகுப்பு சாமிதந்தான்
வானாடர் போற்றவு வந்து. (க)

அறிவையல் லாம லனைத்துலகு மின்றென்
றறிவு நிலைவிளக்கத் தாலே—அறிவித்த
சாமிகுப்பு சாமியெனுந் தற்பரற்குக் கைம்மாறு
பூமியிற்செய் வார்யார் புகல். (உ)

---

இந்நூலாசிரியரின் திருவடித்தொண்டர்களுள் ஒருவராகிய புராணிகர். தேவாரம்.

## ஸ்ரீமத். பிரம்பை. அப்பாதுரைப் பிள்ளை யவர்கள்

## இயற்றிய

### நிலைமண்டில வாசிரியப்பா.

எல்லாம் வல்ல விறைவ னொருவனே
வல்லான் யார்க்கும் வழிபடு கடவுள்
என்று நாளு மிருதயத் திருத்தி
ஒன்றுயிர்க் குயிரா முமையவ டந்த
ரு. குன்றுதொ றாடுங் குமரனைப் போற்றும்

வன்றிறல் படைத்த மகிப னன்பால்
திருந்திய மேலாஞ் சிவனடி யார்தம்
பொருந்திய வுறவே போதுமென் றுரைப்போன்
சீர்த்தி வாய்ந்தவன் திருவருண் மிக்கவன்
மூர்த்தி பூசை முறையாச் செய்பவன்
நேர்த்தி மிக்க நெறிபிற ழாதவன்
வார்த்தை தவறு மாண்பிற் சிறந்தவன்
தண்டமிழ் வல்லவர் சார்புவி டாதவன்
பண்டைய வாரணப் பண்பினை யோர்ந்தவன்
இன்னா ரினியா ரெனக்கரு தாமல்
அன்ன தான மடைவுட னாற்றல்
சற்பனை செயாமை தவத்தை விடாமை
கற்பனை கொளாமை கலியிழை யாமை
பின்னலை யிழைக்கும் பிறரது பொருளைத்
தன்னமு நெஞ்சந் தனில்விழை யாமை
பூதிய ணிதலோர் போதுமி கவாமை
ஆதிய சற்குண மமையப் பெற்றவன்
பன்னலம் பெருகும் பகாருந் தேனை
நன்னகர் செய்தவ நற்பய னாக
உருவுகொண் டுள்ளவ னேனை யறுப்பவன்
குருவடி நிழற்கீழ் குலவுங் குரிசில்
வறுமைசெய் மாய வாழ்க்கை வழக்கற
உறுதிப் பொருளை உபதே சித்தவன்
சாமி குப்புச் சாமி யெனவே
பூமி புகழும் பொற்பெயர் கொண்டவன்
ஓத வோத வுயர்சுவைத் தேனைப்
போத வளிக்கும் பொருணய மலிந்த
அறிவு நிலைவிளக் கம்மெனு மருநூல்
செறிவுறத் தந்தான் றிண்புவி யோர்க்கே.

---

இந்நூ லாசிரியரின் தம்பி மருகரும், திருவடித்தொண்டர்களுள்
ஒருவருமாகிய வாணியஞ்சாவடி

## ஸ்ரீமத். ச. சிங்காரவேல் பிள்ளை யவர்கள் எழுதிய

## சிறப்புரை.

திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீனத்தின் வழிவந்த ஸ்ரீ. ஈசூர்-சச்சிதாநந்த சுவாமிகளின் சிஷ்யப்ரசிஷ்யரும், அடியேனுடைய மூத்த மாதுலருமாகிய ஸ்ரீமத். தே. அ. சாமி குப்பு சாமி என்னும் மகாநுபாவர் இயற்றியருளிய அறிவு நிலை விளக்கம் என்னும் அருமையாகிய ஞான சாத்திரம் கிடைக்கப் பெற்று அதை அடியேன் பன்முறை ஓதினேன். ஓதுந்தோறும் அடியேனுடைய கல்லினுங் கடிய வன்னெஞ்சம் எரியிடும் இழுதென இளகுகின்றது. அன்றியும், ஒரு நொடியில் உலகனைத்தையும் சுற்றி வருகின்ற வஞ்சமனத்தை அடக்கி, ஆன்ம சொரூபத்தை அறிய வேண்டுமென்னும் அவாவும், தானல்லாத உடம்பைத் தானெனக் கொள்ளும் அகங்காரமாகிய அகப்பற்றையும், தனதல்லாத பொருளகளைத் தனதெனக் கொள்ளும் மமகாரமாகிய புறப்பற்றையும் சிறிது சிறிதாகத் தேய்த்தழிக்க வேண்டுமென்னும் சிந்தனையும் அடிக்கடி என்னுள் எழுகின்றன.

அடியேன் இந்நூலை ஓதுதற்கு முன்னம் பன்னூல்களைப் படித்திருக்கின்றேன். படித்தகாலத்தில், இத்தகைய பெற்றி அடியேனுக் கெய்தியதில்லை. ஆதலின், சர்வசிலாக்கியம் வாய்ந்த அரும் பெரும் தத்துவ சாஸ்திரமாகிய இந்நூலை அடியேன் சென்னிமிசை வைத்துப் போற்றுகின்றேன். இந்நூலாசிரியர் பானுமதி உள்ளளவும் பன்னலங்களும் மல்க வாழ்ந்து, இதுபோன்ற ஞானநூல்களை ஞாலத்திற்கு உவந்தருளுவாராக.

---

இந்நூ லாசிரியரின் திருவடித்தொண்டர்களுள் ஒருவராகிய
திருவாவடுதுறை. ஆயுள்வேத ஆதவன்.

## ஸ்ரீமத். ச. துளசிராம் நாயுடவர்கள் இயற்றிய

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்போன்ற மனமதனைப் பொறிகள்வழி யிற்புகுத்திப் புனித நீத்து, மின்போல வழியுலக விடாதனி லகப்பட்டு வெம்பா வண்ணம், அன்பாகச் சொரூபநிலை யடியேனுக் கறிவித்த வமல ஞான, இன்பார்ந்த சாமிகுப்பு சாமியெனும் பேருற்ற விறைவ னம்மா. (க)

முத்தனைய தாயவரு ளுன்மறையின் சிரமாக மொழிய நிற்கும், வித்தகமா ருபநிடதத் துறுபொருள்க ளாரியன்பான் மெய்யன் போடு, சித்தமுவந் தறிந்தவண மமைத்தொருபா னீரிரண்டு சிறந்த நூல்கள், இத்தரையோர் தமக்குமுன மீந்ததுபோ லிப்போது மிளகி நெஞ்சம். (உ)

விண்ணாட்டி லமுதுண்டு மேவுகின்ற தேவர்களும் விளங்கு மிந்த, மண்ணாட்டி லறுசுவையூ ணுண்ணுகின்ற மானவரு மதிவி யக்க, எண்ணாட்டு மிளமைமுத லுண்டுவந்த சோறுகறி யிகந்தி யாரும், உண்ணாட்டுங் கனியிரத முண்டுநிட்டை கூடியதி லுதித்த வாறே. (௩)

கற்றவர்க்குங் கல்லார்க்கு மங்கையர்க்குஞ் சிறுவருக்குங் கருத்துத் தோன்ற, உற்றவெளி தாயதமிழ் மொழிகளிற்றஞ் சுவா நுபவத் துண்மை தன்னைச், செற்றமற வமைத்தறிவு நிலைவிளக்க மென்றொருநூல் செய்த ளித்தான், கொற்றமுறந் நூலிலுள வரும் பொருளின் சீர்த்திதனைக் கூறின் மாதோ. (௪)

உலகுதொழுஞ் சுகன்றாதை யாம்வேத வியாதனெனு முரா வோன் றானும், அலகில்புகழ்ச் சித்தர்களு மேனையநற் புலவர்களு மறைந்து வைத்த, பலமொழியு மொருமொழியி னுண்பொருளை விளக்குகின்ற பான்மை தன்னைச், சலனமிலா தேற்றுவக்க யாவ ருக்கும் போதிக்குந் தரத்த தாமால். (௫)

---

இந்நூலாசிரியரின் மாணவர்களுள் ஒருவர். திருவான்மியூருக் கடுத்துள்ள வெட்டுவாங்கேணிக் கிராமம்

## ஸ்ரீமத். S. இரத்தினம் பிள்ளை அவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

ஆனந்த நல்கு மறிவு நிலைவிளக்கம்
தானந் தவங்கடமைத் தாரணியில்—ஊனமறச்
சந்ததமுஞ் செய்கின்ற சாமிகுப்பு சாமிகுரு
சந்தமுறத் தந்தான் றழைந்து.

---

தண்டலம். இராகவ முதலியார் குமாரர்

## தண்டலம். ரா. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

பொறிவழியிற் செல்லாப் புனிதருநன் றேற்க
அறிவு நிலைவிளக்க மாநூல்—அறிவுருவச்
சாமிகுப்பு சாமியெனுஞ் சற்குரவன் செய்தளித்தான்
தேமிகுத்த வெண்பாவாற் றேர்ந்து.

---

இந்நூலாசிரியரின் தௌகித்திரரும், திருவடித்தொண்டர்களுள்
ஒருவருமாகிய கழிப்பட்டூர். பாலகவி.

## ஸ்ரீமத். ப. ரா. அருளாநந்தரவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

அறிவு நிலைவிளக்க மாஞான நூலை
அறிவுநிலை காண வறைந்தான்—நெறியமைந்த
தேமிகுத்த வெள்ளைவெண்பாச் சிம்புளெனப் பார்புகழும்
சாமிகுப்பு சாமிகுரு தான்.

---

இந்நூலா சிரியரின் திருவடித் தொண்டர்களுள் ஒருவராகிய
திருப்புலிவனம்.

## ஸ்ரீமத். தே. அ. கு. கன்னியப்ப முதலியாரவர்கள்
எழுதிய

# சிறப்புரை.

திருத்துருத்தி-இந்திரபீடம்-ஸ்ரீ. கரபாத்திர சுவாமிக ளாதீனத்தின் வழிவந்த ஸ்ரீ. ஆத்மஞானி. ஐயாக்கண்ணு தேசிக மூர்த்திகளின் பாதசேகரருள் ஒருவராகிய ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்பு சாமி யென்னும் பெரியார் 500-வெண்பா வடிவமாக இயற்றிய அறிவுநிலை விளக்கமென்னும் நூலை அடியேன் முற்றும் படித்துப் பார்த்தேன்; அது, படிக்குந்தோறும் உலகநாட்டத்தை யொழித்து, உணர்வு நாட்டத்தைப் பெருக்குகின்றது. சாதாரணக் கல்வியுடையாரும் எளிதில் பொருளறியத்தக்க விதமாக அமைந்திருக்கின்றது.

பொன்னுபரணத்தில் மாணிக்கம் - மரகதம் முதலியவற்றைச் செம்மையாக வைத்திழைத் திருப்பது போல, இந்நூலின்கண், ஞானசாத்திரச் சிறப்பு-ஞானாசாரிய ரிலக்கணம்-சிந்தையை யடக்கிச் சும்மாவிருக்குந்திறம் முதலியவற்றை இந்நூலாசிரியர் செம்மையாக அமைத்தெழுதி யிருக்கின்றனர்.

இந்நூல், சொன்னோக்குப் பொருணோக்கு முதலிய வற்றால் சிறந்திருக்கின்றதென்பது இந்நூலை ஆழ்ந்து படிப்பவர்க்கு நன்கு விளங்கும்; இப்படிப்பட்ட அருமையும் பெருமையும் வாய்ந்த இந்நூல், படித்தவர் ஒவ்வொருவர் கரத்திலும் இருந்து அவர்க்கு ஞானபாக்கியம் அளிக்கவேண்டுமென்பது அடியேனது உண்மையான அபிப்பிராயம்.

---

இந்நூலாசிரியரின் திருவடித் தொண்டர்களுள் ளொருவர்
திருவான்மியூர். பிரசங்கசிந்தாமணி.

### ஸ்ரீமத். த. கோவிந்தசாமிப் பிள்ளையவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பொன்பூத்த சென்னைபுரிப் புகழ்ப்பெருமாள் பேட்டைவளர் புனித ஞானி, மின்பூத்த வேணியர னடியார்க்கு மேமைகட்டும் விரும்பி நாளும், கொன்பூத்த வனதானஞ் செய்தவர்கள் பசிநோயின் கொடுமை நீக்கும், இன்பூத்த கருணைநிறை சாமிகுப்பு சாமிகுரு விறைவன் சொன்ன. (க)

அறிவுநிலை விளக்கமெனு மரும்பெரிய நன்னூலி லன்பு செய்துள், ளறிவுநிலை விளக்கமுற வோதியுணர்ந் தனுட்டிக்கு மன்பரெல்லாம், பிறவிபல நெடுங்கால மீந்தின்ன விழைக்கவல பிரார்த்த நீத்து, மறவியொழித் தாநந்த நிட்டைநிலை மாறாது மன்னுவாரால். (உ)

---

இந்நூலாசிரியரின் திருவடித் தொண்டர்களுள்
ஒருவராகிய

### புராணிகர். காளத்தி. இ. சிதம்பரசாமி பாண்டியர் இயற்றிய

நேரிசை வெண்பா.

பொறிவழியிற் சென்றலையும் புன்னெஞ் சடக்கி
அறிவாக்கு மோது மவரை—அறிவு
நிலைவிளக்க நூலளித்தா னீடுலகி லென்றும்
மலைவிளக்குப் போலொளிர வாய்ந்து. (க)

அன்னவனி யாவனெனின் யானிசைப்பன் வெய்யவனும்
என்னையுமாட் கொண்டிட்ட வின்னருளன்—பொன்னனையான்
பூமிகுப்பப் போற்றும் புரணவறி வாய்மிளிர்வோன்
சாமிகுப்பு சாமிகுரு தான். (உ)

---

சென்னை-கௌரவ இராஜ்தானி நியாயாதிபதி
ஸ்ரீமதி ஈ. த. சொக்கம்மாள் பி. ஏ., எல். டி.,
அவர்கள் எழுதிய

## மதிப்புரை.

I have perused with great pleasure and profit Swami Kuppuswami's "**Arivunilai Villakkam**" or the Exposition of the seat wisdom. He dicusses very beautifully what wisdom is and whether what is wordly, deserves the name wisdom. He points out the sources from which wisdom can be gathered and wares that no book that is intended for the persuit of wordly happiness can give real wisdom. He wares the readers on the encroachment of old age on man and exhorts his readers in five hundred venbas that they should stedily work in the Divine path day and night without postponing the work for any future period. I hope this work will find popularity among readers and will have good success which it deserves.

ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு.

ஸ்ரீமத். சாமிகுப்பு சாமிஅவர்கள் இயற்றிய அறிவுநிலை விளக்க மென்னும் நூலைப் பேருவகையுடன் வாசித்துப் பயனுற்றேன். இதில், ஆசிரியர் அறிவென்பது இது என இனிதுற எடுத்துக் காட்டுவதுடன், சாமானிய உலகஞானம் அறிவென்றுரைக்கப் படாது என்பதையும் விளக்குகின்றார்; அன்றியும், அறிவினைப் பெறற்குரிய வழிகளை விளக்குவதோடு கேவலம் உலக இன்பத் தைப் பயக்கும் நூல்கள் அறிவினைப் புகட்டவல்லதன் றென்பதை யும் அறிவிக்கின்றார்.

வயோதிகப் பருவம் மனிதர்களைப் பற்றவருவது பற்றி எச் சரிக்கை செய்து, ஒவ்வொருவரும் நாளை நாளை யென்னுமல் எப் போதும் கடவுள் வழிபாட்டில் கண்ணுங் கருத்தும்வைத்துக் காலத் தைக் கழிக்க வேண்டுமென்பதை 500-வெண்பாக்களால், வலி யுறுத்துகின்றார்.

இந்நூலான்து புகழ்தற்குரிய பான்மைத் தாதலின், வாசிப்ப வர்களின் நன்மதிப்பிற்குப் பாத்திரமாகி, அவர்களுக்கு மிக்க பய னைத்தருமென எதிர்பார்க்கின்றேன்.

சென்னை-மேரிமகாராணி கல்லூரி இயற்கைத் தத்துவநூல்
உதவி விரிவுரையாளர்
ஸ்ரீமதி. ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார்
எம். ஏ., எல். டி., அவர்கள் இயற்றிய
நேரிசை வெண்பா.

அறிவுநிலை யீதெனவே யைந்நூறு வெண்பா
நெறிபடவே சாமிகுப்பு சாமி—செறிய
விளக்கினரே வேதமுட ஞகமசா ரத்தைத்
துளக்கமாய்த் தூய்மையுட னே

---

சென்னை-எழும்பூர்-பிரஸிடென்ஸி டிரெய்னிங் ஸ்கூல்
உதவி யுபாத்தியாயினி
ஸ்ரீமதி. ஈ. த. பத்மாவதியம்மாள் பி. ஏ., எல். டி.,
அவர்கள் எழுதிய

## மதிப்புரை.

I have perused Swami Kuppuswami's "**Arivunilai Villakkam**" *i.e.*, a poetic treatise of the seat of wisdom. He explains life in its practical aspect and as human tendencies ultimately lead only to unhappinces, he eliminates all wordly studies as mere waste of time and posits that the vedic cult alone obtained through competent guru will lead to eventual Bliss. This book is worthy of being studied by one and all.

E. T. PADMAVATHI AMMAL, B.A., L.T.,
Assistant, Presidency Training School, Egmore.

ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு.

ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்பு சாமியவர்கள் எழுதிய செய்யுள் வடிவான, அறிவுநிலை விளக்கத்தை யான் பார்வையிட்டேன்-இதனை ஆக்கியோர் இதனுள் மனிதவாழ்க்கையின் அநுபவநிலையை எடுத்துக் கூறுவதோடு மனிதரின் இயற்கைப்போக்கு, துக்க விளைவிற்கே ஏதுவாக நிற்றலையும், அத்தகைய உலகவாழ்விற்குரிய ஏனையநூல்களைப் பயிலல் காலவியர்த்த மாக்குமென்பதையும், சற்குருவின் மூலமாக அடையும் ஞானோபதேசமே வரம்பற்ற பேரின்பத்தை யடைவிக்க வல்ல தென்பதையும் விளக்முற விளக்குகின்றார். இந்நூல் யாவரும் கற்றற்குரிய மதிப்புடைத்தாகும்.

---

செந்தமிழிரத்தினகரம் - ஸ்ரீமத். வல்லை. சண்முகசுந்தர
முதலியாரவர்கள் மாணவி

## ஸ்ரீமதி. பண்டிதை. S. கிருஷ்ணவேணி யம்மையார் அவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அந்தணப்பண் பேற்றெய்து மாதுலர்கள் விரும்புவன வனைத்து நாளும், தந்துவக்குஞ் சாமிகுப்பு சாமியெனு ஞானவள்ள றகமொ ழிந்த, பைந்தமிழி னுலாய வறிவுநிலை விளக்கநூல் பகர்வதேபோல், சந்ததமு மொழுகிடுவோர் சஞ்சிதநீத் தின்பநிலை சார்வர் மாதோ.

---

சித்தாந்தசரபம். அஷ்டாவதானம்
சிவஸ்ரீ. பூவை. கலியாணசுந்தர யதீந்திர சுவாமியவர்களின்
மாணவியும் ஸ்ரீமான். மு. அப்பாதுரை முதலியாரவர்களின்
மனைவியாருமாகிய

## ஸ்ரீமதி. அ. நாராயணி யம்மையா ரவர்க ளியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எங்குநிறைந் துயிர்க்குயிரா யொளிருகின்ற விறையீச னேவ லாலே, மங்குலென வருள்பொழியுஞ் சாமிகுப்பு சாமியெனு மதி வல்லாளன், துங்கமுள வறிவுநிலை விளக்கமெனு நூலதனைத் துலங் கத் தந்தான், தங்குமந்நூற் பொருளுளமாம் பேழைவைத்துப் போற்றற்காந் தரத்த தாமால்.

---

மேலவலம். சிவகாருண்ய முதலியார் பி. ஏ., அவர்கள் மனைவியும்
இந்நூலாசிரியரின் திருவடித் தொண்டர்களுள்
ஒருவருமாகிய

## ஸ்ரீமதி. நாகரத்தினம்மாளவர்க ளியற்றிய

### நேரிசை வெண்பா.

அற்றவருங் கற்றவரு மன்பினுட னேயேத்தி
நிற்க வறிவு நிலைவிளக்கம்—சொற்றனன்சீர்
தாங்கியநற் சாமிகுப்பு சாமியவன் றண்டமிழ்தான்
ஓங்கியே வாழ்க வுலகு.

---

சித்தாந்தசரபம். அஷ்டாவதானம்.
சிவஸ்ரீ. பூவை. கலியாணசுந்தர யதீந்திர சுவாமியவர்களின்
மாணவியும், திருவாளர். வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்களின்
மனைவியுமாகிய

## ஸ்ரீமதி. ஜெயலட்சுமி யம்மையா ரவர்கள்

## இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருண்மலியாத் துமஞானி யையாக்கண் ணுக்குரவ னடிய டைந்து
இருண்மலிபா ரவாவையறுத் தெழின்ஞான சூரியனு யிலகு கின்ற
தெருண்மலிநூல் பலமுனருள் சாமிகுப்பு சாமியெனுஞ் செம்ம
னல்ல, பொருண்மலிந்த வறிவுநிலை விளக்கமின்று செய்தளித்தான்
பொற்ப மாதோ.

---

# அறிவுநிலை விளக்க நூல்.

## பிழை திருத்தம்.

| பக்கவெண். | வரியெண். | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ச | ந | கற்பமுணக் + காட்டுங். | கற்ப + முணக்காட்டுங். |
| எ | உக | அண்டிபோ. | அண்டிப்போ. |
| கூ | எ | காகலற்ற. | காதலற்ற. |
| கஉ | கரு | விழித்துப். | விழித்துப்பின். |
| கச | க0 | ளிளம்பக்கே. | விளம்பக்கே. |
| ,, | நக | திணமாக. | திணமா. |
| கசு | உஅ | லெங்குமலே. | லெங்குமிலே. |
| நந | கக | நானெலென். | நானெனலென். |
| நச | கசு | தேர்ந்து + மயலற்றார். | தேர்ந்துமய + லற்றார். |
| ருஉ | கஎ | வென்று. | யென்று. |



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ. பிறைசை. அருணசல சுவாமிகளின் மாணவர்,

**ஸ்ரீ. சச்சிதாநந்த சுவாமி.**



திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ. கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் மாணவர்

ஸ்ரீமத். ஐயாக்கண்ணு தேசிகமூர்த்தி.



திருத்துருத்தி, இந்திரபீடம், ஸ்ரீ, கரபாத்திர சுவாமிகளாதீனம்,

ஸ்ரீ. ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகளின் மாணவர்

ஸ்ரீமத். தே. அ. சாமி குப்புசாமி.

ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணேநம:

171741



# அறிவுநிலை விளக்கம்.

## பாயிரம்.

### சொரூப வணக்கம்.

நேரிசை வெண்பா.

எங்குநிறைந் தின்புணர்வா யெய்ந்தொளிர்வ தெப்பொருளோ
சங்கையற வப்பொருளே தானாகிப்—பங்கமற
அங்கே யதைவணங்கி யாக்கினே னிந்நூலை
எங்குரவ னாணையினா லிங்கு. (௧)

எங்கும் பரந்தொளிரு மேகசிவ நல்லறிவில்
பங்கமறத் தோன்றிந்நூல் பண்டைநூல்—துங்கநூல்
என்ன துதிபுரிவே னீங்கிதற்குச் சொற்றிடுமின்
செந்நாப் புலவர்களே தேர்ந்து. (௨)

### சங்கர பகவத் பாதாசாரிய சுவாமிகள் வணக்கம்.

சாமிசிவ சங்கரனைச் சந்ததமு முண்ணினைந்து
சாமியறி வென்றுரமாய்த் தானறிந்து—தோமில்
அறிவு நிலைவிளக்க மாக்கினேன் பாரோர்
அறிவுநிலை கண்டுணர வாய்ந்து. (௩)

### கரபாத்திர சுவாமிகள் வணக்கம்.

இந்திரபீ டத்தரசே யெந்தைகர பாத்திரனே
சிந்தைமய னீங்காச் சிறுநாயேன்—பந்தமற
உன்னடியின் சிந்தனையா லோதினே னிந்நூலை
மன்னுலகோ ருய்ய மதித்து. (௪)

## பரமாசிரியர்-ஈசூர்-சச்சிதாநந்த சுவாமிகள் வணக்கம்.

சச்சிதா நந்தசிவ சாமியென் னுள்ளிருந்திங்
குச்சிதமா விந்நூலை யோதியதால்—அச்சம்
எனக்கில்லை கற்றா ரிகழாரிந் நூலின்
உனற்கரிய மெய்ப்பொருட்கொண் டோர்ந்து. (ரு)

## ஆசிரியர்-ஆத்மஞானி-ஐயாக்கண்ணுதேசிகமூர்த்திகள் வணக்கம்.

உய்யுநெறி யோரா துழன்றசிறு நாயேனைச்
செய்ய கயிலைவிட்டுத் தேகமுற்று—மெய்யுணர்த்த
ஐயாக்கண் ணாரிய னாகவெய்தி யாட்கொண்ட
துய்யாநின் றாளே துணை. (சு)

ஐயாவென் சற்குருவே யாண்டவநின் சிந்தனையால்
உய்ய வுலகோ ரொருசிவமாய்த்—துய்ய
அறிவு நிலைவிளக்க மாக்கினேன் றட்டப்
பொறிசெறிவாய் நிற்கப் புகழ்ந்து. (எ)

## நூல்செய்த காரணம்.

குறிகுணங்க ளற்றொளிருங் கோதி லறிவை
அறியா வபக்குவர்க்கு யானும்—நெறியால்
அறிவு நிலைவிளக்க மற்பொடளித் தேன்மெய்
அறிவுடையா ரேற்றுவப்பா ராய்ந்து. (அ)

## நூற்பெயர்க்காரணம்.

அறிவுருவா நம்மை யமர்விப் பதனால்
அறிவு நிலைவிளக்க மாம்பேர்—செறியுமிந்நூல்
கற்றவரிந் நூற்பொருளை நன்குணர்ந் தின்புறுவார்
மற்றவரே லாரிதனை வாய்ந்து. (கூ)

## நூற்பயன்.

மனத்துருவைக் காட்டும் வளர்காத லோட்டும்
உனற்கரிய மாயையினை யோட்டும்—தனத்தால்
விளைதுக்கம் போக்கும் வெகுளி தணிக்கும்
தனைநீக்கு மிந்நூலின் சால்பு. (க0)

பாயிரம் முற்றிற்று.

---

171741

# நூல்.

புனித நிறைந்தநூல் புண்ணியநூல் கற்கின்
தனியிருத்தித் தானுக்குந் தாய்நூல்—மனிதரெனப்
பேர்பெற்ரு ரெல்லாம் பிறப்பறுக்கப் பார்க்குநூல்
சீர்பெருக்கு ஞான நூற் றேர். (க)

ஆசை யறுக்கு மகில மயல்போக்கும்
மாசை மனத்தின் மடியவைக்கும்—பாசத்தைத்
தூசாப் பறக்கடிக்குஞ் சுத்த நிலையளிக்கும்
தேசார்ந்த ஞானநூற் றேர். (உ)

கொலைப்பாவம் போக்குங் கொடும்பிறவி நீக்கும்
அலைசினத்தை மாற்றியறி வாக்கும்—இலையன்னம்
என்பார்க்குச் சோறளிக்கு மேதமிலா ஞானநூல்
கன்னிமயல் போக்குங் கடிது. (ங)

எண்ணு மனமு மெடுத்தகர மும்பார்த்த
கண்ணும் வலம்வந்த கால்களுமே—வண்ணப்
புனிதமுறச் செய்யும் பெரியார் புகன்ற
தனிஞான நூற்க டழைந்து. (ச)

ஈச னருளியநூ லெம்பகவா னர்ச்சுனற்குப்
பாச மகலப் பகர்ந்தநூல்—மாசில்
சனகர் சுகர்முதலோர் சாற்றியநூ லெல்லாம்
அனகநூன் ஞானநூ லாம். (ரு)

நால்வர்நூ னுன்மறைநூ னுலா யிரநூலும்
மால்வீட்டுங் கைவல்ய மாநூலும்—கோல்வேல்போல்
பாய்ந்து பவமறுக்கும் பாழ்வா சனைநீக்கும்
தேய்ந்துமன மாளச் செயும். (சு)

வேதாந்த நூலே விகற்ப மெலாமாய்க்கும்
வேதாந்த நூலல்லா வேறுநூல்—நாதாந்த
நன்னிலையைக் காட்டாது நாட்டும்பல் சங்கற்பம்
இன்னலைச் செய்யு மிழுத்து (எ)

அற்ப சுருதி யகற்றுமோ வையத்தைக்
கற்பமுணக் காட்டுங் கண்ணளிக்கா—நற்பொருளாம்
தற்பரனைக் காட்டிடற்குத் தக்கநூல் வேதாந்தம்
கற்பம் பிறப்பறுக்கா காண். (௮)

செவிச்சுவையை நாளுமுண்பான் சின்மயமா நிற்பான்
செவிச்சுவைய லாதெவையுந் தேடான்—செவிச்சுவையால்
ஆநந்த முற்றொளிர்வா னாரணத்தி னோக்கறிவான்
மோனமுற்று வாழ்வான் முனைந்து. (௯)

ஞானநூல் கேட்டியே னல்லார் தரிசனமாம்
ஞானநூ லற்பமென நாடாதே—ஞானநூல்
நல்லா ரநுபவநூ னம்பொருட்டாக் கூறியநூல்
கல்லாருங் கேட்கிற் கதி. (௧௦)

நினைக்கிற் புனித நிகழ்ஞான நூலே
உனைக்காணற் கான வுயர்நூல்—எனைக்காண
இந்நூலே சாதனமா யீங்கெற் கிருந்ததப்பா
எந்நூலு மொவ்வா திதற்கு. (௧௧)

ஞானநூல் கற்பதற்கு ஞாபகங் கொள்பவர்க்கிங்
கூனமிலா தோங்குநல மோதுவரார்—ஞானவுரு
அன்றேயா னாற்போல வாநந்த முற்றிடுவர்
மன்றேறிப் பேசிமகிழ் வார். (௧௨)

ஞானநூல் கற்றறிந்து நல்லுரைசெய் கின்றவரை
ஊன மனிதரென வுன்னுபவர்—ஈனப்
பிறப்புறுவர் மாறாது பேய்போ லலைவர்
சிறப்புற்ற மாணவனே தேர். (௧௩)

ஞானநூல் கற்றுணர்ந்து நல்லா ரநுபவத்தை
ஈனமறப் போதிக்கு மின்புலவோர்—மோனநிலை
அன்றே யடைந்திடுவ ரன்றே லரசுறுவார்
என்றே திடமாநீ யெண். (௧௪)

ஞானநூ லோர்ந்தவனை ஞாலத் தவாவறுத்து
ஞான மடைதலே நற்புண்யம்—ஞானநூல்
கற்றவனை நிற்கிலந்நூல் காணெழுத்தொவ் வொன்றினுக்கு
வெற்றியர சாம்பயனா மேல். (௧௫)

வேதமொடு கீதையும் வேதாந்த சூத்திரமும்
காதலரூர் கேட்டென்ன காலமெலாம்—காதலுக்கிங்
கோதுமுதற் காரணந்தா னுள்ளமா மென்றறிந்தால்
தீதுநெறி மாறுந் திகைத்து. (கசு)

வேதமுத லாநூல் விகற்பமறக் கற்றாலும்
கோதற்ற ஞானக் குறிவாரா—தீதற்ற
நன்மாணு நின்னறிவை நாடிப்பன் னுணின்றால்
புன்மா நிலநோக்குப் போம். (கஎ)

நான்மறையைப் பல்லாற்ரு ஞளும் படித்திடுவீர்
நான்மறையி னுட்பொருளை நன்கறியீர்—மான்மனத்தீர்
எற்றுக்குக் கற்றீ ரிதயதுக்க மூறுதற்கோ
பற்றறுத்தற் கோபகர்மின் பார்த்து. (கஅ)

அந்தமின்றிப் பன்னு ளரிதுகற்ற பேதநூல்
பந்த மதனைப் பறிக்காது—சொந்தமாம்
உன்வடிவைக் காட்டா துபசாந்த நல்காது
கன்மனத்தைப் போக்கா கரைத்து. (ககூ)

கற்று மகிழ்ந்துரைப்பார் காசினியோர் போற்றிடவே
மற்றதுதா னென்செய்யு மாளுங்கால்—சுற்றும்
மனநினைவின் சான்ருகி வான்வடிவா நிற்கின்
கனவாகுங் காணுலகங் காண். (உ0)

கற்கு முலகநூல் காத லழிக்காது
பற்றனைத்துஞ் சேர்க்கும் பயங்காட்டும்—செற்றம்
கடலளவாக் காண்பிக்குங் கன்றுதுய ரெல்லாம்
அடலுறவே யாக்கு மலைத்து. (உக)

அறிவறியுங் கல்வி யறிஞர்பால் கற்றுக்
குறிகுணங்க ணீங்கிக் குலவும்—அறிவாக்
கணமிருக்கின் முன்செய் கணக்கிறந்த கன்மம்
திணமனன்முன் சேர்பஞ்சாந் தீய்ந்து (உஉ)

நாமா ருலகமெது நாமுலகி லேனுற்ரேம்
போமாறே தென்று புரையின்றி—ஆமாறு
கற்ப தழகாகுங் கற்பனைக ளைந்தோடக்
கற்பனைமற் றைக்கல்வி காண். (உங)

கற்பார்கள் பற்பலவாக் கற்பான்யா ரென்றறியார்
அற்பமக் கல்வி யரணன்று—கற்பனைநூல்
பேசி மகிழ்ந்தழியும் பேதையர்பின் னென்னுவர்
மாசினையே கொள்வார் மருண்டு. (உச)

பிறவிக்கு வித்தாகும் பேதைமையைப் போக்கி
மறவினைமாய்த் தின்பநிலை வைக்கும்—திறஞான
வித்தையொன்றே வித்தையாம் வேறுய வித்தையெலாம்
சொத்தைவித்தை மித்தைவித்தை சூழ். (உரு)

வித்தை யிரண்டாகு மேதினியி லவ்விரண்டில்
சத்துணர்த்தா வித்தை சடவித்தை—சித்துணர்த்து
ஞானவித்தை சித்துவித்தை நன்மாணு வீதுணர்ந்தால்
ஊனமிலா வின்படைவா யுற்று. (உசு)

விஞ்ஞான வித்தைகற்கின் வேதனையெ லாநீரும்
அஞ்ஞான வித்தைகற்கி லாபத்தாம்—சுஞ்ஞான
வித்தையொன்றே வித்தையதாம் வேறுய வித்தையெலாம்
பித்தவித்தை யாமென்றே பேசு. (உஎ)

ஞானவித்தை கற்பாரே ஞாலத் தவாவறுப்பார்
ஏனைவித்தை கற்பா ரெவரேனும்—ஊனப்
பிறப்பா னவையெல்லாம் பெற்றுச் சுழன்றே
இறப்பார் பிறப்பார்பி னிங்கு. (உஅ)

அசையா திருக்க வறியார் படிப்பார்
அசையா திருப்பதுடம் பல்ல—அசையா
திருப்பதெனின் மெய்யுணர்வா யென்று மிருத்தல்
திருக்கறுமெய்ந் நோக்கிற் செறிந்து. (உகூ)

கற்றுணர்ந் தென்னபயன் காயம்பொய் யென்றறியார்
கற்றிடலேன் ஞானநூல் காமமறுர்—கற்றூர்க்
குலகெதுநா மாரென்ன வுத்தமர்பா னன்காய்ந்
திலகுணர்வா நிற்ற லெழில். (௩0)

கவிபாடு நற்றிறமுங் காவியமுங் கற்றுக்
குவிமனத்தார் போற்சபையிற் கூவி—அவிதேன்
கலந்துபெய் தாற்போற் கலகலெனப் பேசி
அலமருவார் செய்யா ரறம். (௩க)

படித்துணர்த லேனே பணங்காத் திடுவார்
நடித்தலறஞ் செய்வார்போ னன்றே—இடித்துப்
பிடித்திழுக்கும் போதுநமன் பிள்ளைபெண்டி ராளுேர்
துடித்தழுவார் போக்கிடார் துன்பு. (௩௨)

கேட்டறிதன் ஞானமொழி கேடிலறி வாகவன்றே
எட்டறிவென் செய்யு மெவர்க்குமே—எட்டறிவால்
நாட்டமுண் டாமோ நமனு ருறவழியக்
காட்டுநெறி யாமோ கதித்து. (௩௩)

கற்றுணர்ந் தென்னபயன் காற்றேத் துறுநினைவு
அற்றநிலை காணுத வப்போது—கற்றபடி
தானுக நில்லாதார் சங்கற்பம் வெல்வதெங்ஙன்
ஊனுதிப் பித்தே யுறும். (௩௪)

கடற்றிரைபோ லெண்ணினூல் கற்பா ருரைப்பார்
நடைப்பிணமா யிவ்வுடலை நாடார்—நடைப்பிணத்தைப்
பெண்டுபிள்ளை சுற்றம் பெரியர் சிறியரெனக்
கண்டு களிப்பார் கசிந்து. (௩௫)

கோலஞ் சிறந்து குணஞ்சிறந்து கோதற்ற
சீலஞ் சிறந்தவனே தேசிகனும்—ஞாலத்தில்
உண்டிச் சுவைக்கு முபசாரப் போற்றலுக்கும்
அண்டிபோ திப்பர்குரு வன்று. (௩௬)

பொக்கமுள போலிகுரு போதிக்கு மாவாக்யம்
தக்கவாக் காகாது சாந்திதரா—பக்குவர்கள்
செல்லா ரவன்பால் சிவஞான மில்லையெனக்
கல்லார்க் கவன்குருவாங் காண். (௩௭)

மனித வொழுக்க மருவிடினு நல்லோர்
மனிதரல வீசனென வாழ்த்து—வனிதையுடன்
வாழ்ந்தாலும் வாய்மைகெடார் வள்ளுவர்போ லென்றுநினை
தாழ்மையற்று வாழ்வாய் தழைந்து. (௩௮)

சாதனநான் கில்லார்க்குச் சாந்தநிலை சாற்றலொவ்வா
சாதனநான் குற்றோர்க்கே சாற்றினன்றும்—காதலற
ஞானி யுரைத்திடுவா னல்லார்க் குபதேசம்
ஞானியெனுன் றன்னை நயந்து. (௩௯)

சூனியமாம் பாழதனைத் தூளாக்கிச் சோதியுற
ஆனியிலாச் சீடர்க் கருண்மொழியை—ஞானகுரு
போதிப்பி னன்றுகும் புத்தி தெளியார்க்குப்
போதிக்கிற் றீங்கு புகும். (௪௦)

சகமறியச் சற்குருவாச் சாற்றியே நீதி
அகநிறையப் பத்தி யமையா—திகவாழ்வை
நீத்தார்போல் காட்டி நிலைக்க மடங்கட்டிக்
கூத்தாடு வாரோ குரு. (௪௧)

தடித்துச் சினங்கொள்ளார் தாமதர்போல் வஞ்சம்
அடித்தழித்த வாரியர்க ளாய்வாய்—படிப்பளவா
நிற்பார்போ லல்லர் நிமலபர மாநிற்பார்
கற்பனையை நீப்பார் கடிந்து. (௪௨)

உலகையழித் தாக்கு முணர்வினிலை காட்டி
நிலவவெளி யாக்கியே நின்னை—யிலகச்
சிவமாக்கிக் காட்டுஞ் சிவதே சிகனை
நவநவமாப் போற்றியுய்வாய் நன்கு. (௪௩)

அழித்தல் படைத்த லருமையாக் காத்தல்
செழித்ததொழின் மூன்றுந் தெரிந்தோர்—விழிப்பில்
அடுத்தநன் மாணவரை யாநந்த மாக்கி
வடுத்தவிர்க்கச் செய்வார் மதித்து. (௪௪)

உன்னை யறிந்திடுவா னுன்குணமுந் தானறிவான்
தன்னை யறிந்திலகு சற்குரவன்—உன்வடிவைத்
தானகக் கண்டிட்ட தன்மைய னுதவினல்
ஊனுக்கா னென்று முனை. (௪௫)

மந்ததரர் மந்தரொடு வாய்ப்பவரு தீவிரர்மெய்ச்
செந்தீ விரதரராச் செப்பவே—வந்தமைந்த
மாணவர்க ணிலையர் மற்றவர்தந் தன்மைகளை
மாணமையச் சொல்வேன் வகுத்து. (௪௬)

மந்ததர சீடர் மயலற்ற வாரியனைப்
பந்தநர னென்றே பகர்ந்திடுவார்—நிந்தையுரை
ஆடி மகிழ்ந்திடுவா ரான்மநிலை கண்டுணரார்
வாடியழு வார்நரகில் வாய்ந்து. (௪௭)

அதமகுண மந்த ரசுத்தவுண வுண்பார்
விதம்விதமா வுண்டுடுத்தி வீவார்—சதமா
உலகுடம்பைக் காண்பா ரொருபற்றும் போக்கார்
கலகமனச் சேட்டையரூர் காண். (சஅ)

காதலியை யெஞ்ஞான்றுங் காதலிக்குங் காமியைப்போல்
காதலற்ற வாரியனைக் காதலிப்பார்—கோதகலச்
சற்றுஞ்சோ ராமற் றனையறிய நிட்டைசெய்வார்
செற்றமறு தீவிரர்க டேர்ந்து. (சகூ)

எந்தவிடத் துற்றிடினு மேதமிலாச் சற்குரவன்
அந்தவிடத் தேசென் றடிபணிவார்—பந்தநிலை
வந்தவழி கேட்டு மகிழறிவ தாய்நிற்பார்
நிந்தையிலாத் தீவிரர்க ணோர்ந்து. (ரு0)

மனவழிபோ கார்காணி மாதர்பொன் பற்றூர்
கனவறிவே யாகிக் களிப்பார்—மனமாரச்
சிந்திப்பார் தேசிகனூர் செப்பியமா வாக்கியத்தை
அந்தமிகு தீவிரதரர் (ருக)

குருபத்தி யொன்றைக் குறைவறவே கொள்ளின்
வருபாச மாய்க்கவழி வாய்க்கும்—ஒருபிறப்பும்
வாரா வணமெய்தும் வாய்மைநிலை கைகூடும்
நேராய்ப் பணியு நிலம். (ருஉ)

ஒப்பில் குருசொல் லுபதேச மந்திரத்தைத்
தப்பின்றிச் சிந்திக்குஞ் சாந்தகுணன்—ஒப்பற்ற
மாணவரி லுத்தமனு மாதீரன் மாசூரன்
காணவரி தாவனிங்குக் காண். (ருங)

கேட்டவண மாரியன்பாற் கேடறவே சிந்திப்பார்
ஒட்டை மனத்துவழி யோடாது—காட்டைக்
களைந்துநன் னுடாக்குங் காவலனைப் போலக்
களைந்திடுவா ருட்கரணக் காடு. (ருச)

மந்தகுண நீங்குனக்கு மாவுளவோ வொன்றுளது
பந்தமறச் சிந்தித்துப் பாசமற—நிந்தையிலா
ஆரியனைக் கண்டுதொழ வன்பாநீ போகுங்கால்
வேரிமலர் கொண்டணைவாய் மிக்கு. (ருரு)

மருமலர்கொண் டாரியனர் வாழில்ல மெய்தி
அருணிறையன் ஞன்று ளர்ச்சி—மருளகல
உண்ணுதற் கெப்பொருள்க ளூற்றுலு மாரியனுக்
கெண்ணிநிவே தித்துண் ணினிது. (ருசு)

நீயுண்ப தாக நினைந்துண்ணே லெவ்வுணவும்
ஆயுன் குரவனுண்ப தாநினைந்துண்—நீயுணர
நானிருந்த வண்ணமுட ஞன்குருவைச் சார்ந்தமையும்
நானினக்குச் சொற்றே னயந்து. (ருஎ)

அடித்துக் குரவ னதட்டிவை தாலும்
துடித்து மனஞ்சிதறச் சொல்லார்—கடித்துப்பல்
முன்னிற்கார் நற்சீடர் முன்வினைக டீய்ந்தனவென்
றுன்னிக் களிப்புறுவா ரோர்ந்து. (ருஅ)

பிறவியலை நீத்துநமை பேரின்ப தீரத்
துறவுசெயு நற்குருவென் றுன்னித்—திறமா
நினைவார்க ளின்ப நிலையதனி னிற்பார்
மனைமுதலாம் பற்றகல வாய்ந்து (ருகூ)

அன்பில்லா மாணவரை யாய்ந்தறிபல் சாதனங்கள்
துன்பில்லா ஞானபரர் சொல்லியுள்ளார்—அன்னவைதாம்
ஞாயமின்றி வைதிடுதே னேவினைகள் செய்யவிடல்
சீயமெனச் சீறிடலாந் தேர். (சூ0)

தீயமனச் சேட்டையுனைச் சீரழித்த னன்குணர்ந்து
தூய வறிவாத் துலங்குகுரு—தீய
நினைவழிக்கக் கோபிப்பார் நின்பொருட்டான் மாணு
அனைவருக்குந் தாயா மவர். (சூக)

உள்ளிருக்குந் தீக்குணத்தை யொக்க வெளிக்கிழுத்துத்
தள்ள வடித்தழித்துத் தூய்தாக்கத்—தெள்ளுகுரு
கோபிப்பா ரன்புள்ளே குற்றமற வைத்ததனல்
கோபித்தல் குற்றமல கொள். (சூஉ)

குருவெறுப்ப தெல்லாங் கொடும்பாவம் போக்கக்
குருவெறுக்கார் வீணுக் கொதித்துக்—குருவெறுத்தால்.
பின்னணைப்பா ரன்பாகப் பேதைநினைப் போலல்லர்
அன்னைதந்தை யாவ ரறி. (சூங)

வைதிடி லாசிரியன் மாவரமா வேற்றிடுக
வைதற்கு நீசினந்து மாழ்காதே—வைதற்குக்
காரணந்தா னுண்டு கருதுமிடத் துச்சீடா
ஆரணவாக் காயுற் றறி. (சுச)

ஆரியனுர் தம்மை யகம்வெறுத்து நிந்திப்பார்
கூரியமா நல்லுணர்வைக் கூர்ந்தறியார்—பூரியராய்
உண்டுடுக்க வூணுடையற் றேயாக் கவலையுற்று
வண்டுபோ லெங்குமலை வார். (சரு)

ஆரியனை நிந்தித் தழிவினைகள் செய்பவர்கள்
மாரியிலா நெற்பயிர்போல் வாட்டமுற்றுப்—பாரினிலே
காடிக்கூழ் நீருமற்றுக் கட்டுதற்குங் கூறையற்று
வாடிடுவார் புன்மாண வர். (சுசு)

ஆரியனைச் சீறிடுவோ ரல்லறரு நோயுறுவார்
ஆரியனே யீசனென வன்புசெய்வோர்—பாரிலுளோர்
போற்ற விருப்பார் புனிதவறஞ் செய்திடுவார்
கூற்றுவனுர் போகார் கொதித்து. (சுஎ)

அய்யமற வாட்கொண்ட வாரியனைப் போற்றுரை
நய்யப் புடைத்துநம னுக்கறுப்பான்—வெய்யவனல்
வீழ்த்திச் சுடுவான் மிகச்சீழ் நிறைநரகில்
ஆழ்த்தி வதைப்பா னடித்து. (சுஅ)

கனிதரு தூய கருணைமே லீட்டால்
மனிதவுரு கொள்குருவை மாணு—வினிநீ
மனிதனென வெண்ணுதே மாதேவ னுக்கொள்
புனித முறுவாய் பொலிந்து. (சுகூ)

உள்ளபடி யானறிவா வுற்றுலு மாரியனே
கள்ளமனப் பேயென் றன் கண்ணின்று—தெள்ளறிவாம்
என்னை யுடம்பாக வெண்ணச்செய் கின்றதந்தோ
வென்னையினிச் செய்வே னிசை. (எ0)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருந்திருந்து
மெல்லமெல்லச் சங்கற்பம் விட்டுவந்தேன்—பொல்லலேனை
ஆண்டருளு தற்கா வருளுருக்கொ ளாரியனே
மாண்டவிருள் சூழ்ந்ததங்கே வந்து. (எக)

கண்டெரியார் காரிருளிற் காறடுக்கி வீழ்வதுபோல்
மண்டிருளி னின்று மயங்கினயான்—கண்டதங்கே
என்னென் றுரைப்பே னிருண்மயத்தை யல்லாமல்
அன்னேவே றில்லைதுணை யாள். (எஉ)

நிலையுற் றிருந்திடுங்கா னீள்பெருந்தூக் கத்தால்
தலைசாய்ந்து சற்றுத் தயங்கித்—தொலையா
இருண்மயமாக் கண்டப்பா லெட்டிப்பார்த் தாலும்
இருளன்றி வேறறியே னே. (எங)

நிற்கநிற்கத் தூக்கவிரு ணீங்கா தெழுந்தெழுந்து
மற்சமர்செய் துர்ச்சனர்போல் வாட்டுகின்ற—தற்பனியான்
என்செய்வே னென்றிரங்கி யேங்குகின்ற மாணவனுக்
குன்னிப் புகல்வா னுளவு. (எச)

சுழுத்திதனைப் பாழிருளாச் சொல்வார் சினந்துள்
அழுத்ததனைப் பாழாக் கறிஞர்—விழித்துப்
பார்த்தெனக்கு நன்றுப் பகர்ந்திடுதி யூன்மயமாம்
வேர்க்குமுடல் வேறுநீ வேறு. (எரு)

தோன்று மிருளேச் சுகமெனநீ பாராமல்
ஊன்றியிரு ளெங்கே யுதிப்பதெனச்—சான்று
இருந்துநீ பார்க்கி லிருளழியும் யானும்
இருந்தவணஞ் சொற்றிட்டே னிங்கு. (எசு)

இருள்வேறுக் காண்பவனு ரென்றுன்னி யாய்ந்தால்
தெருள்வடிவ மங்கே திகழும்—இருள்வடிவைக்
காணுநான் மெய்யிருள் கற்பனையென் றோர்வாயேல்
காணுமிருட் காணுமோ காண். (எஎ)

எங்கிருந் தந்த விருளெழு கின்றதென்று
பங்கமற வுன்னியுன்னிப் பார்த்துப்பார்த்—தங்கறிவா
நிற்கநிற்கப் பானுமுனே நின்றவிருள் போலழியும்
ஒற்கவஞ் ஞானவிரு ளோர். (எஅ)

சுழுத்தியற்றுத் தன்னிலையைச் சோதித்துக் கண்டோர்
பழிப்பற்றுப் பாவமற்றுப் பாராண்—டொழித்திருளை
ஞானவொளி காண்பார்க ணல்லறிவை யென்மாணு
ஊனமற வுண்முகமா வோர். (எகூ)

நீயறிவா நிற்கி னினைவுசிறி தும்வாரா
நீயறிவா நில்லாயே னின்கண்ணே—யேயவரும்
திங்க ளிடங்களங்கஞ் சேர்ந்தாற்போ லேநினைவு
துங்கமா நிற்கத் துணி. (அ0)

நீசிவ னென்பாய் நிணவுடம்பைப் போக்கறியாய்
நீசிவ னல்ல நிமலவெளி—நீசீராக்
காணளவு நானென்று காயமயக் கேயாது
மாணறிவா நிற்பாய் மகிழ்ந்து. (அக)

திரைமாயை நீக்கிச் சிதம்பரமே யாகி
உரையா லுரைப்பதனுக் கொண்ணுப்—பரையகன்ற
சச்சிதா நந்தசிவ சாமியா னென்றுன்னி
அச்சமின்றி நிட்டைபுரி யார்ந்து. (அஉ)

திரையா விரண்டு செறியுமவற் றொன்று
நரையுடல்யா னென்று நவிறல்—கரையகன்ற
மற்றோர் திரைபொருளே மாணவென தென்னலவை
செற்றாரே முத்தர் சிறந்து. (அங)

யானென தென்ன வறையுந் திரையிரண்டுள்
வானென நிற்கும் வகைசாரின்—கானெனவே
ஓங்கிவரு முன்ன தொழியு மதுமாயின்
தீங்குறென தென்னலறுந் தேய்ந்து. (அச)

தடியுடம்பு நாட்டந் தடிக்கிற் றுயராம்
தடியுடம்பை மண்ணுத் தகர்த்துப்—படியும்
அடிப்பானை தட்டி யடுக்கழிப்பார் போலத்
துடிப்பா மவித்தையழி சூழ்ந்து (அரு)

அன்றியுந் தன்னை யறியா வணமறைக்கும்
கன்றுதடை மூன்றென்பார் கண்டவர்கள்—துன்றத்
தடைக டமைநினக்குச் சங்கையறு மாறு
அடைவுடனே சொல்வே னமைந்து. (அசு)

மலம்விட்சே பம்மா வரணமா மூன்றுள்
மலம்பாவம் விட்சேபம் வன்னெஞ்—சலைவதுவாம்
ஆவரண மாமறைப்பா மான்மவொளி காண்டற்கு
மேவவைகண் முத்தடையா மிக்கு. (அஎ)

மலநெஞ்சைப் புண்ணுக்கும் வல்விடமே போல
விலக வதுதான் விரைந்து—தலயாத்ரை
முந்தை யறங்கண் மொழியுநிட் காமமாச்
சிந்தை யடங்கிவரச் செய். (அஅ)

பவம்போக் குபாயம் பலவா மவைதாம்
அவமழிக் குஞ்சரியை யாற்றல்—நவநவமா
அன்னமிட லற்றூர்க் கரன்றெண் டடியவர்தொண்
டின்னலறச் செய்வதென வெண். (அகூ)

விட்சேபத் தன்மை ளிளம்பக்கே ளென்மாணு
விட்சேப முண்ணடுக்க மேவுவிக்கும்—பட்ச
முருகன் கணபதி முக்கணன்கோ விந்தன்
குருவையர்ச் சிக்கினீங் கும். (கூ0)

பாவ வலைவற்றுப் பாரின்பற் றற்றூலும்
ஆவதொன் றில்லையே யாதிபரன்—மேவருளால்
காணரிய காரிருளாக் காணு வரணத்தை
மாணவநீ மாற்றிடலே மாண்பு. (கூக)

இருண்ட வடிவா யிலகா வரணம்
தெருண்டவெரி யாலுமே தீயா—மருண்ட
மனமுடையார் நீக்க வரிதாமால் காட்டிக்
கவரு மனத்தையது காண். (கூஉ)

இருண்மயமா யுன்னு ளெழுமா வரணம்
மருளற்ற வேதாந்த மாநூல்—வெருளறநீ
ஆரியன்பாற் கேட்டுணர்ந் தந்தவண நிற்கிலறும்
நேரிதுவா மாணவனே நில். (கூங)

ஆரியனுர் சொற்ற வருள்வாக்கை யுட்கொண்டு
கூரிய நல்லறிவாற் கோதிருளை—ஆரியனைச்
சிந்தித்துட் கொண்டு சிதைத்துக் கெடுத்துவிடின்
வந்திடுமே யின்ப மலிந்து. (கூச)

உணர்வுருவு நானென்வே யோயாம லுன்னில்
கணமுங்கீதான் றுதொழியுங் காமம்—திணமாக
நினைவிற் றடிக்காது நீயுணர்வா நிற்பாய்
தனையறியுஞ் சாதனமீ தாம். (கூரு)

**கோ**ணுக் குருவடிவங் கொண்டவையாக் கண்ணரன்முன்
மாணு வெனவழைத்து வைத்தருகிற்—சேணூர்
சுழுத்திக்குஞ் சான்றாத் துலங்குநெறி தன்னை
வழுத்தியெனைக் காத்தான் மகிழ்ந்து. (கசு)

**அ**ல்லும் பகலுமெனை யாதரித்தென் னுள்ளிருந்து
சொல்லரிய வின்பச் சுவைகாட்டித்—தொல்லை
வினையை யறுத்தகற்றி வெட்டவெளி யாக்கி
எனையறிவாச் செய்தா னியைந்து. (கஎ)

**எ**ங்கினைவு மின்றி யெழிற்சிவநா னென்றனக்
கன்னிய மில்லையென் றோர்த்தியுடன்—மன்னியே
சிந்தனைசெய் வாயேற் சிவமாக வேவிளங்கிப்
பந்த மறுப்பாய் பகைத்து. (கஅ)

**உ**டல்வே றுயிர்வேறு வோயாமற் கண்டால்
கடநே ருடம்பாற் கலங்காய்—திடமாக்
கடவெளிகாட் டென்றாற் கடமுடைத்தோ காட்டல்
கடவுடம்பி னீவெளியாக் காண். (கக)

**எ**னக்குச் சரீரமில்லை யேகவெளி யான்றான்
எனக்குநீ வேறில்லை யென்றும்—மனமயக்கால்
வேறென்று காண்பதலால் வேறில்லை நீசிவமாம்
வேறெண்ணு தங்நிலைநீ மேவு. (க00)

**அ**வத்தை யபிமானி யாக்கையுநீ யன்று
பவத்தை யழிக்கும் பரனீ—தவத்தலைவ
இவ்வுண்மை நீமுன் னியற்றிய நற்றவத்தால்
செவ்விதாச் சொற்றேன் றெளி. (க0க)

**வே**ண்டலற் றன்பருக்கு வேண்டியவா றன்னமிட்டு
வேண்டிக்கேட் டுண்மைநிலை வேட்கைதனைத்—தாண்டியே
நிற்கி லறிந்திடுவாய் நித்தசுத்த வுன்னுருவை
நற்குணத்து மாணவனே நன்கு. (க0உ)

**ப**ழுதைமெய்யாப் பாம்புபொய்யாப் பார்ப்பதுபோன் மாணு
பழுதிலுனை யும்புவியும் பாராய்—வழுவறவே
உன்னையே நோக்கி யுணர்வா யிருப்பாயேல்
பின்னைமய லோயுமிது பேண். (க0ஙு)

ஆனதனுன் மாணு வறைந்தவண முற்றிருநீ
மோனப் பெருவாழ்வு முற்றளவும்—ஞான
சொரூப நிலைமறந்தாற் சோகமன மோங்கி
வெருவ வலைக்கும் வெகுண்டு. (க0௪)

தடைகள் பலவாந் தனையறிதற் கந்தத்
தடைகளுண் மூன்றுதடை தம்மைத்—தடைகடந்த
தக்கோர் கொடியனவாச் சாற்றி யுளாரவற்றை
ஒக்கவறை வேன்கே ளுவந்து. (க0ரு)

மனவாக்குக் காயமே வன்முத் தடையென்
றனகநூ லெல்லா மறையும்—தினமுநீ
மாறு தறிவு வடிவாக மன்னியிரு
மீறு தவைமடியும் வெந்து. (க0சு)

திரிகரணத் தின்னுருவைச் செப்புவன்கேண் மாணு
கரிவடிவாய் நின்றன்னைக் காட்ட—விரியும்
மனத்துருவஞ் சங்கற்ப மண்ணுருவங் காயம்
கனத்தவுரை வாக்குருவங் காண். (க0எ)

பெண்மயக்கும் பொன்மயக்கும் பேண்மண் மயக்குமென
உண்மயக் கும்பொருள்க ளோர்மூன்றும்—நண்ணிவற்றை
எண்ணிக் களிக்கா திருக்கி லவையொழியும்
மண்ணிற் பிறப்பதறும் வாய்ந்து. (க0அ)

மனமடங்கின் காயமொடு வாயு மடங்கும்
கனவறிவை யப்போதே காண்பாய்—மனமோ
அரிகரியைச் சால வலைப்பதே போல
விரியறி வையலைக்கு மிக்கு. (க0கூ)

சூர னியானென்னுஞ் சுத்தமுத்தன் யானென்னும்
மார னியானென்னு மன்னனெனும்—தீரர்
எனைப்போல்வா ரிவ்வுலகி லெங்குமலை யென்னும்
சினைத்துவளர் நெஞ்சந் திகைத்து. (கக0)

கைகால் கழுத்தசைக்குங் கண்சிமிட்டும் பொல்லாத
மைகாண்கண் ணார்வயமா மாழ்குவிக்கும்—வைகால்
உதைபடச்செய் விக்குங்கை யோட்டை யளிக்கும்
வதைபலசெய் விக்கு மனம். (ககக)

நல்லாரை நிந்திக்கு நன்னெறியைக் கண்டிக்கும்
எல்லாருந் தூற்ற விசைவிக்கும்—பொல்லா
வினைபலவுஞ் செய்விக்கும் வேதன்மய மாக்கும்
தினையளவு சீரின்மனத் தெவ்வு. (ககஉ)

படித்தாரைப் போனடிக்கும் பாவையர்கண் ணோக்கால்
துடித்தழுங்கு மன்னுர் தொடரப்—படிப்பதுவிட்
டென்றுமவர் பாலே யிருக்கவுற வாக்குவிக்கும்
வன்றுயரே யாக்கு மனம். (ககங)

அத்தியரி கோடிசேர்ந் தாலுமென் னுமனமுன்
சித்தர் முனிவரொடு தேவரெலாம்—செத்தழிய
அந்தோ மனஞ்செய்த தாயிற் கணக்கின்றாம்
பந்தமென்ப திம்மனமே பார். (ககச)

எத்தனையோ பேர்களுள விம்மனத்திற் கிட்டழைக்க
அத்தனையுங் கூற லரிதாகும்—பத்தனே
பந்தமெனல் வீடென்னல் பாவமெனல் புண்யமெனல்
சிந்தனையே யாகுந் தெளி. (ககரு)

உலகமுத லானென்னு மும்பர் பதங்கட்
கிலகு மரசனு னென்னும்—கலகலெனப்
பற்பலவா கப்பேசும் பண்டிதனு னென்றுரைக்கும்
அற்பகுண நெஞ்ச மறி. (ககசூ)

நாமரூ பத்தினையே நாடோறு நாடுமனம்
காமநெறி தம்மையே கைப்பிடிக்கும்—வாமநெறி
பூசைபுரி வேனென்னும் பொற்புடையே னென்றுரைக்கும்
ஆசைவலை யுற்றலையு மார்த்து. (ககஎ)

நல்லாரைத் தூடிக்கு நன்மையற்றா ரைப்போற்றும்
பல்லாற்றா னும்பொருளைப் பற்றவெ ணும்—பொல்லாப்
பணத்தாசை யாலெவர்க்கும் பாவமிக வாக்கும்
நிணத்தாசை கொண்டமனம் நேர்ந்து. (ககஅ)

சென்றதெல் லாங்கருதுஞ் சேர்க்கவெ ணும் பொன்காணி
கொன்றுண்ண யாவருக்குங் கூறுமறம்—மன்றில்
நடிக்குமர னில்லையெனு ஞாலமெய் யென்னும்
கடிக்குநாய் போன்றமனங் காண். (கககூ)

தன்மைந்தன் லோபனெடு தான்பிரியா தேயிருந்து
தன்மமென் பார்க டமைவையும்—அன்னியர்தம்
பன்னியரை வேட்டுப் பதைபதைத் தின்னலுற்று
வன்னியிழு தாகு மனம். (கஉ0)

பேசி மகிழும்வீண் பேதைகளை யேமாற்றும்
வேசிக்குப் பொன்னீய வேட்கைகொளும்—ஆசில்
அறிவுநூல் கல்லா தகிலநூல் கற்கும்
நெறியறியா தோடுமன நீண்டு. (கஉக)

கள்ளர் புகுந்து கலக்குவது போலுன்னைக்
கள்ளமனந் தானுங் கலக்குமறி—உள்ள
நிலைவிளங்கா வண்ண நினைவுமய மாக்கும்
கலையாம லுன்னிலையைக் கா. (கஉஉ)

உலகனைத்து மென்னரசென் றோதுமொழி யாமல்
கலகஞ் செயும்பொய் கழறும்—விலகலின்றிப்
போலி வழக்கைப் பொருத்துவிக்கும் பூசலிடும்
வாலியலில் லாதமனம் வாய்ந்து. (கஉங)

பொன்னுருவாச் சேரும் புகழுரையாய் வந்தணுகும்
கன்னியுருக் கொண்டெதிரே காணவரும்—முன்னுள்ள
வாசனையா வந்தழிக்கும் வாதுசெய வந்தழைக்கும்
பாசமன மீறிப் பதைத்து. (கஉச)

பெண்கனகம் பிள்ளையிடம் பித்தாக்கு முள்ளிருந்து
மண்மயக்கைத் தந்துமிக மாழ்குவிக்கும்—எண்ணிலவாப்
பொன்சேர்க்க முன்முயலும் பொய்யதனை மெய்யென்னும்
வன்மனமாம் பேய்தான் மருண்டு. (கஉரு)

நன்றி மறக்கு நலம்போக்குந் தீதளிக்கும்
பன்றியைப்போற் சுத்தமொன்றும் பாராமல்-கொண்றுண்ணும்
தீயா ருறவாக்குஞ் சேட்டைசெய முன்னிற்கும்
ஓயா தலையுமன முன். (கஉசு)

என்னொருவன் றன்னலே யிவ்வுலக நிற்பதெனும்
என்னைவிட்டா லெங்கிருக்கு மிம்பரென்னும்—பின்னைப்
பிறப்பிறப் பின்றென்னும் பேரறிவே தென்னும்
சிறப்பழிக்குங் கள்ளமனந் தேர். (கஉஎ)

தாயைப் பழித்துரைக்குந் தந்தையென்று சாவனெனும்
நாயையொத்து நாரியரை நாடிநிற்கும்—மாயை
பலவுஞ் செயநோக்கும் பண்பற்றார் பானின்
றுலவ விரும்பு முளம். (கஉஅ)

அலைவே யுருவா யமைந்த மனந்தான்
கலைகற்கு மெய்யுணர்வைக் காணு—நிலையுணர்ந்த
நல்லாரை வம்பிழுத்து ஞாய நெறிநீத்துப்
பொல்லாத தர்க்கமிடும் புக்கு. (கஉசூ)

சந்துவிட வந்ததெனச் சாற்றும் பழமொழிபோல்
பந்தமனம் வந்துவிடும் பார்த்துவழி—எந்த
விதத்தேனு முன்றன்னை யேமாற்றி யீர்த்திங்
கதத்திலே சேர்க்குமீ தாய். (கந௦)

அணுவைமகத் தாக்கு மதனையணு வாக்கும்
அணுமகத் தாகா வகந்தான்—அணுமகத்தாத்
தோன்று முருவெல்லாந் தொல்லை மனத்துருவென்
றான்றி யறிவாய்நீ யுற்று. (கநக)

கனவுடம்பின் புன்சுகத்தைக் கண்டுவக்கச் செய்யும்
தினமுடல மாடநடஞ் செய்யும்—தனம்பலவாச்
சேர்க்குமற நோக்கர்து சித்துவித்தை யேசெய்யும்
ஆர்த்துருக்கும் பொல்லா வகம். (கநஉ)

ஆடுமெழுந் தோடு மளவில்பொருள் சேர்த்துவைக்கும்
பாடும்பல் பாவையரைப் பார்த்துவக்கும்—வீடுகின்ற
மூன்றுலகு நன்காளு முத்திநெறி யேதென்னும்
தோன்றுவதெ லாம்பேசுஞ் சூழ்ந்து. (கநந)

கள்ளமன துள்ளவர்கள் கைக்கொள்ளா ரீசனருள்
விள்ளரிய ஞான விமலசிவ—வள்ளல்
இருக்குமிடந் தூரமென வெண்ணுவார் மாணு
செருக்குடை யாரிவரே தேர். (கநச)

பொய்க்கே யலைந்தழியும் போற்றவறஞ் செய்யாது
பொய்யைமெய் யாக்கிப் புனைந்துரைக்கும்—துய்யராம்
நல்லாரைப் போற்றாது ஞானநெறி கேளாது
நில்லா தலையுமன நேர்ந்து. (கநரு)

திரியுலகு மோர்நொடிக்குட் சென்றுலவி மீளும்
நரிபோற் பலசூழ்ச்சி நாடும்—அரியபொருள்
காண முயலாது காமவேள் சேனைகளைக்
காண முயலுமனங் காண். (கரு௬)

தக்கார்சொற் கேளாது தன்னுரையே தீர்ப்பென்னும்
பக்கத்தார் கூறினுற் பன்னீதி—மிக்கதெனை
ஒப்பாது போவென் றுதடோடு பற்கடிக்கும்
எப்பாவ முஞ்செயுநெஞ் சேய்ந்து. (கரு௭)

மனமின்றே யின்றுசை வாதுரைத்த தில்லை
இனமாப் பொருள்சேர்த்த தில்லை—நனவோடு
சொப்பனமு மில்லை சுழுத்தியென்ப தும்மில்லை
தப்பென்ப தோன்றுமிலை தான். (கரு௮)

புகழி னணிமகிழும் பூதவுட லாட்டி
இகழிற் சுளித்துமிக வேங்கும்—சுகதுக்கம்
என்னு மிரண்டா லிடர்ப்பட்டு வாட்டமுறும்
பன்னுமன யூகம் பதைத்து. (கரு௯)

நல்லார் சபையிருந்து ஞானநூல் கேட்டிடுங்கால்
பொல்லா மனந்தான் புகைந்தெழுந்து—நில்லாமல்
இந்திரிய வாயிலா லெங்கெங்கோ வோடியலைந்
தந்தரமா நிற்கு மறி. (கச௦)

பார்க்குஞ் சிரிக்கும் பகைவனிவன் முன்னெனவே
ஆர்க்குங்கை காறலையை யாட்டுமே—யார்க்கும்
தலைவனு னென்னுநூல் சங்கையறக் கற்றோர்
இலையெனைப்போ லென்னுமன வேறு. (கசக)

அலகிலா வாசையெனு மாழிதனி லாழ்த்திக்
கலகம் விளைத்துக் கசக்கி—மலமனந்தான்
தந்தைதாய் தாரந் தனையனம்மான் மாமியெனப்
பந்தமெலாங் காட்டும் பரந்து. (கச௨)

பந்தமெனும் பல்கயிற்றுற் பாழ்த்தமனம் கட்டியகட்
டெந்தவிதத் தாலு மிழுத்தறுத்தல்—அந்தந்தோ
மாக்கட்டம் மாக்கட்டம் வஞ்சமனக் கட்டாலே
ஏக்கமெலாஞ் சேரு மியைந்து (கச௩)

பொன்னோர் கயிறு புதல்வ ரொருகயிறு
மன்னு மனைவியொரு வன்கயிறு—பன்னிவற்றால்
சிக்கவே கட்டிநமைத் தீங்குறவே செய்விக்கும்
துக்க மனந்தான் றுடித்து. (கசச)

சூலங்குடி வாழ்வென்னுங் கொள்கயிற்றாற் கட்டித்
தலமதிலில் லாங்குழியிற் றள்ளி—மலமருந்தை
ஈந்து மயக்கி யிறக்கிலிடு காட்டிலிடும்
காந்துமன நாளுங் கறுத்து. (கசரு)

மண்ணாதி யாகவரும் வாதனையெ லாம்பெருக்கும்
பெண்ணாகி வந்தணைந்து பிள்ளைபெறும்—மண்ணும்
உடம்பைத்தா னென்னு மொளியாடி பார்க்கும்
மடம்படைத்த பொல்லா மனம். (கசசூ)

ஏமனுக்கு நல்விருந்தா விவ்வுடம்பை யீயுமனம்
நாமரூ பம்மயமா நாளுமே—காமனும்
பிள்ளை யுடன்கூடிப் பேதையருக் காளாக்கும்
கள்ளையெலாஞ் செய்யுந் தனித்து. (கசஎ)

ஆள்சேர்த்து நல்லார்க் கழிதுன்பஞ் செய்யும்பல்
கோள்விளைக்கும் நெஞ்சக் கொடுவஞ்சன்—வேள்காமன்
ராகத் துவேடனி ரத்தக்கண் கோபன்முதல்
ஆகவிவர் சேர்த்தழிக்கு மார்த்து. (கசஅ)

இப்பாவ நெஞ்சகமே யில்லை சுவர்க்கமெனும்
தப்பா தவச்செயலைத் தான்செய்யும்—செப்பறத்தின்
வீதியினிற் செல்வார்க்கு விக்கினமெ லாஞ்செய்யும்
நீதியெங்கே யென்னுமெதிர் நின்று. (கசகூ)

மாதருரு வேநோக்கு மாசபையிற் சென்றாலும்
காதலாத் தீயரையே கண்டணுகும்—சாதரூன்
உண்மையெனக் காணா துலுத்தரையே நேசிக்கும்
வண்மையறு தீயமனம் வாய்ந்து. (கடுO)

பெண்டின்பம் வேட்கும் பிணிமூப்பி னல்வருந்தும்
பண்டுசெய்த வெல்லாம் பகர்ந்தேங்கும்—வண்டுபோல்
ஓடும் பலவா வுறுநோயைத் தாளாமல்
வாடு மழுமான் மனம். (கடுக)

**பா**வம் பலவும் பரிந்துசெய்தே னென்னும்
நாவல் படித்து நலமிழந்து—பாவைநிகர்
பெண்மயலாற் கெட்டேனன் பித்தரைப்போ லென்றலறும்
வண்மைகெட்ட போது மனம். (௧௫௨)

**இ**றக்கா திருக்குநெறி யெங்ஙனமென் றெண்ணும்
அறக்கருணை கொள்ளா தணுவும்—புறப்படிப்பால்
இல்லைசுக மென்றழு தேக்கமுறுஞ் சாகுங்கால்
கல்லை நிகர்த்தமனங் காண். (௧௫௩)

**செ**த்து விடுவனெனத் தேரும லையையோ
சொத்தையுடன் மெய்யாத் துணிந்தியான்—அத்தா
அறியாமற் செய்தபவம் யாவும்போக் கென்னும்
அறிவறியாத் தீயமன மாய். (௧௫௪)

**நி**னைந்து பலவற்றை நீசமன மந்தோ
மனையை யழைத்து மருங்கில்—தினையளவும்
குற்றம் வாராதவணங் கோதாய் பொருள்போற்றிக்
கற்றவணீ காவென்னுங் கற்பு. (௧௫௫)

**மே**னகையி னுட்புகுந்து மிக்கதவ கௌசிகன்றன்
மானந் தவம்பெருமை மாய்த்துமனம்—மானை
அனையவொரு பெண்மணியை யன்றளித்த தன்மை
நினைவையே னிற்பாய் நிலை. (௧௫௬)

**வ**ன்னி யெனவெரிக்கும் வஞ்சப் பொறிவென்ற
இன்னலிலாக் கோதமனு ரில்லாளைப்—பொன்னுலகை
ஆளு மகவா னணைந்துடம்பிற் கண்களுறக்
கோளிழைத்த திம்மனமாங் கூற்று. (௧௫௭)

**கா**ட்டிலுற்ற கௌதமன்றன் காந்தை யகலிகையைக்
காட்டிப்பொன் னாடனுக்குக் காயமெலாம்—நாட்டங்கள்
தந்தது தீமனமே தக்கவனே யம்மனத்தை
வெந்தழியச் செய்வாய் விரைந்து. (௧௫௮)

**ப**ன்னியர்கண் மிக்கழகாப் பாங்கிருக்க விண்ணரசன்
தன்னை மயக்கித் தனித்தயலார்—வன்ன
மனைபுகுத்திச் சுத்த மதியழித்த தந்தோ
தினையளவாஞ் சிந்தை தெளி. (௧௫௯)

மான்மனமே மோகினியா வந்திடக்கண் டீச்சுரனுர்
தோன்மினுக்கி ஞலவளைத் தொட்டிழிந்தார்—மேன்மை
அரிகரப்பேர் புத்திரனு ராங்குதித்தா ரென்னும்
விரிகதையுண் டாய்ந்துளத்தை வெல். (கசுo)

வெள்ளி மலைக்கரசை வேறுபடச் செய்தமனம்
கள்ளத் துறவிகளைக் காயாதோ—துள்ளுமனச்
சேட்டைப் படிசெல்லிற் சீர்குலைவாய் நண்ணுர்க்குக்
காட்டிக் கொடுக்குமது காண். (கசுக)

கலகமனச் சேட்டைவழிக் காதலித்துச் சென்ருல்
கலகம் விளைக்குங் கறுத்து—நிலவாழ்வில்
இன்புளதாக் காட்டி யெளிதாக வுட்புகுந்து
துன்புறவே செய்யுந் தொடர்ந்து. (கசுஉ)

எத்தகைய ரேனு மிடர்மனம்போற் செல்லினவர்
சுத்த குணத்தைத் துரத்திவிடும்—சுத்தரைத்
திட்டி யடித்துமிகச் சேர்க்கும் பவத்தையென்றும்
கட்டிநமன் பாலீயுங் காய்ந்து. (கசுங)

சலிக்குந் தகையமனஞ் சாந்தம் பெருது
வலிக்கும் பலசண்டை வம்பு—கலித்தெலிகள்
வாசனையாற் சிற்றுண்டி வைத்தவிடங் கண்டடல்போல்
நாசஞ் செயுமறிவை நாடு. (கசுச)

மடிக்கண் பணமிருந்தான் மார்க்கத்தச் சம்போல்
துடிக்குமன முள்ளளவுந் துன்பே—படிக்கணுறும்
எள்ளளவு முண்மைபுணர் வெய்துநெறி தோன்ருது
கள்ளமே தோன்றுங் கதித்து. (கசுரு)

குழந்தைபோ லோடிக் குதித்தடையுந் துன்பம்
அழுந்திகைக்கும் பொய்யே யறையும்—பழம்பால்போல்
சொல்லும்பன் னீதிகளைச் சோறிடா தேழைகட்குக்
கல்லொத்த தீயமனங் கைத்து. (கசுசு)

சத்தையசத் தாக்கும சத்தைச்சத் தாக்கிவிடும்
சுத்தமிலா மூடரையே தோத்தரிக்கும்—வித்தகரைக்
கண்டிகழக் கற்பிக்குங் காயமழி யாதென்னும்
பெண்டிர்சொற் கேட்குமனப் பேய். (கசுஎ)

எண்ணுமெண்ண மேவடிவா யேயு மனந்தான்
அணுவளவாப் பொன்ன ணுகி னஃதை—நணுகி
மகத்தாகக் கொண்டு மதியழியச் செய்யும்
இகத்தும் பரத்து மியைந்து. (கசூஅ)

அருளே திருவுருவா மல்லமா தேவை
இருளுருவ மாய விதயம்—மருள
இருண்டபெருங் காட்டி விழுத்ததெனி லீசன்
அருளிலரை யென்செய்யா தார்த்து. (கசூகூ)

பலவேடங் கொண்டுமனம் பாசத்தில் வீழ்த்தும்
புலவேடர்க் காளாக்கும் போத—நலமகற்றும்
பொய்யர் புகலும் புகழிற்கே யேங்குமதைத்
துய்யவறி வாலழிக்கச் சூழ். (கஎ0)

கரியரிக ளிட்டபணி காணச் செயுமேல்
அரிய மனம்பணியே னுற்று—தெரியக்கேள்
நன்னயதி யானமொடு ஞானவிசா ரஞ்செய்தால்
சொன்னபடி கேட்குந் தொடர்ந்து. (கஎக)

மனமடக்கக் கல்லார்க்கேன் வாயென்ன லோர்ந்தும்
மனமடக்கக் கல்லாத வாறென்—மனமடக்க
அன்னங் குறைமுன் னழிபொறிச்சேட் டையொடுங்கும்
நன்னிட்டை கூடு நயந்து. (கஎஉ)

சடமனத்தைத் தானடக்கத் தக்கோர் பலநூல்
திடமாகச் சொற்றார் தெளிய—மடமற்ற
உத்தி பலவகையுண் டுண்டுபல மந்திரங்கள்
நத்தியநட் டித்திடவை நன்கு. (கஎங)

கண்டையைப்போற் றுள்ளிப்புன் கள்ளரைப்போ லோடுள
தண்டனை செய்யுமுறை தாமுணரார்—மண்டலத்தில் [த்தைத்
கண்டதையே கண்டுபினுங் காலங் கழித்திடுவார்
அண்டர்பிரா னைப்போற்றா ராய்ந்து. (கஎச)

எக்கலையும் போற்றுகின்ற வின்புருவ னென்று
துக்கமறச் சிந்தனைசெய் தூலமறப்—நெக்குருகிச்
சிந்திக்கச் சிந்திக்கத் தீயமன மற்றொழியப்
பந்தமற்று நின்றொளிர்வாய் பார்த்து. (கஎரு)

இட்டமாத் தெய்வத்தை யேதமறச் சிந்திக்கின்
துட்டமனச் சேட்டைத் தொலைந்துவிடும்—சிட்டனே
இந்த வுபாசனையை யெம்பகவா னர்ச்சுனற்குச்
சிந்தையறப் போதித்தான் றேர்ந்து. (கஎசு)

சிட்டிதிதி சம்மாரஞ் செய்யுந் தவத்தரையும்
கட்டி யுருட்டிக் கனதவங்கள்—நட்டமுறச்
செய்ததுநெஞ் சாகுமத் தீமனத்தை வெல்வதற்குத்
துய்யசிவ பூசனைசெய் சூழ்ந்து. (கஎஎ)

நால்வரைநல் லீச்சுரனு ஞான வுபாசனையில்
மால்வளர்க்கு நெஞ்சழிக்க மன்னவைத்தான்—மால்போக்
குபாசனையே நெஞ்சலைவை யோட்டற் குரிய
உபாய மெனநீ யுணர். (கஎஅ)

எத்தெய்வ மேனு மிகழாதே யன்புமிகுந்
தெத்தெய்வ மும்பிரம மென்றறிந்து—பத்தனே
பேதமறச் சிந்தி பிணங்கு மனச்சேட்டை
வாதமறு ஞானம் வரும். (கஎகூ)

பலபலவாத் தெய்வங்கள் பாரிலுள வென்று
நலதலங்க ளோடி நலியேல்—பலதலநீ
சுற்றிற் பயனடையாய் துட்டப் பொறிகடமைச்
செற்று மனத்தைவெல்லத் தேர். (கஅ0)

ஈசன் பலவடிவா யெங்கு நிறைந்துளதைக்
காசற்ற ஞானமாங் கண்ணதனுல்—ஆசறவே
தேர்ந்துதியா னஞ்செய்யின் சிந்தை மயலழியும்
சார்ந்திடுநல் லின்பந் தழைத்து. (கஅக)

பூரணமா வெங்கும் புனிதசிவ முள்ளதென
ஆரணஞ் சொல்வ தறிந்தரனைத்—தாரணியின்
பற்றறநீ போற்றிவரின் பாச மறுமனமும்
சற்றுமசை யாதொடுங்குந் தான். (கஅஉ)

மயிர்முனையி னும்பாதி மாளமனங் கண்டோர்
செயிருடனீங் கற்கஞ்சார் செவ்வே—உயிரடங்கக்
கண்டறிந்தார் தம்மைக் கலக்கிடினுங் காமனுர்
பண்டைநிலை நீங்கார் பரிந்து. (கஅங)

மனத்தை யடக்குநெறி மாணுநீ கண்டால்
கனத்தவறி வாகியின்பங் காண்பாய்—மனத்துருவைக்
கண்டுபொய் யாக்கார் கணமுநில் லாதலைவார்
தொண்டிழிந்தார்க் காற்றிடுவார் சூழ்ந்து. (கஅச)

சங்கற்ப சாலத்தைச் சந்ததமுங் கண்டழிக்கின்
தங்கிவரும் வாசனைக டாமழியும்—பங்கஞ்செய்
சித்தக் கலக்கங்கள் தீருஞ் சிவாநந்த
சித்துருவந் தோன்றுந் திகழ்ந்து. (கஅரு)

சோகமனத் தாக்கற்றார் சொந்தநிலை பெற்றுய்வார்
சோகமனத் தாக்குடையார் சோர்வுறார்—ஏக
பரவெளிநாட் டம்பெற்றால் பற்றுது சோகம்
குரவனருட் கொண்டிலைதோர் கூர்ந்து. (கஅசு)

தேகமொடு மாயை திரிகாலத் தும்பொய்யாம்
ஏகவொளி யொன்றே யிருப்பதாம்—ஏகவொளி
நாட்டமற வாதிருக்கி னைந்துபோஞ் சோகமனம்
ஏட்டைவிட்டு நாட்டமுற வெண். (கஅஎ)

துரும்பா மனத்தையெணித் தூளாக்கு மாணு
இரும்புமன மென்பதுமெய் யேனும்—இரும்பை
அறுத்துத்தூ ளாக்க வரமுளபோ னெஞ்சை
அறுக்கக் குருமொழியுண் டாய். (கஅஅ)

பெரும்பித்தர் போலப் பிதற்றியலை கின்ற
திரும்புமன மென்றெண்ணி யேங்கேல்—பெரும்புலிநேர்
அல்லன் மனந்தா னறிவுவடி வாகநீ
நில்லகன் றேடு நிசம். (கஅகூ)

வீடடைய வெண்ணுவதே வித்தகமா நன்னினைவு
தோடந் தரும்வினைக்கண் தோயாதே—நீடக்
குருமொழி யேயிலக்காக் கொண்டு பணிசெய்
பொருமுமன மாளும் புலர்ந்து. (ககூ0)

கடநே ருடம்புசடங் கண்டமெனக் காணின்
மடமேறு நெஞ்சன்றே மாளும்—கடவுடம்பின்
தன்னினைவோ மாக்கொடிய தாரதன மக்கடமை
உன்னிடச்செய் தின்பழிக்கு மோர், (ககூக)

கடலாமை போலக் கலையலைந்து கற்பார்
அடலார் கரிபோலுண் பார்கள்—உடலோ
டுலகைப்பொய் யாக்கியே யோடா தடக்கார்
அலகை மனத்தை யடர்த்து (கசுஉ)

முகம்பார்க்கக் கண்ணடி முக்கியமா னற்போல்
அகம்பார்க்க வாடிநெஞ்ச மாகும்—சுகவடிவ
நம்முருவைக் காணற்கு நம்மனமே நன்மாண
செம்மைத் துணையெனநீ தேர். (கசுங)

கண்ணடி மாசடையின் காட்டாது நன்முகத்தைக்
தண்ணார்ந்த மாணவித் தன்மைபோல்—எண்ணார்
மனமென்னு மாடி மலாதிதோ டத்தால்
கனவறிவைக் காட்டவிலை காண். (கசுச)

பொய்யெண்ணம் போகப் பொருந்தியே சிந்தனைசெய்
வெய்யமனச் சேட்டை விரைந்தழியும்—மெய்யறிவா
நந்தம் பெருகுமதா னல்லவரி னட்புண்டாம்
மந்தர்கொள் ளாரிவ் வழி. (கசுரு)

பொய்யையே நாடிப் பொருத்து மனத்துவழி
எய்திடுவோர் ஞானநிலை யெய்வதென்றோ—வெய்துயர்செய்
பாம்பினைத் தாம்பிற் பழுதறவே காண்பார்க்குத்
தேம்புதுயர் போமோநீ செப்பு. (கசுசு)

பல்லூழிக் காலமனப் பாசமறப் பாடுபட்டுக்
கல்லைப்பொன் னக்குவபோற் காசடர்ந்த—பொல்லா
மனத்தைச் சிவமயமா மன்னிடவே செய்துள்
உனற்கரிய வின்பானே னோர்ந்து. (கசுஎ)

பொய்நீக்க நீக்கப் புனிதமிலா நெஞ்சடங்கும்
செய்சா தனத்துட் சிறந்ததிது—துய்யனே
ஈதறியார் வீணே யிடர்மனத் தின்வசமாய்ச்
சாதல் பிறப்புறுவார் தாழ்ந்து. (கசுஅ)

மனமடங்கா தென்னைமிக வாட்டுகின்ற தென்பார்
மனமடக்கு நன்னெறியின் மன்னார்—தனமில்லை
என்செய்வே னென்றழுவா ரெச்சிலிலை போலலைவார்
என்னே யிவர்மதிதா னிங்கு. (கசுகூ)

**கு**டும்பமித்தை யென்றறிந்தாற் கோபமன மாளும்
இடும்பையெலா நில்லாம லேகும்—நடுங்கா
திருக்குநிலை வாய்க்கு மிணங்குநல் லின்பம்
திருக்குருவாய் வாழ்வாய் தெளிந்து. (உ00)

**வா**ய்திறவாத் தானமாம் வன்மாயை யற்றவிடத்
தேய்ந்தவர்நல் லின்பநிலை யேய்ந்திடுவார்—பாய்ந்துவரும்
துக்கசுக சாட்சியாய்த் துன்னிநிற்பார் பேய்மனத்தின்
சிக்கற் றிருப்பார் தெளிந்து. (உ0க)

**க**ள்ளமனச் சேட்டைகளைக் கண்டழித்த நல்லாரே
கள்ளமி லாநிலையைக் கண்டுணர்ந்து—மெள்ளமெள்ளத்
தானறிவா நந்தநிலை சார்ந்து மயலற்று
மோன நிலைபெறுவார் முன். (உ0உ)

**எ**ன்னென்ன வாறே வெழுநெஞ்சுட் சங்கற்பம்
அன்னதனை யாங்காங் கழித்தழித்துப்—பின்னே
நினைத்தலற்று மாயை நெறியை யடைத்துத்
தனைச்சிவமாய்க் காணீ தனித்து. (உ0ங)

**ம**ண்ணின் மயமாய் வயங்குடனு னல்லனெனின்
எண்ணற் கரியநிலை யெய்திடுவாய்—மண்ணுடம்புள்
உற்று நடிப்பவனை யோடு மனமடக்கிச்
சற்றிருந்து கண்டெனக்குச் சாற்று. (உ0ச)

**த**டுப்பா ரொருவரிலை தான்றனித்து நிற்க
அடுப்பாய் தளரா ததனை—விடுப்பாயேல்
ஈனப் பிறவி யினியும்வந் துன்னையடும்
தீனனே யாவாய் தெளி. (உ0ரு)

**சு**ம்மா விருப்பதுவே சுத்தநிலை ஞானமுற
இம்மா நிலையே யியம்புமறை—யம்மம்ம
இந்தநிலை நிற்பா ரெவர்க்கு நயமொழிகள்
பந்தமறச் சொல்வார் பரிந்து. (உ0சு)

**வீ**ணுக் குழைத்தோம் விவேகமின்றிக் காலமெலாம்
ஊணுறக்க மற்றநிலை யோராது—சாணும்
வளர்க்கப்பஃ றொல்லையுற்று வாழ்நாள் கழித்தோம்
வளப்பமெங்கே பெற்றோநாம் வாய்ந்து (உ0எ)

பளிங்குத்து சேபோற் படரும்பந் தத்தால்
துளங்காம லுன்னிலையைச் சோதித்—துளம்வென்று
கண்டிருக்கி லுன்வடிவைக் காண்பாய் சிவமாகத்
தொண்டனே யிவ்வுண்மை சூழ். (உ0அ)

சர்க்கரைதேன் முக்கனிச் சாறெடுபா லென்னும்
தர்க்கமிட னீக்கிச் சகமறந்து—சொர்க்க
நரக மறந்தறிவா நண்ணினு லுண்டாம்
நிரதிசய வின்ப நிலைக்கு. (உ0கூ)

அறிவா யிருந்தா லகிலநோக் கின்றும்
குறியற்ற வின்பநிலை கூடும்—மறியாமல்
நிற்குமா நந்தமுறு நித்தசுத்த வத்துவித
தற்பரநீ யாவாய் தனித்து. (உக0)

கால்கை துணைவேண்டாங் காண்கண் துணைவேண்டாம்
பால்பழமும் வேண்டாம் படைத்தேத்த—நூல்சொல்
அரியயன்முக் கண்கொள் ளரன்றுணையும் வேண்டாம்
திரவறிவைக் காணிலிது தீர்வு. (உகக)

எத்துணையும் வேண்டா மிரண்டி லறிவுதனை
அத்துவித மாநீ யறிவதற்கு—நித்யசுத்தன்
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னென்றுமறை
ஏயுமுறை சொல்வதனை யெண். (உகஉ)

ஒருகட்ட மில்லை யுணர்வா யிருக்கத்
திருகற்ற வுன்னுருவைத் தேர்வாய்—தெருளுருநான்
என்றிருக்கிற் றிண்ணமா வெப்பற்றும் வந்தணுகா
நன்றிருப்பாய் துன்பமின்றி நாடு. (உகஙு)

உடம்பு தனக்கழகிங் கொண்மணிப்பூ ணல்ல
திடவறிவா நிற்றலிது தேர்வாய்—விடம்புரையும்
யாக்கைதனி லாசை யணுவளவுங் கொள்ளாயேல்
தேக்கறிவா நிற்பாய் தெளிந்து. (உகச)

உடம்புநீ டித்தலையே யுன்னிநாட் போக்கின்
உடம்புதுணை யாமோகூற் றுற்றால்—உடம்பாலே
ஒன்றும் பொருளை யுணர்தற்கு நீவிரும்பின்
என்றும் விழிப்பா யிரு. (உகரு)

எக்கலைகற் றிட்டாலு மென்னபய னின்றனையு
நக்கனையும் வெவ்வேறு நாடுவையேல்—நக்கனை
நின்னறிவாக் கண்டு நிலைபெற் றிருப்பாயேல்
இன்னலற்று வாழ்வா யினிது. (உகசு)

பிரமமே சத்தாம் பிராந்தியுல கென்று
வரமமையக் கண்ட வருக்குத்—திரணமெனத்
தோன்று முலகவியல் சோர்வனைத்து மாறிவிடும்
கான்றசோ றுகுங் கலை. (உகஎ)

பகைவரது நட்பைப் பயந்து விடல்போல்
மிகையுடம்பின் வேட்கையினை விட்டால்—பகையாக்கும்
தீயசங் கற்பமெலாந் தீப்படுபஞ் சாயழியும்
தூயவறி வாய்மிளிர்வாய் சூழ்ந்து. (உகஅ)

புன்னினைவைப் போக்கிற் புனிதசிவ மேயாவாய்
அன்னியமே யாவாய்நீ யந்நினைவால்—முன்னே
நினைந்தவெலாந் தோன்றவந்து நின்னையெக் காலும்
இனைந்திடவே வாட்டு மிழுத்து. (உகசு)

புலக்கரணத் துட்டரொடு போனு லவர்கள்
அலக்கணுற வேவிடயத் தாழ்த்தி—இலக்காகக்
கண்ட தணுவெனினுங் காட்டிடுவார் பல்லுருவக்
கண்டகரைப் போக்கிடுநீ காய்ந்து. (உஉ0)

புலனைந்தும் பொய்யுலக போகத்தைக் கண்டு
நலந்தீங்கு நாடாம னுய்போல்—பலனுளதாப்
பற்றி யிழுத்துன்னைப் பாழாக்கு நீயவற்றை
எற்றியறி வாக விரு. (உஉக)

புலனேடு நெஞ்சுறுமேற் பொய்யுலகந் தோன்றும்
புலனெறிசெல் லாதுமனம் பொன்றின்—அலகில்லா
ஆனந்தந் தோன்று மறிவி னிலைவிளங்கும்
தீனநிலை யெங்கிருக்குஞ் செப்பு. (உஉஉ)

நம்மைப் பிறப்பித்து நையச்செய் கின்றதெது
நம்மை வருத்துகின்ற நந்நினைவே—நம்மை
உடம்புருவா முன்னெண் ணுளநினைவா லிப்போ
துடம்புற்றே மாய்ந்திதனை யோர். (உஉங)

நின்னைவிட வேறே நினைவில்லை நித்தியனும்
நின்னை மறந்து நினைவாகிப்—பின்னையினல்
அல்லலுற்று வீணே யநந்தம் பிறப்புற்றாய்
நல்லறிவு கூடவின்றே நாடு. (௨௨௪)

சின்னவர வேனுஞ் செருக்க பெருந்தடியால்
என்னு முதுமைமொழி யின்படியே—சின்ன
உருவென்று வாசனையை யுன்னே லறிவால்
வெருவா தகற்று விரைந்து. (௨௨௫)

மரணநோய் பின்னே மலைபோ விருக்கக்
கரணக்கூத் தாடிக் களிப்பாய்—கரண
வயப்பட் டிருடியரும் வஞ்சவினைக் குட்பட்
டயர்வுற்று மாண்டா ரறி. (௨௨௬)

தீக்குணத்தைப் போக்கத் தினமு முயற்சிசெய்நீ
தீக்குணங்க ளென்றுமுனைச் சேராக்கா—தீக்குணத்தை
உற்றிருக்கு நாள்வரையி லோயா திடர்மாயைப்
பற்றறுத்தார் நேயமென்றும் பற்று. (௨௨௭)

அறிவொன்றே கெட்டியென் றுய்ந்தறிந்தோர் தாளில்
தறியொக்க வீழ்ந்து தரையில்—நெறியாகப்
போற்றிப் பணிந்துவரின் பொன்றாத வின்புறுவாய்
கூற்றுவனூர் சேராய் குழைந்து. (௨௨௮)

அறிவறியார் தம்மோ டணைந்துற் றிருத்தல்
அறிவாமோ வாநந்த மானோர்—அறிவறிய
உற்றுரைக்கக் கேட்ட லுரமாமோ செற்றமற்றுச்
சொற்றிடுவாய் நன்றாகச் சூழ்ந்து. (௨௨௯)

வெள்ளம் வருமுன் வியனணைகோ லென்னுமொழி
எள்ளளவு முள்ளத்தி லெண்ணுகிலாய்—உள்ளதுணர்ந்
துற்றாரைப் பற்றி யுணர்வாக நிற்கநினை
செற்றநமன் பற்றுமுனந் தேர்ந்து. (௨௩௦)

இட்டபணி செய்யா வியல்புடைய தீயமனம்
சிட்டருடன் கூடிநிற்கிற் செவ்வையாய்—இட்ட
பணிசெய் தடங்கிநிற்கும் பத்தாசொற் றட்டா
அணிகற் பினள்போ லமைந்து. (௨௩௧)

கனிந்துருகி நிற்குங் கவலையற் றேங்கும்
முனிந்திடுத லற்றருளின் மூழ்கும்—பணிந்துள்
இருக்க விரும்பு மெழின்ஞா னியர்தாள்
விருப்புற் றடையினெஞ்ச மிக்கு. (௨௯௨)

உடம்போ டுறுகரண முற்றபணி யாளாத்
திடமாகக் கொண்ட தெளிஞர்—புடவியெலாம்
சுற்றிடினு மில்லத்திற் றுன்னிடினு மாணவனே
சற்று மயங்கார் தளர்ந்து. (௨௯௩)

மாலேறி மாண்டோர் வகுக்கிற் கணக்கில்லை
நூலேணி யேறி னுடங்கலிலை—காலேணி
பெற்றும் பெரியாரைப் பேணிவலஞ் செய்யாதார்
சற்றும் பயனடையார் தாம். (௨௯௪)

பெரியா ரொழுக்கத்தைப் பின்பற்றிச் செல்வோர்
தெரிவாகிச் செல்வமெலாஞ் சேர்வர்—பெரியாரை
நம்பி யடைந்திருப்பார் ஞானநிலை பெற்றுய்வார்
உம்பரென்றும் போற்ற வுவந்து. (௨௯௫)

மூன்றுலகு மூன்றவத்தை மூன்றுடம் பாமவற்றைத் [டம்பு
தோன்றுமனச் சேட்டையெனச் சூழ்ந்துணர்ந்தோர்—மூன்று
மூன்றவத்தை மூன்றுலகு முற்றும்பொய் யென்றுணர்வார்
சான்றா யிருப்பர் தனித்து. (௨௯௬)

கரியா யிருந்துலக காரியம்பார்க் கின்ற
பெரியாரை யன்பினொடு பேணின்—நரியொடுநாய்
உண்ணு முடலோ வுணர்வாகா தென்றுணர்ந்து
நண்ணிடுவாய் ஞானநிலை நன்கு. (௨௯௭)

உயிரற் றிடிற்பிணமென் றேதுடம்பு மாணு
உயிருளபோ தெங்ஙனுணர்வாம்—மயலின்
செயலா லுடம்பகமாச் செப்பிடுவார் நீயச்
செயனீங்கி லாவாய் சிவம். (௨௯௮)

என்ன மடமை யிழிபிணமா மிவ்வுடம்பு
தன்னைநா னென்றே தருக்கிடுதல்—முன்னொடுபின்
நாற்ற மடிக்குமுட னுய்நரிக ளுண்ணுமுடல்
சோற்றுடம்பு நீயாமோ சொல். (௨௯௯)

பிறப்பளிக்கும் வித்தாம் பெருமாயை நீங்கத்
திறப்படநீ நல்லறிவைச் சிந்தி—சிறப்பில்
மலப்பொதியைத் தானு மதியேன் மதிக்கின்
கலக்கமெலாஞ் சேருங் கதித்து. (௨௪௦)

சாமியிலா தோரணுவுந் தானே நிலைத்தியங்கா
சாமி வடிவமோ தம்மறிவாம்—சாமிதனைக்
காணாதார் தாமாய்க் கனவுடம்பை யெண்ணியெண்ணி
வீணா வலைந்தழுவார் வேர்த்து. (௨௪௧)

நரிகழுகு சேர்ந்து நயந்துண் ணுடம்பைப்
பெரிதுவந்து நானெனலென் பித்தோ—தெரிவிலையோ
என்ன மதியோ வெவரிட்ட சாபனையோ
முன்னை விதியோ மொழி. (௨௪௨)

தேகநா னல்லவெனத் தேர்ந்தான் றனைநோக்கி
ஏகபரி பூரணனீ யென்னுமறை—மோகமிலார்
ஈசுரனை வேறா விதயத் திடையெண்ணார்
ஈசுரன்றா மாதலினா லே. (௨௪௩)

இன்பசிவ னென்னு மிந்நாட்ட மொன்றுறுமேல்
வன்புடம்பைத் தானு மதித்திடாய்—மன்மதனை
வெல்லும் விதமறிவாய் மேல்கீழென் னாட்ட மறாய்
இல்லையுல கென்பா யினைந்து. (௨௪௪)

தங்கு மலநீர் தசையெலும்பு சீழிரத்தம்
மங்குபிண நாற்ற மலக்கூட்டைத்—துங்கமுடன்
நானென்று கொள்பவரோ நானாப் பிறப்புறுவார்
நானென்ப தின்பறிவே நாடு. (௨௪௫)

உடம்புசுக துக்க முணருமோ வோரா
துடம்புசட நீயுணர்வீ துண்மை—உடம்புநிதம்
கண்ணுக் கெதிராகக் கட்டையில்வே கக்கண்டும்
எண்ணுவதென் னுடம்பென் றிங்கு. (௨௪௬)

உடம்பைச் சுமத்தற் குரியவா ளானேப்
நடஞ்செயுனைக் கீணும னன்கு—சடமாம்
உடம்பதனைத் தானென் றுணரும் வரையில்
மடமைமா றாது மதி. (௨௪௭)

உடம்புசடங் கண்ட மொழுகுமலப் பாண்டம்
மடமையருத் தானு மதித்தால்—சடவடிவம்
தன்னையறி யாது தசைபுழு சீழெலும்பு
என்னவித நானுகு மெண். (உ௪அ)

தேகவபி மானஞ் சிதைந்தாற் சிவமாவாய்
தேகவபி மானமாஞ் சிந்தைமயல்—ஏக
வழியறிவா யெவ்விதத்தும் வாய்மைநிலை காண்பாய்
இழிவுவரல் யாதினு லெண். (உ௪௯)

என்னுடம் பென்கண்கை யென்வாய்கால் காதென்று
பன்னி யவற்றைநிதம் பார்த்துணர்ந்தும்—கன்னிமயல்
பட்டு மதனுளாய்ப் பாழுடம்பை நானென்பார்
துட்டரன்றி வேறியார் சொல். (உ௫0)

பொல்லாத நாற்றப் புழுமலக்கூ டென்றுநிலை
இல்லா தழியு மியல்பதென்று—நல்லார்
தெரிந்துரைக்குந் தேகநிலை தேர்ந்து மயலற்ருர்
தெரிய வுணர்வார் சிவம். (உ௫௧)

பூதநீ யல்ல பொறிபுலனு நீயல்ல
ஏதவுட னீயல்ல வீங்கிதனைக்—கோதறநீ
சோதித்தா லெங்குநிறை சோதிவடி வேயாவாய்
பேதிக்கா துன்னைப் பிணக்கு. (உ௫உ)

உடம்புநா னென்ப துணர்விலார் கொள்கை
உடம்புபிண மாவ துணர்வாய்—கடபடங்கள்
போல்வதா மிவ்வுடம்பு பொன்ருப் பொருளாகா
மால்கொள்வ தென்ன மதி. (உ௫௩)

உடம்புநிலை மாறி யுருள்வதுண்மை யாவ
தடங்கொண்டு சற்றுள்ளே யாய்வார்—திடங்கொண்டு
சோதி யெதுவென்று சோதனை செய்தறிவார்
வாதிடார் மண்மயக்கம் வாய்ந்து. (உ௫௪)

அகண்டமா நின்வடிவை யாராய்ந்து கண்டால்
உகண்டமனத் துன்ப முருது—விகண்ட
உலகுபேய்த் தோரா முடம்பினது நாட்டம்
விலகு முதிக்குமின்ப மிக்கு. (உ௫௫)

நானேநா னென்னைவிட நாடி லயலில்லை
ஊனே னுடம்பி னுவகைவிட்டு—வானோர்
அறிவுவடி வாய்நின் றறிந்தேனிவ் வுண்மை
வெறியரெங்ஙன் காண்பார் விழைந்து. (௨௫௬)

உடம்புநா னென்னளவு மோங்குசிவ மாகாய்
உடம்புமா துக்கமென வோர்ந்து—திடங்கொண்டு
நானொருத் தன்றானே நாநா வுருவென்று
வானொத்து மாணுநீ வாழ். (௨௫௭)

உற்பத்தி யோடுலய முன்னுருவிற் கில்லையில்லை
அற்பவுட னென்ன றழியாதே—புற்புதம்போல்
தோன்றியழி யிவ்வுடம்பின் சோகமற்று நற்சிவமா
ஊன்றி மிளிர்ந்திடுநீ யுற்று. (௨௫௮)

உடம்புநினை வற்றா லொழியுநினை வெல்லாம்
உடம்புநா னென்னி லுறுமால்—உடம்பு
நினைவிலுற வொட்டாம னீக்கியத மாக்கி
உனையறிவாய்ச் சிந்தித் துறு (௨௫௯)

விண்ணுருவாத் தன்வடிவை வேறற்றுக் கண்டிருந்தால்
மண்ணுருவாம் யாக்கையெண்ண மாறிவிடும்—கண்ணின்றி
மண்ணுடம்பு தன்னை மறந்துநா னென்னாதே
மண்ணுடம்பை மண்ணு மதி. (௨௬௦)

சாட்சி வடிவானேன் சத்துச்சித் தாநந்தன்
காட்சிக் கரிய கனவறிவன்—மாட்சிமையார்
பூரணனு னென்றுநிதம் பொய்யற்றுச் சிந்திப்பான்
சீரணுகு வானென்றுந் தேர்ந்து. (௨௬௧)

அசைவற் றிருப்பா னறிவுவடி வாவன்
தசையென்பு தேகமயல் சாரான்—அசையா
திருந்தெவையுங் காண்பா னெலாம்மித்தை யென்பான்
திருந்தறிவாத் தேர்ந்தான் றெளிந்து (௨௬௨)

தேகசுகத் திற்கே தினமு முயல்கின்றீர்
தேகந் துணையாமோ தேர்ந்துரைமின்—தேகம்
மலப்பாண்ட மென்ன வகுத்தறித லில்லார்
அலக்க ணுறுவா ரலைந்து. (௨௬௩)

நாற்ற வுடம்புதனை நம்பியின் புற்றிருந்தால்
நாற்றவுடல் சாங்கா னமன்வரவை—மாற்றி
நிலைநிறுத்து மோகூறுய் நெஞ்சை யலைக்கும்
கலைகற்றென் கண்டாய் கழறு. (௨௬௪)

பூவின்மணம் வேறுப் புகன்றிடுவார் புன்மதியோர்
பூவின்மணம் வேறுப் பொருந்துமோ—மேவிதுபோல்
இன்பம்வே றுக வெழிலறிவு வேறுக
நன்கமையு மோநீ நவில் (௨௬௫)

உண்பதுநா மல்ல வுடம்பல்ல நம்முருவம்
உண்பவனு னென்பதுபொய் யுற்றுணரின்—நண்பாகக்
கேட்டவணஞ் சிந்தித்துக் கேடில் சமாதிசெயின்
நாட்டம் விளங்கிவரு நன்கு. (௨௬௬)

ஆனந்த மான்மவுரு வாகுந் தவறில்லை
ஈனச் சுருதிசொலா திவ்வுண்மை—ஈனச்
சுருதியுட ருனென்னச் சொல்லி மயக்கிக்
கருவரையிற் சேர்க்குங் கறுத்து. (௨௬௭)

சித்துருவா மான்மசிவந் தேகமத னலாடும்
ஒத்துவந் தென்மொழியை யோர்ந்தறிவாய்—எத்தும்
மனமாதி யாங்கரண மாணு சடமாம்
இனன்போலச் சான்று யிரு. (௨௬௮)

இம்மை மறுமை யிரண்டுமற் றேகமாய்ச்
செம்மை யுறவிருக்கத் தேராயேல்—மம்மர்நெறி
சேர்வ தகலாது தேகநா னென்பதரு
தீர்வின்றிக் காண்பாய் செயிர்.. (௨௬௯)

அலைவற்ற தம்மை யகண்டமாக் கண்டோர்
புலையுடம்பைத் தாமாப் புகலார்—மலைவற்ற
சுத்தநிலை மன்னிச் சுகசொருப ராயிருப்பார்
எத்தலையு மின்றி யியைந்து. (௨௭௦)

சடவுடம்பிற் கில்லைசுத்தஞ் சார்ந்தாயின் சற்றும்
சடமாமைம் பூதத்தாற் சார்ந்த—சடவுடம்பு
தன்னை யறிந்து தனக்கயலைக் காணுதிங்
கென்னவித மான்மாவா மெண். (௨௭௧)

**ச**டவுடம்பை யானென்று சாற்றும் வரையில்
சடவுடம்பின் புத்திநினைச் சால—மடமாக்கி
அந்தவிட மிந்தவிட மற்பமகத் தென்றுணர்த்திப்
பந்தத் தழுத்தும் பகைத்து. (உஎஉ)

**ஈ**ளை மலவுடம்பை யென்றுநா னென்னுதே
தேளைநிகர் நோய்பலவுஞ் சேர்கூடு—பீளைவழி
இவ்வுடம்பைப் போலில்லை யின்ன றரும்பொருள்கள்
இவ்வுடம்பி னிச்சையற வெண். (உஎங)

**நா**ற்ற வுடம்பினையே நானென்று நாட்கழித்தால்
மாற்றரிய சோதி வடிவாகிச்—சாற்றரிய
தானறிவா நந்தமாந் தன்னை யறிதலென்றே
ஈனநெறி சேரா யிசை. (உஎச)

**நா**ய்கழுதை யாய்ப்பிறந்தா னம்வடிவைக் காண்பரிது
தூய்மையுறு மாநுடராத் தோன்றியுநாம்—நாய்போல
உண்டுறங்கி நாளை யொழித்தா லுபசாந்தம்
கொண்டிடலென் றேவுணர்ந்து கூறு. (உஎரு)

**நா**ல்வ ரெடுத்தேக நன்மனைவி மக்களழக்
கால்வரிந்து கட்டிக் கனவுடம்பை—மால்கொளுற்றார்
சுட்டுவிடுங் காலத்தோ தூயபர ஞானமுறல்
சிட்டனே தேர்ந்து தெளி. (உஎசு)

**ப**ந்தப் பெருங்கட்டாற் பற்பலவா வெண்ணங்கொண்
டந்தமிலா வுன்னை யறிதலற்றாய்—பந்தத்தா
லெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னென்றுரைத்த
நல்லார்சொ னன்மாணு நாடு (உஎஎ)

**த**ம்வடிவைக் கண்டோர் தசைமயமாம் யாக்கைதனைச்
செம்மண்ணுக் கண்டுளத்தின் வேட்கையற்றுச்—சும்மா
இருந்திடுவார் காணுதா ரேக்கமெலா முற்றுக்
கருந்துயர்க்கா ளாவார் கதித்து. (உஎஅ)

**ம**ண்ணுடம்பு தூய்தேன் மலமூத்ரந் தள்ளுவதேன்
மண்ணுடம்பு நீயோ மதித்தறிவாய்—மண்ணுடம்பு
மூத்திரஞ்சீழ் கோழைசளி மூளைமயி ரென்பவெலாம்
கோத்திருப்ப தன்றே குறி. (உஎகூ)

வலவுடம்பி னின்று மலமூத்தி ராதி
சலசலென நித்தஞ் சரிந்து—செலவுணர்ந்தும்
ஊனு றுடனுனென் றுன்னிநாட் போக்கனன்றோ
வானுத வில்லாய் வழுத்து. (உஅ0)

கண்மூக்குக் காதுகன்னங் கைகாலென் றேபலவா
மண்ணுருவைக் கூறி மகிழ்கின்றாய்—ஒண்ணிதிபூண்
பெண்டுபிள்ளை சுற்றம் பெரியர் சிறியரெனக்
கொண்டுழல்வா யென்றுய்வாய் கூறு. (உஅக)

நாமரூ பத்தடிப்பே நாநா வகையுலகம்
நாமரூ பத்தைவிட்டால் ஞாலமொடு—பூமன்
அரியரனென் பாரில்லை யன்னியமா காமல்
தெரிவுவடி வாயிருக்கத் தேர். (உஅஉ)

சிந்தனையே மாயையாஞ் செப்புலகு காரணமாம்
சிந்தனையே பூமன் சிவன்மாலாம்—சிந்தனையே
அல்லாது வேறொன் றமையா ததுதன்னைப்
பல்லாற்று னும்போக்கப் பார். (உஅ௩)

உலகமென்ப தற்கிங் குரியபொருள் காணுய்
இலகவறி யாய்பரத்தை யென்றும்—உலகமெனல்
நாமரூ பம்மன்றி நாடுமிடத் தேதுமிலை
காமமறுத் துண்முகமாக் காண். (உஅச)

நாமரூ பந்தோன்றின் நண்ணுது சுத்தநிலை
நாமரூ பம்மயமே நம்மெண்ணம்—நாமரூ
பத்தைவிட்டு ஞாலத்தை பார்ப்பா ரெவரோசொல்
வித்தைகற்ற மாணு விளம்பு. (உஅ௫)

நாமரூ பங்களெலாம் நாடா விடத்துமெய்யாம்
நாமரூ பங்கடமை நன்றாயின்—நாம
உருவெல்லாம் பொய்யாகு முண்மையறி வின்ப
உருவசிவ மெய்யென் றுணர். (உஅசு)

சிறுமியர்சேர்ந் தாடிச்செய் சிற்றிற்போன் மாயும்
வெறுநாம ரூப விகற்பம்—மறுவாகும்
மண்வடிவிற் கல்லாது மற்றெதற்கோ பற்பலவாம்
பெண்வடிவு மாண்வடிவும் பேசு. (உஅஎ)

அறிவே முதலா மகில மிருத்தற்
கறிவின்றே லஃதில்லை யாகும்—அறிவானீ
மும்மூர்த்தி யாகியே முத்தொழிலுஞ் செய்கின்றாய்
இம்மார்க்கங் காணின்றே யேய்ந்து. (உ௮௮)

அறிவா னிலாக்கா லசையா துடலம்
அறிவா னிலாவுடம்பை யாரும்—அறியக்
கொளுத்துவார் நாற்றக் கொடியபிண மென்று
களித்துடலை நானெனலென் கண்டு (உ௮௯)

தூக்கத் தொடுகனவைச் சோதித் தறிந்துநிற்பார்
தாக்குணர் மாயையாற் சந்ததமும்—போக்கிலறி
வெங்குமுள தென்பதுணர்ந் தின்பவுப சாந்தமுற்றுத்
துங்கவறி வாவார் சுடர்ந்து. (உ௯0)

தூக்கம்பே ருண்டிகொள்வோர் தூய்தில் புலாலுண்போர்
வாக்குமனஞ் சோராமல் வம்புரைப்போர்—மாக்கடல்போல்
மாறாது கற்றலைவோர் மாதர் முயக்குறுவோர்
தேறா ரறிவினிலை தேர்ந்து. (உ௯௧)

சலத்தி லலைபோலச் சான்றாகு மென்னில்
நிலைத்த விலாவுலக நிற்கும்—மலத்தடையில்
யானே யெவைக்குமுத லென்னைவிட வேறில்லை
வானேபோல் கின்றேன் மதி. (உ௯உ)

என்னுடைச்சொ ரூபத்தி லிவ்வுலகு தோன்றுவது
பொன்னிற் பலதோற்றப் பூடணம்போல்—என்னையே
பல்லுருவ மாக்கியான் பார்க்கின்றேன் பட்சமின்றி
நல்லறிஞ ரீதேற்பார் நன்கு. (உ௯௩)

புத்தியிலா மாக்கள் புலன்வழியா லின்புறுவார்
சுத்தவறி வுள்ளாரைத் தூடித்துச்—சுத்தமுளான்
தன்னைக்கண் டின்புறுவான் தாரமனை செல்வமக்கள்
அன்னியமென் றோர்வா னமர்ந்து. (உ௯௪)

முற்பிறவி வாசனைகள் முன்றோன் றுதலறிந்து
சிற்பரனு னென்னத் தெளிந்துதொழில்—பற்பலவாச்
செய்தா லதனாற் சிறிதேனுங் குற்றந்தான்
எய்தாது நின்றனக்கிங் கெண். (உ௯௫)

சோதியுரு வாமறிவே சூழுலகைக் கண்டறியும்
சோதியைவி ளக்கவொரு சோதியிலை—சோதியோ
எவ்விடமு மெப்பொருளு மெப்பொழுது மாயிருக்கும்
இவ்வழியைத் தேர்வா யியைந்து. (௨௯௬)

தன்னை மறந்துலகைச் சாரிலுறுஞ் சஞ்சலங்கள்
பின்னையவை மாய்த்தல் பெருங்கட்டம்—நின்னைநீ
கண்டபடி நின்றாற் கலங்கா நிலையுறுவாய்
பண்டைவினை யோடும் பறந்து. (௨௯௭)

உலகமய லுள்ளளவு மோயாசங் கற்பம்
மலகுணமே நெஞ்சிலுற வாட்டும்—நிலவாழ்வைத்
தாரந் தனயருற்றார் தம்மைமெய் யாகநம்பிக்
கோரவினை செய்யுங் குறித்து. (௨௯௮)

நற்பே ருடன்வாழ்ந்த நாமிறக்கி னம்முடலை
அற்பப் பிணமென் றறைகின்றார்—அற்புதமாம்
பெண்டுபிள்ளை யென்பார்கள் பேய்போ லலைந்தவர்க்குத்
தொண்டுசெய்வ தென்னமதி சொல். (௨௯௯)

மக்கண் மனைவியொடு வாழ்ந்திருந்தான் மாளுங்கால்
தக்கதுணை யாவாரோ சார்ந்தவர்கள்—மிக்குறவே
பொன்னிலதேற் றாடிப்பார் போற்றார் கழித்தகல்வார்
நின்னிலைமை யென்னு நினை. (௩00)

துணைநினக்குச் சுற்றமெனச் சொப்பனத்து மெண்ணேல்
துணைநினக்கே நீயாவாய் சுற்றம்—துணையா
இருப்பதுபோற் காட்டி யிறக்கிலுனைச் சுட்டுப்
பருப்புச்சோ றுண்ணும் பரிந்து. (௩0௧)

ஐயோ மடவீ ரறிந்திலீர் சுற்றநிலை
ஐயோ வவருண்மை யன்பில்லார்—ஐயோநீர்
பொன்னுற் றிருக்களவும் பூரிப்பார் பொன்னழிந்தால்
இன்னுழையீ ரென்பா ரெரிந்து. (௩0௨)

பொன்னிருக்கும் போதேநீர் பூவிழுந்து கண்ணிழந்தால்
துன்னிப் படும்பாட்டைச் சொல்லுவன்கேள்—முன்னின்றுன்
ஆவியென்று போமென்பா ரன்னமிடி னுண்ணென்பார்
பாவிமனை மக்கள் பகைத்து. (௩0௩)

கண்ணே சிறந்த துணை காசினியில் வாழ்க்கைக்குக்
கண்போனாற் போயதிந்தக் காசினிவாழ்—வுண்ணடுங்கச்
செத்தசவம் போலநீ சீரழிந் தேக்கமுற்றுத்
தத்தளிப்பா யந்தோ தவித்து. (௩0௪)

கண்ணழிந்த வக்கணத்துன் கைப்பொருளைக் கொள்ளை
பெண்டுபிள்ளை யானோர் பிணங்கியே—கண்ணிலனே [கொளப்
பொன்னே யினியுனக்குப் போதாதோ வாண்டதென்பார்
சொன்னவற மின்றேசெய் சூழ்ந்து. (௩0௫)

பாவிநின் றன் கண்ணைப் பகவானே பார்த்தழித்தான்
சாவி யினிநினக்கேன் றுவென்பார்—பாவிநினக்
கிந்தக் கதிவந்த தீயாமை யாலென்பார்
பந்துக்க ளானோர் பழித்து. (௩0௬)

கண்போற் சிறந்த கவினுறுப்புண் டானாலும்
கண்ணே முதலனைத்துங் காண்பதற்குக்—கண்ணழிந்தால்
என்ன செயவியலு மெண்ணரிதாச் சேர்த்தபொன்னும்
என்னகதி யாமோநீ யெண். (௩0௭)

எத்தனையோ பொன்னுடையா ரேக்கமுறக் கண்ணிழந்து
வைத்தபொருள் போகும் வழிகாணு—தித்தலத்தில்
கட்டத் துடனழுது காலன்பா சந்தனிலே
பட்டிறந்தார் மாணுநீ பார். (௩0௮)

மரணமுறும் போது மனைவிமுத லானோர்
தருண மிதுவென்று சாவி—பரபரப்பாத்
தேடி யெடுத்தொளித்துத் தேம்பி யழுதிடுவார்
நாடியடை யீசன்றா ணன்கு. (௩0௯)

குடும்பஞ் சுகமெனநீ கொள்ளாதே மாணு
குடும்பநர கக்குழியாங் கூறின்—இடும்பைதரும்
காலன் மனையாளாங் காலபடர் பிள்ளைசுற்றம்
ஞால நமலோக நாடு. (௩௧0)

பொய்வாழ்வி தென்றது பொன்பொருள்க ளைச்சேர்த்து
வெய்ய மரணநோய் மேவுங்கால்—பொய்யுறவர்
பக்கத் திருந்தாலும் பார்த்திருப்ப ரல்லாது
துக்கமறுத் தின்பளிக்கார் சூழ்ந்து. (௩௧௧)

ஒப்பாரி பெண்டென்ன லொப்பாரி சுற்றமெனல்
ஒப்பாரி யெப்பொருளு மோட்டையுடற்—கொப்பாரிப்
பேரிட் டழைப்போம் பிணமென்போ மாண்டபின்பு
பேரிவ்வுடற் கோவுயிர்க்கோ பேசு. (௩௧௨)

ஒப்பாரிப் பேருடையா ருற்றதுணை யாவாரோ
இப்பாரி னீதா னிறந்தாலோ—ஒப்பாரிப்
பாட்டிசைத்துக் கட்டை பரப்பியதன் மேற்கிடத்தி
மூட்டித்தீ சுட்டெரிப்பார் முன். (௩௧௩)

பெண்ணென்ன லொப்பாரி பிள்ளையென லொப்பாரி
மண்ணென்ன லொப்பாரி மற்றிவைதேர்—கண்ணின்றி
ஒப்பாரிக் கற்பனையா லோயாப் பிறப்பிறப்பில்
தப்பா துழல்கின்றாய் சார்ந்து. (௩௧௪)

ஒப்பாரி மாமனென லொப்பாரி மாமியெனல்
ஒப்பாரி யாமா வுலகனைத்தும்—ஒப்பாரி
எல்லாப் பொருளுமென்ப தெண்ணு மதியிலியே
பொல்லாங் குனக்கே புகல். (௩௧௫)

ஒப்பாரி யிவ்வுலகென் றுண்மையாக் கண்டுணர்வார்
இப்பாரின் போகமுண வெண்ணுவரோ—தப்பாது
தம்மறிவைக் கண்டின்ப சாகரத்தில் மூழ்கிநிற்பார்
வெம்மைவினை போக விரைந்து. (௩௧௬)

ஒப்பாரிப் பேரை யொழித்தா லணுவளவும்
இப்பாரைக் காட்ட வியலுமோ—அப்பலைபோல்
பற்பலவா கத்தோன்றும் பாழ்நாம ரூபங்கள்
கற்பனையே யாங்கூர்ந்து காண் (௩௧௭)

கற்பனையா மாமாயைக் கட்டதனு லிங்குதித்தாய்
கற்பனையைக் கற்பனையாக் கண்டுவிட்டால்—அற்ப
மனமழியக் காண்பாய் வருத்துமய னீங்கும்
தினமறிவாய் நின்றொளிர்வாய் தேர்ந்து. (௩௧௮)

உடம்பை யுடம்பா வுணர்வை யுணர்வாத்
திடம்படவே கண்டுள்ளந் தேரின்—கடநேர்
உடம்பைநா னென்னு முறுதி யகலும்
மடமைவா ராது மதி. (௩௧௯)

**ம**ண்வடிவி லின்புளதா மாழ்கியுழன் றுலென்று
மண்வடிவைப் பொய்யா மதித்தழித்தல்—மண்வடிவாம்
ஆளையிடு காட்டினில்வைத் தக்கினியை மூட்டுகின்ற
வேளையிலோ தேர்தல் விளம்பு. (௩௨௦)

**சு**ட்டுப் பொருளெல்லாஞ் சுத்தவெளி யாகிவெறும்
கட்டுக் கதையாங் கனாப்போலாம்—எட்டுணையும்
இல்லை நினையன்றி யெவ்வுலகு நின்னினைவே
ஒல்லையினி தோர்ந்திதைநீ யுய். (௩௨௧)

**ம**ண்ணிற்குச் சாதி மதியுடையார் செப்புவரோ
மண்ணையாண் பெண்ணு மயக்குநமை—மண்ணதனை
அல்லா துலகின்க ணாண்பெண் ணலியுமிலை
சொல்லன்றி யாதுண்டு சொல். (௩௨௨)

**ம**ண்ணின் றிரிபே மனைமக்கள் பொன்னுடை
மண்ணேநீ யுண்பதது வன்மலமாய்—மண்ணுத்
திரிந்துபின் காய்கனியாய்த் தேன்பானெய் பாகாய்
விரிந்து மயக்குமுனை மிக்கு. (௩௨௩)

**ம**ண்ணிலாண் பெண்ணாக வாய்ந்ததனை நோக்காது
பெண்ணென்று மாணென்றும் பேசுகின்றார்—மண்ணொன்றைக்
கண்டழிக்கி னல்லறிவு காண்பாய்பின் மாணுநீ
அண்ணலுரு வாவா யமைந்து. (௩௨௪)

**பொ**ய்யைப்பொய் யாக்குதற்குப்போதமொன் றுவேண்டுமோல்
துய்யநிலை சோதித்துத் துன்னிக்காண்—உய்ய
வழியீதே யாகுமிந்த வாய்மைகொள் ளாயேல்
அழிவே யுனக்குரிமை யாம். (௩௨௫)

**அ**ன்னை தனைமனைவி யாகவழைக் காரெவரும்
அன்னையையன் னையா வழைப்பரன்றே—புன்மை
உடம்பையுடம் பாக வுணர்வையுணர் வாகத்
திடம்படநீ செப்பாதென் செப்பு. (௩௨௬)

**உ**டம்பையுடம் பாக வுணர்வையுணர் வாகத்
திடம்படவே கண்டு தெளிந்தால்—அடங்கொண்டிவ்
வாழ்வைமெய் யாக மனந்தனிலே யெண்ணிடாய்
ஆழ்வையா நந்தவெள் ளத்து. (௩௨௭)

ஆட்டத்திற் கூட்ட மகிலவாழ் வென்றறிவாய்
நாட்டமா ருதிருப்பாய் நல்லபொருள்—ஈட்டுதற்கா
நாளு முழைத்திட்டா னுதனடி சேர்வதெங்ஙன்
மாளுங்கா லென்செய்வாய் மற்று. (௩உஅ)

பொன்னு மனைவியும் புத்திரரும் புன்னுடம்பும்
மின்னலைப் போன்மறையும் வெய்யதாம்—இன்னலெலலாம்
மாறு தியற்று மனதைச் சலிப்பிக்கும்
ஆறுச் செயும்பிறப்பை யாய். (௩உகூ)

சூர னிரணியனுந் துட்டதுரி யோதனனும்
தீரந் தவங்கீர்த்தி செல்வமெழில்—தாரமனை
நீங்கி யமுதிறந்தார் நீவாழ்வில் மாழ்காமல்
பாங்கா வறங்கடமைப் பண். (௩௩௦)

உடம்போ டுலகும்பொய் யும்பர்வாழ் வும்பொய்
மடமனமா டாடும்பொய் மாயும்—சடவுலகில்
உண்மைப் பொருளில்லை யோக்காள மெய்ப்பொருளும்
உண்மைநீ முக்கானு மோர். (௩௩க)

நாளைநாள் வாரமொடு நன்மாத மாண்டெனநீர்
நாளைவீ ணுக்காதீர் நம்வாழ்வு—நாளை
இருக்குமென னிச்சயமோ வேத்திப் பணியின்
திருக்கருணை யீச்சுரனைத் தேர்ந்து. (௩௩உ)

மரணப் பெருநோயாம் வாதை வருமுன்
கரணப் புலச்சேட்டை காய்ந்து—புரணப்
பொருளா மறிவாய்ப் பொருந்துவா யாயின்
கருமாய்ந்து போகுங் கணி. (௩௩௩)

மரணப் பெருநோயான் மாள்வதற்கு முன்னம்
கரணமறச் சாதனத்தைக் கைக்கொள்—தருணம்
இதுவன்றி வேறில்லை யிக்கணமே யுன்னை
அதுவிதுவா காம லறி. (௩௩ச)

மரணமுறு மென்பதனை மான்மனத்தோ ரெண்ணார்
மரண மறவார் மகான்கள்—மரணமுறும்
கால மதனைக் கணக்கிட் டறிதலரி
தாலறத்தை யின்றேநீ யாற்று. (௩௩௫)

திடுக்கென்று கண்செருகின் செப்புநா வீழின்
திடுக்கென் றுறின்மரணஞ் சேர்த்திங்—கிடுக்கியபொன்
யாவரிடஞ் சிக்கிடுமோ யாவர்பங் காக்குவரோ
யாவரைப்பா ழாக்கிடுமோ வாய். (௩௩௬)

இன்றுபோ னாளையு மித்தேக மிவ்விடத்தில்
நன்றுநடஞ் செய்யுமென நம்பாதே—உன்றன்பால்
நாள்கிழமை பாரா னமன்வருவான் பன்னோய்கள்
தேள்பாம் புருவாகத் தேர்ந்து. (௩௩௭)

பேதியுருக் கொண்டழிப்பான் பேயாகிக் கொன்றிடுவான்
கோதிழைக்கும் பித்துருவாய்க் கொன்றிடுவான்—மாதர்நோய்
என்றெழுந்து கொல்வா னிருமலாய் மாள்விப்பான்
வன்றுயர்செய் கூற்றன் மதி. (௩௩௮)

பலபலவா நோய்வடிவாய்ப் பாரிலுள சீவர்
மலவுடம்பிற் புக்கு வருத்திப்—புலனவித்துக்
கொன்றிடலல் லாலியமன் கொல்லா னொருவரையும்
நன்றியற் றின்றே நயந்து. (௩௩௯)

சிறிய சுரம்வந்தாற் றேகவயப் பட்டு
வறியவரைப் போல வதைந்து—தறியனைய
சூரரும் வாடித் துடித்திறத்தல் கண்டுநீ
சீரறிவா காததென்னே செப்பு. (௩௪0)

எத்தனையோ பொல்லாநோ யிவ்வுடம்பி லுள்ளனவாம்
அத்தனையுஞ் சொற்றிடுதற் காயுளிலை—பத்தனே
பித்தமதி சூடு பெருங்கட்டி பாண்டிருமல்
மெத்தவருத் துஞ்சூலை வேர்த்து. (௩௪௧)

முதுகிற் பிளவு முகத்திலதி வீக்கம்
மதுமேக மாதியநோய் வந்தால்—மதிசெய்
புராணமுதற் கற்றதெலாம் போயொளிக்குந் தோன்று
நிராதரவாய் நிற்பாய் நெகிழ்ந்து. (௩௪௨)

குன்மங் கிராணி கொடியவரை யாப்பிணொடு
கன்ம விருமல் கடும்பேதி—என்னவுரை
நோய்க ணிறைந்துள்ள நொய்யவுடற் றன்மைகண்டு
பேய்மகனே யுய்யுநெறி பேண். (௩௪௩)

கண்ணோய்வன் காதுகுத்தல் கைக்குடைச்சல் காற்
புண்ணாகி வாயிற் புழுமலிதல்—உண்ணாவின் [குடைச்சல்
அட்சர மாதியநோ யாகிவரு மிவ்வுடம்பின்
பட்சம்விட் டுண்மைநிலை பற்று. (௩௪௪)

நாள்கிழமை மன்னுபட்ச நண்ணுமா தம்வருடம்
கோள்ராசி யாதியவாக் கோவையா—ஆள்விகிதம்
எந்நாளுங் கால னெழுதிவைப்பான் செய்வினைகள்
எந்நாளுஞ் செய்யறத்தை யிங்கு. (௩௪௫)

இன்றுபோ னாளை யிருப்பாயோ சாவாயோ
பொன்றுமுன நல்லறங்கள் போற்றிச்செய்—மன்றில்
நடிக்கும் பரன்கணங்க ணல்லனென வுன்னைப்
படித்தெழுது வார்கணக்கிற் பார்த்து. (௩௪௬)

கடன்மணலை யெண்ணிடினுங் கைக்குடம்பிற் காணும்
அடனோயை யெண்ண லரிது—விடநேர்
பகைஞர்போ னேரும் பலநோய்க்குள் ளாமுன்
மிகையுடல்வா ராவழியை வேண்டு. (௩௪௭)

உடம்போ டுயிரை யுருதுநமன் செய்வான்
உடம்புனக்குச் சொந்தமன்றீ துண்மை—அடலார்ந்த
காலனுறு முன்னுன்னைக் கண்டுசிவ மாவிளங்கின்
சாலவங் திப்பான் சமன். (௩௪௮)

குற்றமுள் ளாரைக் கொடியநோய் தந்தழிப்பான்
குற்றமற் றோரையோ கோவாய—நற்றவத்தர்
போலவுருக் கொண்டு புதுவிருந்து போலேற்பான்
சீலமுள கூற்றனாந் தே. (௩௪௯)

கணக்கிற் சிறுகுற்றங் கண்டாற்றண் டிப்பான்
குணக்குன்ற மன்னவனாங் கூற்றன்—தணப்பில்
கணக்கடித்து வேறெழுதான் காளகண்ட னார்தம்
கணங்கணக்கைப் பார்க்குமெனக் கண்டு (௩௫௦)

நமனுலகி னின்கணக்கு நண்ணாமற் பொல்லாத்
தமகுணத்தை நையத் தறித்திட்—டிமவான்
மகள்பாகன் வாழிடத்தின் மன்ன வறத்தைத்
தகவாகச் செய்நீ தழைந்து. (௩௫௧)

துப்பறியு மொற்றுவராற் றெல்லையுல கின்செயலைத்
தப்பில்லா மன்னவர்க டாமுணர்வார்—அப்படிபோல்
சீவர்செய் தீவினையைச் செய்யநமன் றாதுவரால்
ஓவறவே தேர்வனுனித் துற்று. (ருஉ)

மன்னவர்க டங்குடிசெய் வன்செயலுக் கேற்றபடி
இன்னலுறத் தண்ட மியற்றுவிப்பார்—துன்னிதுபோல்
கூற்றுவனுஞ் சீவர் கொடும்பவங்கட் கேற்றபடி
ஆற்றிடுவான் தண்டனைக ளாய்ந்து. (ருங)

சிறுகுற்ற மானுலுந் தேர்ந்தெழுதிங் கென்பான்
அறக்கடவு ளாணை தனக் கஞ்சி—மறலிதான்
ஞான வடிவுடையா னுசுகே துக்கருளும்
ஞானகுரு நீதிவழா னுடு. (ருச)

வேத முணர்ந்தோன் விகற்பகுணஞ் சற்றுமிலோன்
கோதற்ற வீசன் குறிநிற்போன்—சீதமுற்ற
நல்லார்க்கு நல்லனுய் நண்ணுவான் பொல்லார்க்குப்
பொல்லானுய்த் தோன்றுவான் போந்து. (ருரு)

ஆரேனு மஞ்சா னயனேனும் விட்டுவிடான்
தேரேறு செல்வரெனச் சிந்தியான்—சீரேய்ந்த
பாவலரென் றோரான் பழைக்கவீர்த் தேகுவான்
காவலனுங் கூற்றன் கறுத்து. (ருசு)

ஈசனிடத் தன்றி யெவரிடத்தும் பத்திசெயான்
ஈசனையே சற்குருவா யேற்றவன்பால்—மாசகல
நான்மறை நீதிகற்றோ னுத னுரைகடவான்
வான்வணங்குஞ் சண்டனு மன். (ருஎ)

தேம்பி யழுதிடுவோந் தேகமழி காலத்தில்
பாம்புதேள் செய்யான்போல் பன்னேய்கள்—தாம்வருத்த
ஆதலினு லிப்போதே யாரியனுர் பாதமலர்
தீதறவே போற்றுங்க டோந்து. (ருஅ)

கொடியநமன் மேதியின்மேற் குந்திவருங் காலை
அடியனைப்போ லுன்னையினி யாவர்—படியதன்கண்
காப்பரென வில்லாள் கழுத்தைக்கை யாற்கட்டிப்
பூப்பிளக்க வீழ்வான் புமான். (ருகூ)

மனையை நினைந்தழுவார் மாளுங்கான் மாந்தர்
வினையை வெறுத்து வெகுள்வார்—மனையாளைக்
கிட்ட வரவழைத்துக் கெட்டலை யாதிருக்கத்
திட்ட முரைத்திடுவார் தேர்ந்து. (௩௬௦)

இன்னொருகா லுன்முகத்தை யெவ்வாறு பார்ப்பனெனப்
பன்னிமுகம் பார்த்துப் பதைத்தழுவார்—மின்னலைப்போல்
மாயமாம் வாழ்வான் மதிகெட்டே னென்றுநைவார்
காயமா யம்மாகுங் கால். (௩௬௧)

தேவி வதனத்தைச் செத்தழியுங் கானோக்கிக்
கூவி யழுது குழுங்குவார்—பாவியே [வைத்தேன்
உன்பொருட்டாப் பொய்களுரைத் தொண்பணிபொன் சேர்த்து
நின்கற்பைக் காத்திடென்பார் நேர்ந்து. (௩௬௨)

இல்லாள் துணையெனவே யெண்ணிநம்பி நாள்கழிப்பார்
பொல்லாப் பலவிதநோய் பொய்யுடப்பில்—அல்லலுற
வந்திறக்கும் போது வயிறுப்ப வாய்குளறி
அந்தோவென் செய்வனென்பா ரார்த்து. (௩௬௩)

பொன்னுடம்பும் பொன்றுமெனின் புண்ணுடம்போ பொன்
நின்னுடம்பு மண்ணாகு நிச்சயமாய்—உன்னுருவோ [றுது
சோதி வடிவாகுஞ் சோதனைசெய் பேதமறச்
சாதிப் பிணக்ககலத் தான். (௩௬௪)

அகோவகோ வென்சொல்வே னன்புமிக்க மாணா
அகோவகோ வச்சிரமோ யாக்கை—அகோவகோ
மூன்றுலக மும்மழியு மும்முதல்வ ரும்மழிவார்
மான்மழுவோ னாண மதி. (௩௬௫)

நாளேற நாளேற நாற்றவுடம் போகிழமாம்
தேளேறிக் கொட்டுஞ் செயலேபோல்—கோளேறத்
துக்கம் பலவாக்குஞ் சுத்தமெ லாமழிக்கும்
இக்கணமே சாந்திபெற வெண். (௩௬௬)

கிழப்பருவ துக்கங் கிளத்துவன்கேள் மாணா
வழவழெனப் பேசவைத்து வாட்டும்—தொழச்சிவனைப்
புத்தி நிலைக்கவிடா போனதையும் வந்ததையும்
தத்தியுள றப்பண்ணுந் தான். (௩௬௭)

காலு நடுங்குங் கரநடுங்குங் கண்சுழலும்
தோலு நரம்புஞ் சுருண்டெழும்பும்—நாலுமே
கண்டபடி யாடுங் கடிய முதுமைதனில்
கண்டின்றே பாழ்ம்பிறப்பைக் காய். (௩௬௮)

முதுகிடுப்புங் கோணிவிடு முன்பின் னினைவில்
எதுவுமுன் னிற்காம லேகும்—முதுகுபற்றிக்
குந்தி நடக்கவருங் கோப மதிகரிக்கும்
மந்தியைப்போ னிற்கவைக்கு மால். (௩௬௯)

காதடைப்புக் காணுங் கருத்துக் கலைந்தோடும்
நாதனடி யுன்னியரு ளுமங்கள்—ஓதவரின்
வண்ணமுறு நாக்குளறும் வையத்துப் போகங்கள்
உண்ணடுங்க வாட்டு முருத்து. (௩௭0)

அழகு குலையும் மணிபற் கழலும்
வழவழெனப் பேச வருமே—உழையிருப்பார்
பொக்கையே யென்பார் பொரிமாவு தின்னென்பார்
துக்க முதுமையுறின் சூழ்ந். (௩௭௧)

நடக்கி விருமலுறு நற்பேச்சுப் பேசின்
அடக்கவொணு வாயாச மாகும்—விடக்கில்
நடுக்க முறுமக்கால் நல்லறிவு தோன்ற
படுக்கின் மலஞ்சரியும் பார். (௩௭௨)

நீங்கா விருமலுறு நெஞ்சடைக்கும் வாய்குளறும்
தேங்கா தொழுகுமே சீதமலம்—தாங்கா
தழக்கண்டால் மக்கண்மனை யக்காற் சிரிப்பார்
உழக்குவினை மாண்புரைப்ப தோ. (௩௭௩)

கபங்கட்டுங் கால்வீங்குங் காய்ந்தவயி றுப்பும்
தபஞ்செய்யா மக்களுக்குத் தாஞ்செய்—நிபகன்மம்
கண்ணுடிச் சாயையைப்போற் காட்டும் பலவுருவை
உண்ணுட்டத் திப்போதே யோங்கு. (௩௭௪)

பலகட்டம் மூப்பிற் படுவாரப் போது
கலகலெனப் பேசாதுட் காய்வார்—மலபாவம்
அக்காலஞ் சேர்ந்தொன்று வாற்றவொணு தாற்றுகின்ற
துக்கஞ் சொலலரிதாஞ் சூழ்ந்து. (௩௭௫)

பேசவாய் வாரா பெருமானைப் போற்றவெணின்
பாசம் பலவா பகைத்தழிக்கும்—தேசனைத்தும்
கெட்டழியும் வார்த்திகத்திற் கேடழிக்கு ஞானமிலாத்
துட்டரஃ தோர்ந்துய்யார் சூழ்ந்து. (௩௭௬)

மாறா விருமலுடன் மந்தியைப்போற் குந்தவைத்திங்
காறாக வெச்சி லழுக்குமலம்—சேறாக
நோய்பலவுஞ் செய்மூப்பின் நொய்ம்மைதனைச் சாற்றுவரார்
பாய்மனத்து மாணா பகுத்து. (௩௭௭)

கிழப்பருவ காலத்திற் கேடறுநன் ஞானம்
வழக்கா யறிதற்கு வாரா—சழக்கு
மனநிலைக்கா வாதலினால் வாலிபத்திற் றானே
தினப்பழக்க மாகவுனைத் தேடு. (௩௭௮)

கிழக்காலந் துக்கமுறுங் கீர்த்தியெலா மாயும்
கிழப்பிணமே சாவென்பார் கேளிர்—அழுக்கிழவன்
திண்ணைதனிற் றங்கென்பார் தின்னவுண வில்லையென்பார்
கண்ணைநிகர் மாணாநீ காண். (௩௭௯)

அன்னங் குறைந்துவிடு மாக்கை யழகழியும்
மன்னுபற்க ளெல்லாம் வழுவிவிடும்—பன்னுகின்ற
தாலங் குளறுந் தவறிவிழுந் தாலந்தோ
பாலர் சிரிப்பார் பழித்து. (௩௮௦)

கிழப்பருவம் வந்தாற் கிழவன்சொற் கேளார்
அழவழத் திட்டி யடிப்பார்—கிழப்பிணமே
செல்லாதுன் வார்த்தையடா சீச்சாவி தாவென்பார்
பொல்லாத மக்கள் புகைந்து. (௩௮௧)

மனைவிவெறுப் பாளுறவர் மக்கள்சீ யென்றே
உனைப்பலவாத் திட்டி யுவர்ப்பார்—பனைநேர்
உடலங் கிழப்பருவ முற்றா லதற்குள்
திடவறிவாய் நிற்பாய் தெளிந்து. (௩௮௨)

திண்ணையிற் றங் கென்பார் சிறுவர்களைப் பாரென்பார்
உண்ணிடுகூ ழென்பா ருறவினர்கள்—மண்ணுலகின்
வாழ்விதுதா னேவென்று மங்கி யழுதல்வரும்
தாழ்வுறுவ யோதிகத்திற் றான். (௩௮௩)

**பா**ர்க்கவைத்துண் கின்றூர் பதைபதைக்க மக்கண்மனை
சேர்த்தபொரு ளீந்தவர்பாற் சீரழிந்தேன்—பார்ப்பாரின்
என்றலவோ மோசமுற்றே னென்றழுவா னேற்கிழவன்
என்னசுக மூப்பதனி லிங்கு. (ரு௮௪)

**ம**க்களில்லாட் காக மனமாரப் பொன்சேர்த்தேன்
துக்கக் கிழக்காலந் துன்னுங்கால்—அக்கரையாச்
சோறிடுவா ரென்றெண்ணிநான் சோரவிட்டா ரென்செய்வேன்
சோறிடுமி னென்றழுவான் சோர்ந்து. (ரு௮ரு)

**மை**ந்தனிட னொந்து மகளில்லஞ் சேர்வதற்கு
நைந்தமனத் தோடு நடக்கிலிள—மைந்தர்
கிழவாநில் லென்றுடையைக் கிட்டி யிழுப்பார்
அழக்கிழ வன்சிரிப்பா ரார்த்து. (ரு௮௬)

**ஊ**ன்று தடியிழுப்பா ரோகோ கிழவாநீ
தேன்றளும்பத் தெம்மாங்குச் செப்பென்பார்—ஊன்றி
நடக்க விடார்சிறுவர் நைய மனந்தான்
இடக்குகளே செய்வா ரெதிர்த்து. (ரு௮௭)

**இ**ருமி யழுகிழவ னேக்கமுற்றுத் துள்ளி
அரிசிவனே கோவிந்தா வாள்வாய்—தெரியாச்
சிறுவரிடஞ் சிக்கியான் சீரற் றழுமிச்
சிறுமையைப்பா ரென்பான் சினந்து. (ரு௮௮)

**த**ள்ளாடித் தள்ளாடித் தன்புதல்வி யில்லடைந்தான்
கள்ள மனைவிமக்கள் காய்ந்துசெய்த—சள்ளைகளை
ஒவ்வொன்று வுன்னி யுரைத்தான் புதல்வியிடம்
கவ்வையறு மாணவனே காண். (ரு௮௯)

**க**ண்டுமக டந்தைதனைக் காலலம்ப நீரளிக்காள்
தொண்டுருகிச் செய்திடாள் துக்கமுற்றுப்—பண்டைநாள்
உற்ற குறைசொல்லி யொப்பாரிப் பாட்டிசைத்தாள்
கற்றதந்தை யென்செய்வான் கண்டு. (ரு௯0)

**கா**லமெலாம் புத்திரற்கே கட்டமுற்றுப் பொன்சேர்த்தாய்
கோலம் பலசெய்தாய் கூத்தியுடன்—ஆலமனப்
பாவிசண் டாளா பரிந்துனையோ காத்தலெனக்
கூவிச் சலித்தாள் கொதித்து. (ரு௯க)

பாவிமகன் றன்னைநம்பிப் பன்னுசாச னம்வரைந்தேன்
கூவியழு தாலுநல்கான் கூழுமிப்போ—தாவி
மனைவியுடன் கூடியெனை வைதே யடித்தான்
உனையடைந்தேன் காவென்ரு ளேய்ந்து. (நகூ௨)

கேட்ட புதல்வி கிளர்பொருளைச் சாசனஞ்செய்
நாட்டனிலெற் கோர்சொன் னவிலவிலை—வாட்டமகன்
இங்குவந்தாய் தந்தாயென் றேங்கி யிடித்துரைத்துப்
பங்கஞ்செய் தோடென்ருள் பார்த்து. (நகூந)

பெண்சொல்லைக் கேட்டுப் பிரமித்தே யிக்கிழவன்
எண்ணு தெழுதிவிட்டே னென்மகளே—உண்ணுடி
உண்மைதனை யின்றுணர்ந்தே னேதிகெட்டே னென்செய்வேன்
கண்மணிகா வென்ருன் கலுழ்ந்து. (நகூச)

நன்ருநீ வாழ்நா ணகைசேலை சீதனங்கள்
ஒன்றுமுத வாமலென் னுள்வாட—அன்றுநீ
செய்த கொடுமைகளைச் சித்தத்தி லெண்ணுமல்
எய்தினையே வென்ரு ளெரிந்து. (நகூரு)

உன்னையிங்கு யான்வைத் துபசரித்தா லுன்மருகர்
என்னை யடித்துமிக வேசிடுவார்—என்மாமி
பின்னு மிகழ்ந்திடுவாள் பேதமுற்றென் மாமனுர்
உன்னை யவமதிப்பா ரோடு. (நகூகூ)

ஏகென்று சொற்றவுட னென்செய்வா னிக்கிழவன்
ஏகென் றுரைப்பதற்கோ வென்மகளே—வாகெழவே
பெற்றுவளர்த் துன்னைப் பெரியவிடத் தீந்ததெனச்
சொற்றழுதா னேங்கித் துடித்து. (நகூள)

மாமி யிகழ்ந்திடுவாள் மாமனுர் மைந்தரொடு
தாமிழித்து வைவார் சதிகாரர்—மாமியவள்
என்ன பொருளீந்தா னெத்தவலை செம்பளித்தான்
என்னசொந்த மிங்கென்பா ளே. (நகூஅ)

என்னபொருள் சீதனமா யீந்தானுன் றந்தையென் றிங்
கென்னை யிழித்துரைப்பா னென்மாமன்—முன்னே
தவலைசெம்பு கட்டிற் றலையணைபாய் தாரான்
இவணடைந்தா னென்பளத்தை யே. (நகூகூ)

இப்படியு முண்டோயா னென்செய்வேன் பிள்ளைபெற்றும்
அப்பா வறுமுகவா யானைமுகா—இப்புவியில்
பெற்றபெண் ணென்றடைந்து பெற்றதுநான் போதுமெனச்
சொற்றழு தான்கிழவன் சோர்ந்து. (சOO)

பாவிமகன் போற்றுவனேற் பட்சமிலாப் பெண்ணிடத்தில்
ஆவியழிந் தாலுமுறேன் யானென்று—கூவி
அழுது கிழவ னடிவயிற்றின் மோதிப்
புழுவாத் துடித்தான் புலர்ந்து. (சOக)

பிள்ளைபெண்ணை பெற்றுநான் பெற்றதுக்கம் போதுமென
உள்ளங் கலங்கி யுமைபாகா—வள்ளலே
மன்றி னடிப்போனே வந்துதுணை செய்திடுவாய்
என்றழுதான் மூப்ப னெரிந்து. (சOஉ)

பிள்ளைதா வென்று பெருமானை வேண்டியந்தோ
பிள்ளைபெற்று ரென்பெற்றார் பேருலகில்—பிள்ளைகளால்
அல்லலலா வின்ப மணுவு மிலையென்றே
சொல்லியழு தான்கிழவன் சோர்ந்து. (சOரு)

நாண மடமச்ச நற்பயிர்ப்பென் னூற்குணமும்
காண வமைந்தபெருங் கற்புடையாள்—மாணமையப்
பெற்றபிள்ளை வேதப் பெருநெறிச்சென் றீன்றவர்கள்
உற்றிடச்சீர் செய்வா னுவந்து. (சOச)

தந்தைபெறு நற்பெயரைச் சாய்த்தழிக்கு மைந்தரணி
கந்தையுட னுண்ணக் கவினுணவும்—குந்தி
இருக்கவிட மும்மின்றி யின்னலுற்றுப் பின்னே
கருக்குநர காழ்வார் கடிது. (சOரு)

என்றுபல நீதி யிசைத்தழுங்கி யக்கிழவன்
கொன்றுயிரு னுண்டு குடித்தாடும்—நன்றுணரா
மைந்தனுக்குப் பொல்லாங்கே வந்தடையச் சாபங்கள்
நைந்தளித்தா னுள்ள நலிந்து. (சOசு)

பொருந்து மிடமும் புசிப்புணவு மின்றித்
தெருவுதொறு மிக்கிழவன் சென்றான்—அருந்துதற்குச்
சோறிடுமி னென்றழுது சோர்ந்து விழுந்திறந்தான்
ஏறிடிபோற் சால விரைந்து. (சOஎ)

நிதமுமற வாதுகற்ற நீள்வக் கணையற்
புதமுடனே பார்ப்போர் புகழ—விதம்விதமாப்
பாடியழு வாண்மனைவி பாரினம னாமவளே
தேடியுரைப் பாள்குற்றந் தேர்ந்து. (௪௦௮)

நரையுங் கிழமுகமு நண்ணாமுன் மாணா
விரைவுற்றா நந்தநிலை மேவு—நரைகாணாப்
பக்குவங்கள் செய்தாலும் பத்துநூ றாயிரமாத்
துக்கமுறு மூப்பதனிற் சூழ். (௪௦௯)

நரைநடுக்க மெய்துமுன்னே நல்லறிவு கெட்டுத்
தரையிற் கிடந்துருண்டு சாமுன்—நரைமயமாம்
தாடி முகங்கண்டு சார்சிறுவ ரேசாமுன்
நாடியறி வாய்மிளிர்நீ நன்கு. (௪௧௦)

வாய்குளறக் கண்சுழல வன்பல் லுதிர்ந்தொழிய
நாய்போல் குரைத்து நடுங்குங்கால்—வாய்மைநிலை
தள்ளா தடைந்திடுதல் சால்பாமோ மாணவனே
எள்ளா துரையிங் கெனக்கு. (௪௧௧)

பார்த்திருக்கும் போதேவன் பல்லாடுங் கண்சுழலும்
வேர்த்துமுகம் வாடு மினுக்கழியும்—நீர்க்குமிழி
போலழியு மிவ்வுடம்பு பொல்லாத விவ்வுடம்பால்
ஏலவென்ன கண்டா யியம்பு. (௪௧௨)

இவ்வுடல மித்தகைத்தென் றெண்ணா மதியிலியே
வெவ்வினையே செய்து மிகக்கொடிய—கொவ்வையிதழ்
மின்னார்த மேனி மினுக்காம் வலைப்பட்டு
நன்னாளைப் போக்கலென்னீ நைந்து. (௪௧௩)

அப்பாவெப் பற்றை யகற்றிடினும் பெண்பற்றுத்
தப்பா துனைமயக்குஞ் சாந்தனையும்—செப்பும்
அதற்கிளைய பொன்மயக்கு மாட்டுமுனைப் பேய்போல்
அதஞ்செயவை பொய்யென் றறிந்து. (௪௧௪)

பெண்வடிவ மாண்வடிவாம் பேத வடிவங்கள்
மண்வடிவே யாகுமவை மாந்தர்களை—எண்ணரிய
சித்துவித்தை காட்டித் திகைக்கும் படிசெய்யும்
சித்தத்தை வாட்டுஞ் செயிர்த்து. (௪௧௫)

வேதமுத லாநூல் விகற்பமறக் கற்றுரும்
காதலை யோரணுவுங் காய்ந்தகற்றூர்—மாதரெழில்
கண்டுகண்டு சிந்திப்பார் கற்றதனல் யாதடைவார்
சண்டனுக்கென் சொல்வார்நீ சாற்று. (சகசு)

பெண்வடிவை நாடிப் பிரமித்துப் பாராதே
பெண்வடிவே பார்க்கில்பல் பீழையுறும்—பெண்வடிவில்
மண்ணன்றி யில்லை மலமுதிரஞ் சீழ்சளியூன்
எண்ணரிய நோய்தருமென் றெண். (சகள)

உதிரப் பெருக்கேறி யோவியம்போற் காட்டிக்
கதியழிக்கும் பெண்ணுருவைக் காணேல்—வதியதனல்
என்னசுக முண்டாகு மீனமலப் பாண்டமதை
உன்ன லொழித்தே யுறு. (சகஅ)

துக்கம் விளையுமிடந் தொத்துநோய் தோன்றுமிடம்
தக்கவர்க ளாராய்ந்து தள்ளுநிணம்—மிக்கவராம்
தேவரொடு மூவரையுஞ் சேர மயக்குவிடம்
பாவலர்சொல் பாவையுடல் பார். (சகசு)

மார விருக்குமிடம் வஞ்சவினை தோன்றுமிடம்
பேரவா தங்குமிடம் பெண்ணுடம்பு—சீரமைந்த
என்மா ணவனே யிகழாதிவ் வுண்மைதனை
உன்னி யறிந்திடுதி யுற்று. (சஉ0)

சந்தைக்கூட் டத்தைச் சமட்டியாப் பார்ப்பதுபோல்
எந்தவிடத் தெம்மா தெதிர்வரினும்—அந்தவிந்த
மாதரெனக் காணுது மாசமட்டி யாப்பார்க்கின்
கோதடையா துள்ளமிது கொள். (சஉக)

அந்தவிந்த மாதென் றடையாளம் வைத்துன்னில்
பந்தமுறு நெஞ்சலையும் பாவமுமாம்—எந்தவெந்த
மாதர்தமைக் கண்டாலு மாதா தமக்கையெனக்
காதலறக் காணீ கசந்து. (சஉஉ)

காமத்திற் காசையன்பு காதல் பிரியமென
நாமம் பலவா நவில்வாரக்—காமத்
தடிப்பேமா வாசனையாய்த் தாக்கிவினை யாக்கி
நடிப்பாம் பிறப்பீயு நாடு. (சஉங)

மாதர்மயற் காற்றான் மனந்தான் சுழன்றலையும்
மாதர் மயக்கமறின் மன்னுமனம்—ஆதலினால்
மாணவனே மாதர் மலர்முகத்தைப் பாராதே
மாணமைந்த வாலறிவாய் மன். (௪௨௪)

கல்லொத்த நெஞ்சுங் கரையச்செய் வார்மடவார்
அல்லும் பகலுமவர்க் கார்வமுற்றுச்—சொல்லரிய
எண்ணம் பலவுற்றே யேங்கியழிந் தார்பல்லோர்
திண்ணறிவாய் நின்று திகழ். (௪௨௫)

கரியகண்ணன் மோகினியாய்க் கண்ணுதல்பா லெய்திப்
பெரிய மயலளித்துப் பேணி—அரிகர
புத்திரனைப் பெற்றானேற் பொய்ம்மடவார் மாலதனை
எத்திறத்த தென்றுரைப்பே னிங்கு. (௪௨௬)

சிவனாரே பெண்மயக்கிற் சிக்கினா ரென்னின்
தவமுனிவ ரென்செய்வார் சாற்றின்—எவருக்கும்
வெல்வ தரிதாகும் வித்தைநோக் குண்டாயின்
வெல்வ தெளிதாம் விரைந்து. (௪௨௭)

கண்டாலும் பாவங் கருதினு மாபாவம்
வண்டார் மலரளக மங்கையரைத்—தொண்டனே
ஈசுரனே பெண்வடிவ மேற்றா னெனப்பணிநீ
தேசுறுவாய் நன்மார்க்கஞ் சேர்ந்து. (௪௨௮)

தையலரென் பாரென்றுந் தக்கார்க்குங் கேடிழைப்பார்
பைய வறிவைப் பகைத்தழிப்பார்—மையலிலார்
காணுவா ரிவ்வுளவைக் காணா வறிவிலிகள்
கோணுவார் நெஞ்சங் குலைந்து. (௪௨௯)

மண்மயக்கின் போக்கறுத்து வண்பொன்னி னாசையற்றுக்
கண்மூடி நற்றவஞ்செய் காசிபரும்—பெண்மால்
அடைந்துபல மக்க ளவனியிற்பெற் றாரேல்
நடையிலரென் னுவார் நவில். (௪௩௦)

நாட்டிலுறிற் பெண்மயக்க நண்ணுமென மாபெரியார்
காட்டிலுறும் போதுமது காரிகையாய்—ஆட்டை
அடித்துண்ணு மாபுலிபோ லன்னாரை யுண்டு.
துடிக்கத் தவமழிக்குஞ் சூழ்ந்து. (௪௩௧)

எந்த விடங்களிலு மேதமிலா வீசானே
பந்தமற வீற்றிருப்பன் பார்த்தலரி—தந்தவரன்
பெண்ணு ணவியாய்ப் பிரிப்பரிய பூரணமாய்
நண்ணுநிற் பானேர்ந்துய் நன்கு. (சௗஉ)

ஆனதனுற் பெண்ணை யவளிவளென் றேராதே
ஈனமற்ற வெவ்வுயிரு மெம்பகவான்—ஆன
வடிவென்றுய்ந் தோர்ந்து வடிவமற மாணு
முடியவறி வாய்நீ முனைந்து. (சௗௗ)

பெண்மயலைப் போக்கப் பெரியார்கள் பத்தியமா
வண்மையுடன் சொற்றபடி வைகறையில்—அண்ணலடி
போற்றி யெழுந்திருந்து போய்க்குளித்துப் பூவெடுத்தே
எற்றரன்றன் பூசை யியற்று. (சௗச)

பெண்வடிவை மண்வடிவாப் பேதுறு தோர்ந்தவர்கள்
எண்ணுவரோ வவ்வடிவி லின்புளதா—வண்ணமிக்க
பெண்வடிவம் ஞானிகளைப் பித்தாகச் செய்திடுமோ
கண்ணனைய மாணு கழறு. (சௗரு)

மண்ணினது கற்பனையே மங்கைநல்லா ரென்றென்றுய்ந்
தெண்ணிப்பார்த் திச்சை யிகழ்ந்தழிநீ—மண்வடிவாக்
கண்ட கடம்போலக் காண்பாயேற் கட்டுறுய்
ஒண்டவமே செய்வா யுவந்து. (சௗசா)

மண்பூத மொன்றழிக்கின் மற்றையநாற் பூதமும்
நண்ணுமெய் யாவென்ன நாமறிவோம்—பெண்ணுகத்
தோன்றி யிருப்பதெது சொன்மாணு மண்ணன்றே
ஊன்றிப்பார் காண்பா யுளவு. (சௗஎ)

மாலற்ற வுன்வடிவை மாவெளியாக் காண்பாயேல்
கோலமட வார்மயலாற் கோதடையாய்—பாலைக்
கடையுங்காற் பட்டவெண்ணெய் காணப்பா லாமோ
உடைந்துதயி ராமோ வுரை. (சௗஅ)

பெண்ணுடம்பை யாடவரும் பேதைமையா லாணுடம்பைப்
பெண்ணும் விரும்புவது பேண்டுகிலால்—தண்ணொளிசேர்
கல்லிழைத்த பூணுற் கனகப் பணியதனால்
மெல்லியபூ வாலெனவே விள்ளு. (சௗகூ)

இன்பநிலை கண்டோ ரினிப்பிறவா வீடுறுவார்
இன்பநிலை காணாதா ரேந்திழையார்—துன்புதரும்
மாயாபா சத்தான் மயங்கியெல்லை யில்லாத
ஆயாசத் தாலழிவா ராய். (சசo)

எந்தப் பொருளைநீ யின்புற்றுப் பார்த்தனையோ
அந்தப் பொருளுனைத்துன் பாழ்த்திவிடும்—அந்தப்
பொருட்கு முதற்பொருளைப் போக்கியணு வாக்கிச்
செருக்கற்று வின்புறுவாய் தேர்ந்து. (சசக)

இச்சை மிகுந்திடநீ யெப்பொருளும் பாராதே
இச்சையுற நோக்கிலந்த விச்சையது—லச்சையுறப்
பந்தத் தழுத்தும் பலர்பழிக்கச் செய்துவிடும்
எந்த விதத்து மிடர். (சசஉ)

இச்சையற லல்லால்வே றில்லைசிவ மாவதற்கிங்
கிச்சையுற லென்கொண்டோ வென்மாறு—துச்சமென
ஞாலத்தை நீயகத்தி னுடாத நாள்பெற்றால்
காலத்தை வெல்லாய் கதித்து. (சசந)

பெண்ணிடத்தி லாசைகொண்டு பேய்போ லலையிலப்
பெண்ணாசை யுன்னைப் பிடித்திழுத்துக்—கண்ணில்லாப்
பொன்னவா தன்னுட் புகுத்து மதுவந்தால்
பன்னரிய துன்பாம் பல. (சசச)

மெய்யைப்பொய் யாக்கிவிடு மேல்விளையும் பாவமெண்ணு
துய்யரையும் பொய்யாக்குந் துக்கப்பொன்—வெய்யதாம்
பெண்மயக்கிற் பொன்மயக்குப் பேசிற் பெருமயக்காம்
எண்ணரிய துன்புநல்கு மே. (சசரு)

நல்லாற்றி லீட்டுபொரு ணல்லோர்க் கிடுக்கணுறின்
இல்லையெனு தீந்திடச்செய் தின்பளிக்கும்—பொல்லாப்பொன்
நல்லோர்க்குத் துன்புசெயு நண்ணும் வறியவருக்
கில்லையெனச் செய்யு மெரிந்து. (சசகூ)

பொன்னினினை வுள்ளளவும் புத்தி தடுமாறும்
பொன்னினைவு பொய்யைப் புகல்விக்குந்—பொன்னினைவு
நற்றவர்மீ துங்குற்ற நாட்டுவிக்குந் தொன்னூல்கள்
கற்றவரை யும்மறைக்குங் காண். (சசஎ)

முன்னுக்குப் பின்முரணு மோகமொழி பேசவைக்கும்
பொன்னுறுதற் காஞ்சொற் புகலவைக்கும்—மன்னுணர்வோர்
நல்லாரைப் பொல்லாரை நாடாதொன் ருக்கவைக்கும்
பொல்லாப்பொன் ணுசை புகைந்து. (சசஅ)

பணமென்னும் பாழாசைப் பற்றறுக்கார் கற்றும்
பணஞ்சேர்க்க வாசைப் படுவார்—பணமதுதான்
எண்ணம் பலவளிக்கு மென்றுஞ் சுகந்தாரா
திண்ணமா கச்சேர்க்குந் தீது. (சசகூ)

பொன்போ லொளிருமனம் பொன்மயக்காற் றுன்படையும்
பொன்னுருவோ மண்ணுருவம் புக்குணரின்—பொன்
உண்ணு ருறங்கிடா ரோயாக் கவலைகொள்வார் [மயக்கோர்
பண்ணு ரறங்கள் பரிந்து. (சரு௦)

பொருள்சேர்ப்பா ருண்ணூர் புகழறமுஞ் செய்யார்
அருளுண்டா மார்க்க மறியார்—மருள்கொண்டு
பேசிக் கலங்கிடுவார் பேசுவா னைக்காணுர்
ஏசினையே கொள்வா ரியைந்து. (சருக)

கடலொத்த செல்வர் கடவுளடி யாரைப்
படபடெனப் பேசிப் பழித்து—நடநடெனக்
கூவித் துரத்திடுவார் கோதார் நரகமெலாம்
மேவித் துயருறுவார் மிக்கு. (சருஉ)

வேறெண்ணங் கொள்ளேனீ வீணுகப் பொன்சேர்க்க
வேறெண்ணங் கொண்டவர்கள் வீணுனர்—மாறெண்
பணமிருக்க மாண்டவரைப் பார்த்திருந்து நெஞ்சே
பணமரணுக் கொள்வதென்ன பாங்கு. (சருங)

இச்சையற விச்சையற வின்பவறி வாயொளிர்வாய்
இச்சையுற விச்சையுற வெப்போதும்—நிச்சயமா
நாய்தனினுங் கீழாய் நலிவாய் மயல்மாற
ஆய்ந்தறிவாய்ச் சிந்தித் தமர். (சருச)

செல்வமிகக் கொண்டவர்கள் சீரறங்கள் செய்யாரேல்
செல்வமுற லாற்பயனென் சீசீசீ—செல்வத்தைத்
தான நெறியிற் றகவாச் செலவிட்டால்
வானமெலாம் போற்று மகிழ்ந்து. (சருரு)

பார்த்திருக்கும் போதே பணமுடையார் மாள்வதைநீ
பார்த்திருந்தும் பாழாம் பணந்தன்னைச்—சேர்த்துக்காத்
தென்ன பயன்பெற்று யேழைமுகம் பார்த்திரங்கி
உன்னி யறஞ்செய் யுவந்து. (சருசு)

வாயடைந்து கண்ணிருண்டு வைத்த பொருண்மறந்து
தூய வுணர்வற்றுச் சோர்வடைந்து—காயம்
புரண்டுருண்டு மாளுங்காற் பொல்லாய் துணையார்
இருண்டநமன் றாதரலா லெண். (சருஎ)

சிக்கனமாப் பொன்சேர்ப்பாய் சீரறங்கள் செய்திடாய்
துக்கக் கடலழுந்திச் சோர்ந்திடுவாய்—இக்கணமே
துக்க மறுத்தொழிக்குஞ் சூத்திரத்தைத் துல்லியர்பால்
தக்கபணி செய்துணர்வாய் சார்ந்து. (சருஅ)

அரிதாகச் சேர்த்த வணிபொருளாற் றூனம்
புரியாயேற் றீங்கு புரிய—விரியுமனம்
அத்தீங்கால் கண்கைகா லற்ற வுருத்தாங்கிச்
செத்திடுவா யுண்டியின்றித் தேர். (சருகூ)

காலில்லார் கையில்லார் கண்ணில்லா ராமிவர்கள்
மாலினுன் முன்னுயிர்கண் மன்னியகை—காலினையும்
வெட்டி விழியை வெடுக்கென்று குத்திய
துட்டர்களே யாவரெனச் சூழ். (சகூo)

எந்தவெந்தக் குற்ற மெவரெவரெவ் வாறுசெய்தார்
அந்தவந்தக் குற்ற மவரவர்க்குச்—சிந்தாமல்
செவ்வையாத் தீமைதருந் தேவர்கோ ளாணையிது
செவ்வே யுணர்ந்துநன்மை செய். (சகூக)

ஆனதனூற் பாவ மணுவளவு செய்தாலும்
மான மழிக்கும் மதிகெடுக்கும்—ஈனச்
சிறுமையெலாஞ் செய்துன்றன் சிந்தை கலக்கும்
வறுமைக் கடியாக்கும் வாய்ந்து. (சகூஉ)

காமிகள்செய் தீமைகளைக் கண்ணுடையார் கண்டுணரப்
பூமிபுகழ் நான்முகன்றான் போதிப்பான்—தோமிகுத்த
ஆணைக்கால் வாத மருஞ்சுரமோ டாறுப்புண்
ஏனைய நோயனைத்து மீந்து. (சகூங)

இன்பதுன்ப நம்மிடத்தோ வீசனார் தம்மிடத்தோ
உன்னிச்சற் றுள்ளே யுரைமாணா—வன்மனத்தால்
தப்புநெறி சென்றக்காற் சார்வோம் பெருந்துக்கம்
அப்பரானுக் கில்லை யவை. (சகூச)

நினைவிற்கோர் சன்ம நினைத்தவண்ண மீவான்
மனைமக்க ளில்லா மகேசன்—நினைவை
நெறியா வருமிடத்தி னீக்கிநிற்பா யாயின்
அறிவாக வேயமர்வா யார்ந்து. (சகூரு)

பள்ள முளவிடத்திற் பாயுநீர் நிற்பதுபோல்
கள்ளமனத் தார்பால் கடுந்துன்பம்—கொள்ளையாய்
நிற்குநீ கள்ளமன நீக்கி யிருப்பாயேல்
நிற்குமுன்பா லின்ப நிலைத்து. (சகூசு)

உயிர்தோறு நம்மீச னுற்றிருப்பா னேனும்
மயலுடைய வர்க்கு மறைவான்—உயிர்கள்
நினைவின் படியே நினைவிற்கோர் சன்மம்
தனையளித் தாள்வான் றழைந்து. (சகூள)

நன்மையையோ தீமையையோ நாஞ்செயுங்காற் சாட்சியா
வன்மையுள மன்னிமா றுதறிந்து—புன்மையுடல்
தந்துவினைக் கீடாத் தகுபலன்க ணல்கிடுவான்
செந்தணனேர் மேனிச் சிவன். (சகூஅ)

கருணை வடிவன் கருதடியா ருள்ளத்
திருணைய வோட்டு மிறைவன்—உருவருவன்
இன்பமே யல்லா விடுக்க ணொருபோதும்
அன்பருக்குச் செய்யா னழன்று. (சகூகூ)

உலகசுக நோக்கா துணர்வாக நிற்க
மலமிலரன் றன்னையுன்னி வாழ்த்தின்—இலகரன்றான்
ஞானவிசா ரஞ்செய்ய நல்லார்பாற் சேர்த்திடுவான்
ஊன மறுப்பா னுவந்து. (சஎ0)

அடக்க முடைய வரனடியா ரென்றும்
விடக்குடலை நம்பி மெலியார்—நடக்கின்
கரணஞ்சென் மார்க்கமாக் கண்கைக ளாட்டார்
புரணநிலை நிற்பார் புரிந்து. (சஎக)

உடம்பினுற வேயாவ ருற்றமனை மக்கள்
உடம்பிற்கே பூணு முடையும்—உடம்பிற்கே
துக்கசுக மென்பார் சுகிப்பார் பராநந்தம்
நக்கனடி யார்க ணயந்து. (௭௭௨)

பிணவுடம்பு நீங்குங்காற் பேதையர்போற் கூவி
யுணங்கிநொந்து தாமா வுடம்பை—எணமாட்டார்
அன்னியம தாக்கண் டவமதித்தா ராதலினல்
உன்னிநிற்பார் தம்மையே யோர்ந்து. (௭௭௩)

எக்குலத்தா ரேனு மிறையரனுக் கன்பரேல்
நக்கனுரு வாவவரை நான்பணிவேன்—மிக்கருள்கொள்
நந்தன் முதலாய நாயனு ரையுலகம்
நிந்தையறப் போற்றிடலோர் நேர்ந்து. (௭௭௪)

பன்றிக்குத் தாயாகிப் பால்கொடுத்தா னீசனென்றுல்
என்னுரைப்பே னீச னெழிற்கருணை—அன்னவனே
எவ்வுயிர்க்கு மன்னையென வேனெப்பார் பண்டிதர்கள்
எவ்வமிலா மாணு வியம்பு. (௭௭௫)

ஈச னகண்டமா யெங்கு மிருப்பதனை
ஆசற்ற மெய்யுணர்வி னலறிந்து—பாசமறச்
சற்றுநீ சிந்தி சதகோடி பாவங்கள்
அற்றுவிடு மின்பமுறு மாய். (௭௭௬)

கருணையே யீசன் கவின்வடிவ மன்றித்
தெருள்சுகமு மேயாகுந் தேரின்—ஒருவடிவும்
ஈசனைவிட் டில்லையிவை யெண்ணியவன் றனையென்றும்
நேசமொடு பாசனைசெய் நேர்ந்து. (௭௭௭)

பிறப்புப் பிணிமூப்புப் பேராச்சாக் காடு
மறக்காத நல்லாரை மாண்பார்—அறத்துருவாம்
ஈசன் கருணையினு லீன வினையறுத்துத்
தேசறிவ தாச்செய்வான் றேர்ந்து. (௭௭௮)

பொன்போ லிலங்கு புனிதகுண முள்ளாரை
மின்போ லிலங்குசடை வெள்விடையோன்—இன்போடு
சற்குருவாத் தோன்றித் தனையறியச் செய்திடுவான்
நற்குணத்து மாணவனே நாடு. (௭௭௯)

தன்வடிவைக் காணவுப சாந்தநற் காரணமாம்
உன்னிவிடேல் வேறுதுணை யுள்ளதெனத்—தன்வடிவைச்
சாந்தமிலார் காணார் சலிக்குஞ்சன் மக்கடலை
நீந்திநிலா ரீது நிசம். (௪௮௦)

சாந்தமிலாக் கல்வியினர் சங்கையறார் ஞானமுறார்
பாந்தணிகர் நெஞ்சின் பதைப்பறுத்தே—காந்தமுறச்
சாந்த முதற்படியாச் சாற்றியுளா ராதலினால்
சாந்தகுண மப்பரொக்கச் சார். (௪௮௧)

வெகுண்டடித்த வில்லடிக்கும் வெங்கல் லடிக்கும்
மிகுந்த பிரம்படிக்கும் வெம்பித்—தகுமுளத்துள்
சீற்றஞ் சிவனார் சிறிதுங் கொளவில்லை
போற்றிதுபோற் சாந்தம் பொருந்து. (௪௮௨)

வனசரன்கண் ணப்பன் மகிழ்ந்தரனார் கண்ணில்
வனசவடி வேய்செருப்பை வைக்க—அனகசிவன்
உற்றானோ சீற்ற முவந்தருளைத் தந்திட்டான்
எற்றாமற் சாந்தங்கொ ளேய்ந்து. (௪௮௩)

முத்தியுற வாசையுளார் மோகமுளார் சொற்கேளார்
பத்தி நெறியிற் பதிந்துநிற்பார்—எத்திறத்தும்
சாந்தநிலை யுற்றுச் சடவுடம்பி னேக்கறுப்பார்
சேந்தரைப் போலத் தெளிந்து. (௪௮௪)

சாந்தந் தனையடைந்து சன்மக் கடல்கடக்கப்
பாந்தளணி மேனிப் பரமசிவன்—ஈந்திட்ட
இப்பிறவி தப்பிலினி யெப்பிறவி வாய்க்குமோ
இப்பொழுதே யுய்ந்திடநீ யெண். (௪௮௫)

நான்மறையுஞ் சாற்றுகின்ற நற்சாந்தி யெய்துவையேல்
வான்மறந்து பூலோக வாழ்வுமறந்—தூன்மறந்து
தானா விளங்குந் தனிநிலையைப் பெற்றிடுவாய்
வானாடர் போற்ற மகிழ்ந்து. (௪௮௬)

பிரமவித்துத் தூய பிரமவர னல்ல
பிரமவரி யான்சீர் பிறங்கும்—பிரம
வரிட்டனெனு நால்வருண் மன்வரிட்ட னவான்
அரிட்டமுறா னென்று மயர்ந்து. (௪௮௭)

நால்வர்களு மோர்நிலையை நண்ணிடினு நல்வரிட்டன்
மால்வதைத்த லால்வினையால் வாட்டமுறான்—மால்சிறிதும்
இல்லாத மூவர்களு மேய்ந்தபிரா ரத்தத்தால்
பொல்லாங்குஞ் சேர்வார் புவி. (௪அஅ)

சுகதுக்க முற்றார்போற் றோன்றிடினு மந்தச்
சுகதுக்கத் திற்கயலாத் தோய்வார்—சுகதுக்கம்
தோற்றமெனக் கண்டிருப்பார் சூரியன்போல் சான்றான
சாற்றரிய முன்மூவர் தாம். (௪அகூ)

தெள்ளவினை கைப்படினுங் கண்கலங்கார் துன்பத்தால்
தெள்ளறிவான் ஞானநிலை தேர்மூவர்—துள்ளும்
மனமாளத் தம்வடிவை மாவெளியாக் கண்டு
சினமாண் டிருப்பார் சிறந்து. (௪கூ0)

கண்ணுள்ளே செம்மைநிறங் காணிற் கடுகளவா
மண்ணுலகோர் சால வருந்துவார்—நண்ணி
மயிர்முனையிற் பாதி மனத்தலைவு தோன்றின்
அயருறுவார் மெய்காண்பா ராய்ந்து. (௪கூக)

இரும்பையும் பொன்னையு மென்றுமொன்றாக் காண்பார்
துரும்பா நினைப்பர் சுவர்க்கம்—இரும்புமன
எண்ணமெலாம் போக்கி யிருப்பார் சுகநிலையில்
திண்ணியசீ வன்முத்தர் தேர்ந்து. (௪கூ௨)

அரசாட்சி செய்திடுவா ரையமெடுத் துண்பார்
திரசீவ முத்தராந் தீரர்—திரஞானம்
இல்லாதா ரீதறியா ரீதெல்லாங் கட்டென்பார்
பொல்லாங்கே செய்வார் புகைந்து. (௪கூ௩)

நல்லார்பொய் யென்றறிவார் ஞாலமா மாயையினை
பொல்லார்மெய் யென்று புகன்றலைவார்—நல்லாரோ
சாலவித்தை யாக்காண்பார் சாலக்கூத் தாடிநிற்பார்
மாலணுவுஞ் சாரார் மருண்டு. (௪கூ௪)

உலகப்பாழ் சீவப்பா ழோதுசிவப் பாழென்
றிலகுபாழ் மூன்றா விசைப்பர்—மலமற்றார்
முப்பாழு நீக்கு முறைமை யறிவாயேல்
அப்பாவா நந்தமா வாய். (௪கூ௫)

செகசீவ னேடுபரஞ் செவ்வேபா மூக்க
அகமுகநாட் டத்தா ரறிவர்—சுகவடிவா
உற்றிருப்பா ராதலினு லுத்தமனே யந்நாட்டம்
பற்றி யிருக்கப் பழகு. (௪௯௬)

இந்து மதமொன்றே யிந்நெறியை நன்குரைக்கும்
எந்த மதமு மிதற்கொவ்வா—திந்துமதம்
எம்மதத்தார் கோளு மிணங்கா தெனக்காட்டிச்
சம்மதிக்கத் தானுக்குந் தான். (௪௯௭)

காலங் கடந்தமதங் கற்பகத்தை யொத்தமதம்
ஞாலமுய நாத னவின்றமதம்—கோலம்
சிறந்தபர ஞானிகளுந் தேர்ந்தமத மாகும்
திறம்பிறழா விந்துமதந் தேர். (௪௯௮)

இந்து மதந்தா னிறப்புப் பிறப்பின்றிச்
சந்ததமு மின்புருவாத் தங்குகின்ற—நிந்தையிலா
முத்திக்குச் சாதனமா முந்தொளிரு ஞானநிலை
வித்தகமாக் கூட்டும் விரைந்து. (௪௯௯)

போத வுபநிடதம் பொற்பார்நற் கீதையொப்ப
நாதனென் றன் கோமா னவின்றதனை—நீதமுடன்
சொற்றே னறிவாஞ் சுடர்விளக்காற் கண்டெவரும்
உற்றுச் சுகமடைக வோர்ந்து. (௫00)

## வாழ்த்து.

நாரா யணனுமவ னற்கீதை யையன்பாப்
பாரா யணஞ்செய்யும் பான்மையரும்—சோராது
நாலா யிரநூலை நாடோறு மோதுநரும்
மேலாக வாழி மிளிர்ந்து. (௧)

பத்தர்களும் வாழிசகப் பற்றற்ற ரும்வாழி
சித்தர்களும் வாழிசிவ சிங்மயமாம்—முத்தியுற
வந்தவர்க ளும்வாழி வையமளந் தோனடியார்
சந்ததமும் வாழி தழைந்து. (௨)

வாழியிந்த்ர பீடமதில் வந்த மரபினர்கள்
வாழிகர பாத்திரரும் வையகமும்—வாழிநல
இந்நூலும் வாழிமற் றேந்தையையாக் கண்ணமலர்
எந்நாளும் வாழி யினிது. (௩)

அறிவுநிலை விளக்கம் முற்றிற்று.

பாயிரம் வாழ்த்துட்படச் செய்யுட்டொகை ௫௧௯.

57174





| | | | |
|---|---|---|---|
| 1. குருஸ்தவம் | . | .... | |
| 2. போத விளக்கம் .... | .... | | |
| 3. சொரூபாநந்த விளக்கம் | .... | .... | 1 |
| 4. அநுபவாநந்த விளக்கம் | .... | .... | 1 |
| 5. சாமி விளக்கம் .... | .... | .... | 1 |
| 6. திருவள்ளுவர் தோத்திர விளக்கம் | .... | .... | 1 |
| 7. கற்புவிளக்கம் .... | .... | .... | 3 |
| 8. அன்னதானவிளக்கம் | .... | .... | 2 |
| 9. கருணை விளக்கம் .... | .... | .... | 2 |
| 10. நன்மதி தீபம் .... | .... | .... | 4 |
| 11. விபூதி விளக்கம் .... | .... | .... | 4 |
| 12. ஞானசார விளக்கம் .... | .... | .... | 1 |
| 13. துறவு நிலை விளக்கம்.... | .... | .... | 4 |
| 14. இல்லற வொழுக்க விளக்கம் | .... | .... | 4 |
| 15. அறிவு நிலை விளக்கம்.... | .... | .... | 4 |

ஷை விளக்கங்களும் தீபமும்: அரியபெரிய தத்துவ ஆராய்ச்சிகளையும், நீதிகளையும், பல வித்வான்களின் அபிப்பிராயங்களை ும் பெற்று, வெகுஜன சமுகத்தில் புலவர் பலரால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டனவாம்;

இந்நூல்களின் விக்கிரயப் பொருள், இந்நூல்களின் ஆசிரியர் நடாத்தும் ஸ்ரீ. ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளின் குருபூஜை கைங்கரியத்திற்கே உபயோகிக்கப்படுவதால், இவற்றை யாவரும் வாங்கிப் பெரும் புண்ணியத்திற் காளாவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றனன்.

## புத்தகங் கிடைக்கும் இடங்கள்.

1. ரிப்பன் பிரஸ், சென்னை.
2. ஸ்ரீமத். ஞாநாநந்த மணவாள முனிவர் அவர்கள்,
   ஸ்ரீ. சாது நாராயண தேசிகர் மடாலயம்,
   தண்டையார்ப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகே,
   திருவொற்றியூர் ஐரோட், சென்னை.
3. ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியார் அவர்கள்,
   வேதாந்த சங்கம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
4. தே. அ. சாமிகுப்புசாமியவர்கள்,
   36, ஸ்ரீ, சச்சிதாநந்த சங்கத்தலைவர்,
   வெங்கடேச பத்தன் வீதி, பெருமாள்பேட்டை,
   வேப்பேரி போஸ்டு, சென்னை.

இங்ஙனம்,

...ர், காளத்தி. இ. சிதம்பரசாமி பாண்டியர்

8, மணியக்கார செளல்ட்ரி ரோட்,

வண்ணாரப்பேட்டை போஸ்டு, சே...